Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆவணி 13- ஆம் நாள். ஸபர் பிறை 23 (29-8-59) சனிக்கிழமை இதழ் 30.

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

**கணேசன் ஸ்ரோர்ஸ்**

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு இரு புதிய மண்டையிடிகள்

## நில மந்திரி திடீர் சுகவீனம்: உள்நாட்டு அமைச்சர் மீது 'நம்பிக்கையில்லை'

### இந்த அரசாங்கம் இனி நீடிக்க முடியுமா? எந்தச் சமயமும் எதுவும் ஏற்படலாம்.

— நமது அரசியல் நிருபர் —

நிலமந்திரி ஸி. பி. டி. ஸில்வா திடீரென நோய்வாய்ப்பட்டதால், பண்டார நாயக்காவின் மந்திரிசபை மேலும் பலவீனமடைந்துவிட்டது.

மந்திரி சபைக்கு இரு தூண்கள் என்று கருதப்படுபவர்கள் நிதிமந்திரி சொய்ஸாவும், நில மந்திரி ஸில்வாவும்தான். அதில் ஒருதூண் எதிர்பாராத முறையிலே ஆட்டங்கண்டுவிட்டது. அவருக்கு வலதுபுறம் பக்கவாதம் கண்டுள்ளதாயும், அவர் குறைந்தது மூன்றுமாத காலமாவது ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. இது பிரதமருக்கு அதிக கவலை அளித்திருக்கின்றது.

ஏற்கெனவே அரசாங்கக் கட்சியின் பலம் இரண்டொரு வாக்குக்களில் ஊசலாடுகிறது.


உள் நாட்டு மந்திரி இலங்கரத்ன மீது, கைதி கொலுகல்லே தப்பியது சம்பந்தமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அடுத்தமாதம் அது விவாதத்துக்கு வருகிறது. உள் நாட்டு மந்திரியை அரசாங்கக் கட்சியிலுள்ள சிலருக்கும் பிடிக்கவில்லை என்றும், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அவர்கள் எதிர்க்காமல் இருந்துவிடலாமென்றும், சில பத்திரிகைகளில் அரசியல் சோதிடங்கள் கூறப்படுகின்றன; இத் தீர்மானத்தில் அவர் பிழைத்தாலும் கூட, மந்திரி சபைக்கு இது பெரிய தலை இடியாகும்.

இந்தியாவிலே உணவு விலை ஏறிவிட்டதைப் பலரும் கண்டிப்பதைக் கருதி அங்கு உணவு மந்திரி ஜெயின் தாமாக ராஜினமாச் செய்துள்ளார். அரியலூர் ரயில்விபத்து காரணமாக ரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி தமது பதவியைத் துறந்தார். ஆனால் இலங்கையிலோ, ஒரு மந்திரி தலையிட்டு விசேஷ சலுகை காட்டிய ஒரு கைதி, தப்பி ஓடி விட்டார். என்றாலும் சிறைக்காவலாளி தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தப்பிய கைதியைத் தேடிப்பிடிக்க தீவிரமுயற்சிகள் செய்யப்படுகின்றனவாம். ஆனால் மந்திரியின் ராஜினமாவைப்பற்றி பேச்சு மூச்சு இல்லை. இந்தியாவுடன், இலங்கையை ஒப்பிட்டு, பொது மக்கள் பேசுகின்றார்கள். பார்லிமெண்டில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேருவிடினும், பொது மக்களின் நம்பிக்கையை மந்திரி பெரிதும் இழந்துள்ளார். இவர் நீடித்து மந்திரி சபையில் இருப்பது, இம் மந்திரி சபைக்கு, பலத்தை விடப் பலவீனமென்றே கருதப்படுகின்றது. அவர் ராஜினமாச் செய்யாவிடில், அடுத்த தேர்தலில் அரசியல் எதிரிகள் இதைப் பெரிதும் பயன் படுத்தி சுதந்திரக் கட்சியைத் தாக்கக் கூடும்.

இதை யெல்லாம் பிரதமர் பண்டாரநாயக்கா உணர்ந்திருந்தும் இலங்கரத்தினவை நீக்கினல், அரசாங்கத்தின் ஆயுளுக்கே ஆபத்தென்று கருதி, சும்மா இருக்கிருர் போலும்.

இச் சமயத்தில் அடிமேல் அடி விழுந்தது போல் நில மந்திரி சில்வா திடீரென, மந்திரிகளின் கூட்டம் நடக்கையிலேயே மூர்ச்சையாகி விழுந்து விட்டார். இது மந்திரி சபையின் நிலையிலே, மின்னமல் இடி விழுந்தது போல் ஆகும்.

என்றாலும் இந்தச் சோதனையையும், பிரதமர் ஒரு விதமாகச் சமாளித்து, ஆட்சியை நடாத்திச் செல்லலாமென்றும் நிலைமைமிகப்பலவீனமாயினும், அரசாங்கத்தின் ஆயுளுக்கு ஆபத்தில்லாமல் அவர் சாமர்த்தியமாக இழுத்துக் கொண்டு போவாரென்றும் கருதப்படுகிறது. எந்தச் சமயமும் எதுவும் ஏற்படலாம்.




சைக்கிள் ஹான்டிலை விட்டு இறங்கி ஓடிக்கொண்டும, ஓடிக் கொண்டே குளித்தும் யாழ்ப்பாண மக்களை அதிசயத்தில் ஆழ்த்திய சைக்கிள் வீரன் வலம்புரி.

## கைப்பணி விருத்தியே நாட்டின் முக்கிய தேவை

யாழ்ப்பாணம்

'கைப்பணி விருத்தியே நம் நாட்டின் இன்றைய முக்கிய தேவையாகும். இத்துறையில் கலையாசிரியர்கள் ஆர்வத்துடன் உழைக்க வேண்டியவர்களாகின்றனர். அத்துடன் இவர்கள் கலையம்சம் வாய்ந்த பொருள்களைத் தயார் செய்யவேண்டும். இவ்வாறு சென்ற செவ்வாய்க்கிழமை சென் ஜோன்ஸ்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட, கலையாசிரியர்களுக்கான புனர் ஊக்கப் பயிற்சிவகுப்பைத்திறந்துவைத்துப் பேசிய வடபகுதிகல்விஅதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் தமது உரையிற் குறிப்பிட்டார். திரு. எஸ். யு. சோமசேகரம் மேலும் பேசுகையில் கூறியதாவது. "பாரத நாட்டில் கலை வளர்ச்சியுற்று வருகின்றது. நாமும் பாரதத்தைப்போல் கலைத்துறையில் முன்னேற்றமடைய வேண்டுமாயின், தீவிரமாக உழைக்க வேண்டும்."

ந. நி.




**Wolseley Pumps**

**"வூல்ஸிலி" பம்புகள்**

தோட்டக்காரர்களினல் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினல் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

**ஓட்டோஸ் லிமிட்டெட்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்.

# இலங்கை – இந்தியா பிரயாணத்துக்கு மற்ருேர் புதிய இம்சை

## மூன்று நாள் மட்டும் கப்பல் விடுவதென்ற தீர்மானத்தை உடன் மாற்ற வேண்டும்

### இலங்கையில் குதிரைப் பந்தயம் இனி நின்றுவிடுமா?

— நமது கொழும்பு நிருபர் —

இலங்கையில் குதிரைப் பந்தயம் சீக்கிரத்தில் நிறுத்தப் பட்டுவிடுமா? இதை நிறுத்திவிட வேண்டுமென்று ஏற்கனவே பௌத்த கமிஷன் சிபார்சு செய்துள்ளது. அந்தக் கமிஷனின் யோசனைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதாக வாக்களித்துள்ள எம். ஈ. பி கட்சி, இப்போது அச் செயலில் தீவிரமாக மூனைந்துள்ளது.

மூன்று வருஷ காலம் கழித்து இப்போது திடீரென இதில் உள்நாட்டு மந்திரி முனைவானேன்? இதுபற்றி பல பல விஷயங்கள் பார்லிமெண்ட் விவாதத்தின்போது அம்பலமாயின. சில குப்பைகள் கிளப்பப்பட்டு நாற்றமுமெடுத்தது.

சில வாரங்களுக்கு முன் கொழும்பு குதிரைப் பந்தய மைதானத்தில் ஒரு தீர்ப்புவிஷயமாகக் கலவரம் ஏற்பட்டதே இதற்கு மூல காரணமென்று சொல்லப்படுகிறது. அது பெரிய இடத்து சமாச்சாரம்.

இதுவரை குதிரைப் பந்தய கிளப்பின் போஷகராக இருந்து வந்த கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர்குணத்திலகா, இனி போஷகராக இருக்க முடியாதென்று தெரிவித்ததுடன், தம் பெயரில் ஒரு பந்தயமும் நடத்தக் கூடாதென்று சொல்லிவிட்டார். இதனல் "சேர் ஒலிவரின் கப்பை", "ஆர்.எல். பெரேரா" கப்பாக மாற்றிவிட்டார்கள்.

இப்போது குதிரைப் பந்தயத்தையே நிறுத்தி விடலாமென்ற யோசனை வந்திருக்கின்றது. குதிரைப் பந்தயம் ஒரு சூதாட்டமே என்றாலும் இதை நிறுத்தினல் வேறு வித சூதாட்டங்கள் கிளம்புமென்றும், இப்போது அங்கு வேலை பார்க்கும் நூற்றுக் கணக்கான ஏழை மக்களுக்கு, மாற்று வேலைகளை அளிக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

* * *

தலைமன்னருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே தென் இந்திய ரயில்வே நடாத்தும் கப்பல் சேவையை, வருகிற ஒக்டோபர் மாதம் முதல், வாரம் மூன்றே நாள் நடத்துவதென்று செய்யப்பட்டுள்ள தீர்மானத்தைக் கேட்டு, இலங்கை இந்திய வட்டாரம் பெரும் ஏமாற்றமடைந்துள்ளது.

இந்தியா — இலங்கை பிரயாணத்துக்கு ஏற்கெனவே பல வித கெடுபிடி கட்டுப்பாடுகள். விமானப் பிரயாணத்துக்கும் பர்மிட் முறை. ரயில் மார்க்

(9 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள அச்சுக்கூடம் ஒன்றுக்குப் புத்தகம் கட்டுவதில் போதிய அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. தோல் உபயோகித்துக் கட்டும் (லெதர் பைன்டிங்) திறமை அவருக்கு இருப்பின் அது விரும்பத்தக்கது. விண்ணப்பம் செய்க: 'பைண்டர்', தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

---

### தேவை

யாழ்ப்பாணத்திற் பத்திரிகை வெளியிடும் அச்சுக்கூடமொன்றுக்கு ஸிலின்டர் இயந்திரம் இயக்குவதில் (ஸிலின்டர் மெஷின் மைன்டர்) அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. தகுதி, அனுபவம் பற்றிய விபரங்களுடன் மனுச்செய்க: 'ஸிலின்டர்' தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.

---

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

---

### முக்கிய அறிவித்தல்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பல சரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கு எம்மிடம் கலந்தாலோசியுங்கள். எவ்வித முற்பணமும் இன்றி, உங்களுக்குச் சிரமமுமின்றி வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம். விபரங்கட்கு, எம். ஏ. டோசாஜீ அன் கோ, 136, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் (போன் 459).

---

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா**
**கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.


## இலங்கை முழுவதிலும் சாகித்திய தினம் கொண்டாட ஏற்பாடு

இவ்வாண்டு செப்டம்பர் மாதம் ஏழாம் திகதியை (7-9-59) இலங்கையிலுள்ள எல்லாப் பகுதிகளும் சாகித்திய தினமாகக் கொண்டாட வேண்டுமென்று கலாச்சார அமைச்சர் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். இந்த இலக்கியக் கலைவிழாவையொட்டி நாடு முழுவதிலும் இத்தினத்தில் கலைக்காட்சிகளும், நாடகங்களும், கதை கட்டுரைப் போட்டிகளும், விரிவுரைகளும், கலை அபிவிருத்தி சம்பந்தமான வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகி நடைபெறும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த விழாவைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை மேற்பார்வை செய்வதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குப் பின் வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தலைவர்; திரு. ம. ஸ்ரீகாந்தா, உபதலைவர்: திரு. த. துரையப்பா, கலாச்சாரப்பகுதி: தலைவர் திரு. எஸ். யு. சோமசேகரம்: நாட்டுப் பாடல்கள்: தலைவர் திரு. இ. பி. இராசையா, கைப்பணி: தலைவர் திரு. வி. என். செல்வரத்தினம், ஓவியம் சிற்பப்பகுதி: கலைப்புலவர் க. நவரத்தினம், நாடகம்: கலையரசு சொர்ணலிங்கம், நடனம் சங்கீதம்: செல்வி ரீ. மதியாபரணம்.

## பண்டிதமணிக்குப் பாராட்டு விழா

### திருநெல்வேலி: மட்டுவில்: யாழ்ப்பாணம் நிகழ்ச்சிகள்

சைவத் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்குப் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள பாராட்டு விழா 29, 30-8-59 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

**முதல்நாள்**

29-8-59 சனிக்கிழமை நிகழ்ச்சிகள் திருநெல்வேலி சைவவித்தியாசாலையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். நீதிபதி திரு. சி. தம்பித்துரை தலைமைவகிப்பார். நீதிபதி பி. ஸ்ரீஸ்கந்தராசா, பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை, திரு. அ. வி. மயில்வாகனம், திரு. ச. அம்பிகைபாகன் ஆகியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள். பண்டிதமணியின் படத்தைத் தலைவர் திறந்துவைப்பார்.

**மாலை**

அன்று மாலைநிகழ்ச்சிகள் திரு. ச. சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும். திரு. த. இராமநாதபிள்ளை, பண்டிதர் சோ. இளமுருகனார், பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம், திரு. கி. இலட்சுமணன் ஆகியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள். இசைப்புலவர் சி. செல்லத்துரை பாராட்டுப் பாக்களைப் படிப்பார்.

**இரண்டாம் நாள்**

**காலை:** 30-8-59 ஞாயிற்றுக் கிழமை காலை 3மணிக்கு திரு. வி. குமாரசாமி தலைமையில் மட்டுவில் 'பண்டிதமணி மண்டப'த் திறப்புவிழா நடைபெறும். மாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா மண்டபத்தைத் திறந்துவைப்பார். வித்துவான் வெ. சண்முகம், மாகாண அதிபர், செல்வி பிரபாவதி மகாலிங்கசிவம், திரு. க. சுப்பிரமணியம், வித்துவான் பொன் முத்துக்குமாரன் ஆகியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

**மாலை:**

அன்று மாலை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் பேராசிரியர் க. ச. அருள்நந்தியின் தலைமையில் நடைபெறும். வழக்கறிஞர் நம. சிவப்பிரகாசம், வித்துவான் க. வேந்தனார், மேயர் ஏ. தங்கராசா துரையப்பா, நியாயவாதி மு. பாலசுந்தரம், முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோர் பாராட்டுரைகள் வழங்குவார்கள். இந்நிகழ்ச்சிகளின் போது பண்டிதமணியும் பேசுவார்.

## பயனற்றகல்வித்திட்டம் நாட்டுக்கு உதவாது

### தமிழர் எதிர்காலம் பற்றிக் கல்வி அதிகாரியின் கவலை

**கோப்பாய்** சரவணபவானந்த வித்தியாசாலையில் அண்மையிலே நடைபெற்ற பெற்றோர் தின வைபவத்திற் பேசிய திரு. எம். வைத்தியலிங்கம், ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்னும் முதுமொழியின் உண்மையைக் கல்வி அதிகாரிகள் இன்னும் உணராதிருப்பது ஆச்சரியம் என்றும், வேலையில்லாமல் தவிப்போரின் தொகையை அதிகரிப்பதே இக்காலப் படிப்பின் பெறுபேறு என்றும், பொருளாதார முன்னேற்றத்துக்குப் பயன்படாத கல்வித்திட்டம் உதவாதெனவும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "ஒருநாளில் கால் பங்கு நேரம் மாத்திரம் பாடசாலையில் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளும் சிறுவன், முக்கால்வாசி நேரத்தைப் பெற்றோருடனும், சமுதாயத்தினருடனும் செலவிடும் போது அவன் இந்த நற்சாதனைகளுக்கு மாறான செயல்களிலும், சம்பாஷணைகளிலும் ஈடுபடுவானாகில் அவன் சீர்சிறப்புள்ள உத்தமமான பிரசையாய் எங்ஙனம் வர முடியும்? எனவே, பெற்றோர் தமது பொறுப்பை நன்குணர்ந்து ஆவன செய்யவேண்டும்."

**எதிர்காலம் என்ன?**

இவ்விழாவுக்குத் தலைமை வகித்த வடபகுதி கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் கூறியதாவது: "எங்கள் சமூகத்தின் எதிர்கால சுபிட்சத்தைப்பற்றி நாம் ஏனோதானோவென்றிருப்போமானால், எமது பிற்சந்ததியாருக்குப்பாதகம் செய்பவராகுவோம். இதை செவ்வனே உணரும் தமிழ்ப் பெரியார்கள் ஒன்றுகூடிப் பல வகையிலும் தமிழினம் சிறப்புறுவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்."

பாடசாலை முகாமைக்காரர் திரு. ஸி. சுப்பிரமணியம், ஆசிரியர் திரு. கே. இ. குமாரசுவாமி ஆகியோரும் பேசினர். சிறுவரின் கதம்பக் கச்சேரியும் நடைபெற்றது.

## யாழ்ப்பாணத்தில் தொழில் நுட்பக் கலாசாலை

'என்ஜினியறிங் அன்ட் இன்டஸ்றியல் கம்பெனி'யின் ஆதரவில் யாழ்ப்பாணம், சுண்டிக்குளியிலுள்ள "சிற்றடல்" என்னும் கட்டிடத்தில் சென்ற வாரம் தொழில் நுட்பக் கலாசாலையொன்று திறக்கப்பட்டுள்ளது. கம்பனியின் பங்காளரும் மாணவர்களுமே திறப்பு விழாவில் பங்குபற்றினர். டக்டர் எஸ். சுப்பிரமணியம் (பி. எஸ்.) இக்கலாசாலையைத் திறந்து வைத்தார். இக்கல்லூரியில் ஆங்கில மொழியே போதனா மொழியாக இருக்கும். இங்கு பொறியியல் வர்த்தகம் போன்ற பரீட்சைகளுக்கும் வேறு காரியதரிசி பரீட்சைகளுக்தும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். இதுவரை 75 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். விக்டர் கே. இராசையா இக்கலாசாலையின் அதிபராவர். திரு. ரீ. சிவலிங்கம் செயலாளராகப் பணியாற்றுகிறார். திரு. எம் வைரமுத்து கம்பெனியின் அதிகாரக் குழுவின் தலைவராவர்.

# இழந்த உரிமைகளைப் பெற்றே தீருவோம்

### கலகா மாவட்டக் கூட்டத்தில் திரு.தொண்டமான் முழக்கம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலகா மாவட்டத்தைச் சேர்ந்த மூள்ளோயா, கட்டுக்கொலை, லூல் கந்துலா தோட்டங்களில் சென்ற ஞாயிற்றுக் கிழமை ஜில்லாத் தலைவர் திரு. என். எம். பழனிச்சாமி தலைமையில் இ. தொ. காங்கிரஸ் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பேசியதாவது:

இலங்கையை மதிப்புமிக்க நாடாக ஆக்கித்தந்த இந்திய பரம்பரையினருக்கும் ஏனையோருக்கும் வழங்கப் படுவது போன்ற எல்லாவித உரிமைகளையும் நம் சக்தியினால், பெற்றே தீருவோம். இழந்த உரிமைகளைப்பெறுவதற்கு நாம் யாரையும்போய் பிச்சை கேட்க வேண்டியதில்லை. நாங்களும் இந்நாட்டு மக்களே. எங்களுக்கும் எல்லா உரிமைகளும் அளித்தேயாக வேண்டும்.

இக்கூட்டங்களிலே இ. தொ. காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. எஸ். சோமசுந்தரம், மாவட்ட பிரதிநிதி திரு. பி. கே. எம். ராஜமணி, ஜில்லா உப தலைவர் திரு. ஓ. காளிமுத்து, ஜில்லா காரியதரிசி திரு. ராஜு ஆகியோரும் பேசினர்.

**தேர்தல் கூட்டம்**

கலகா மாவட்டத் தேர்தல் கூட்டம், தேர்தல் அதிகாரி திரு. ஏ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. என். எம். பழனிச்சாமி, தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சென்ற 20 வருடங்களில் 17 முறை ஜில்லாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. ஓ. காளிமுத்து, உப தலைவராகவும், திரு. எஸ். ராஜு காரியதரிசியாகவும், திரு. ந. செல்லையா, பொக்கிஷதாரராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.


**கலாநிலையப் பதிப்பகம்**

**தினக்குறிப்பு**
**1960**

**1960ஆம் ஆண்டுக்குரிய புதிய தினக்குறிப்புகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.**

எமது தினக்குறிப்புடன், மாணவர்களுக்கென பிரத்தியேகமான தினக்குறிப்பையும் வெளியிடுகின்றோம்.

**எமது தினக்குறிப்பின் விலை வழக்கம்போல்**
**75 சதம் தான்**

விபரங்களுக்கு:- **தினக்குறிப்பு 1960,**
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டவும்

மனேஜர் :
**கலாநிலையப் பதிப்பகம்**
த. பெ. எண் : 49.
**சிவன் கோவில் மேலைவீதி,**
**யாழ்ப்பாணம்,** : : [இலங்கை.]

1960ஆம் ஆண்டு பொது/மாணவர்களுக்கான தினக்குறிப்பில் ...........பிரதிகளை எமது பெயரில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இத்துடன் முற்பணமாக ரூபா........... அனுப்பி வைத்துள்ளோம்.

எமது பெயரும் முகவரியும் பின்வருமாறு :

பெயர்:.............................................

முகவரி:...........................................

...........................................

# இலங்கையின் பத்தாண்டுத் திட்டம் எதிர்பார்க்கும் அளவு வெற்றியீட்டுமா?

கு. நா.

மூன்று வருட முயற்சிக்குப் பின் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு பத்து வருடத் திட்டமொன்றை இன்றைய இலங்கை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இப் பத்து வருடத் திட்டம் இலங்கையின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு எவ்வளவு தூரம் உதவி புரியும் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் இன்று நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்கூடியளவு குறைத்தல், தேசிய வருவாயைப் பெருகச் செய்தல், வளர்ந்துகொண்டே செல்லும் வாழ்க்கைச் செலவைக்குறைத்தல், நாட்டின் வருவாயை மக்களிடையே சமமாகப் பங்கிடல், வெளிநாட்டு நிலை முதல் குறைந்து கொண்டு செல்லாமலிருக்க வழிவகுத்தல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக்கொண்டுள்ளது அரசாங்கத்தின் புதிய பத்தாண்டுத் திட்டம். ஆண்டொன்றிற்கு 2·6 வீதம் வளர்ந்து செல்லும் மக்கள் தொகைக்குத் தகுந்தவாறு பொருளாதாரம் விருத்தியடையவேண்டும். இல்லையேல் நாட்டில் வறுமைப் பிணிதான் தாண்டவமாடும். இதை உணர்ந்து திட்டக்கர்த்தாக்கள் கமத்தொழில், பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை, கைத்தொழில் முதலியவற்றை விருத்தி செய்வதற்குப் பலவழி வகைகளைத் தமது திட்டத்தில் கூறியிருக்கிறார்கள். கமத்தொழில் விருத்திக்கென வரண்ட பிரதேசங்களைப் பண்படுத்தி நெற்பயிரிடவும் புதிய நெற்சாகுபடி முறைகளைக்கையாளவும் ஆலோசனைகள் பல கூறப்படுகின்றன. புதிய முறைகளைக் கையாண்டு ஏக்கருக்கு 32 புசலுக்குப் பதிலாக 48 புசல் நெல் விளையச்செய்யலாமென்றும் காலப்போக்கில் இவை 70 புசல்வரை அதிகரிக்கப்பட முடியுமென்றும் கருதப்படுகிறது. புதிய நிலங்களைப் பண்படுத்தி நெல்விதைப்பதின் மூலம் பலருக்கு வேலை யளிக்கவும் முடியுமென்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எப்படித்தான் முயற்சி எடுப்பினும் பத்து வருடமுடிவில் கூட இலங்கையின் சுயதேவைக்குரிய நெல் முழுவதையும் உற்பத்தி செய்வதென்பது கடினமாகும். இதனைத் திட்டக் கர்த்தாக்களே உணர்ந்திருக்கின்றனர். எனவே பத்துவருட முடிவிலும் கூட நெல்லைப் பொறுத்த அளவில் நாம் ஓரளவாவது பிற நாட்டை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்படத்தான் செய்யும். முன்னைய விவசாய மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன ஐந்து வருடத்திலேயே இலங்கைக்குத் தேவையான நெல் முழுவதையும் இங்கேயே உற்பத்தி செய்ய முடியுமென்றும் அதற்கெனத் தன்னிடமுள்ள திட்டத்தையும் பகிரங்கமாக அறிமுகப்படுத்தியிருந்தார். இதை நோக்குமிடத்து திட்டத்தார் சில தவறுகளை விட்டு விட்டார்களோ என நாம் சந்தேகிக்க இடமுண்டு. விவசாய விருத்தி இன்று கீழ் நிலை அடைந்திருப்பதற்கு நிலமானியமுறையில் பல மாற்றங்கள் கொண்டுவராமலிருப்பதே பெருங் காரணமாகும். நெற்காணி மசோதா சில குறைபாடுகளை நீக்க உதவி செய்தபோதும் இன்னும் பலகுறைபாடுகள் கவனிக்கப்படாமலே கிடக்கின்றன. நெற்காணிகளைத் துண்டு துண்டாகப் பிரித்தலைக் கட்டாயமாகத் தடைசெய்ய வேண்டும். அத்துடன் விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பணவுதவியும் செய்ய வேண்டும். இவற்றின் மூலமே நெல் உற்பத்தியைப் பெருக்கலாம். புதிய முறைகளைக் கையாளுவதென்றால் இணைக்கப்பட்ட நிலங்களில் தான் இது முடியுமே தவிர, பிரிந்து துண்டு துண்டாகக் கிடக்கும் காணிகளில் இதை நடைமுறையில் கொண்டுவர முடியாது. இதைத் திட்டக் கர்த்தாக்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால் முன்னைய விவசாய மந்திரி மேற்குறிப்பிட்ட திருத்தங்களைச் செய்ய வழிவகைகள் வகுத்திருந்தார். எனவே அவர் கருதியது சில சமயம் சாத்தியமாக விருக்கலாம். விவசாய விருத்திக்கான திட்டத்தில் பத்து வருடத்திட்டக்கர்த்தாக்கள் தெரிந்தோ தெரியாமலோ சில பிழைகளைச்செய்து விட்டார்கள் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

தேயிலை, ரப்பர் மரங்களை, புனர்நடுகை, மறுசீரமைத்தல் முதலியவற்றின் மூலமும் இலங்கையின் வருவாயைப் பெருக்கவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் எனத் திட்டம் வலியுறுத்துகிறது. புனர் நடுகை, மறுசீரமைத்தல் முதலியவற்றின்மூலம் ஒரு ஏக்கருக்கு 771 இருத்தல் தேயிலை பெறுவதற்குப் பதிலாக 2000 இருத்தல் தேயிலை பெறமுடியுமென்றும், ஏக்கருக்கு 375 இருத்தல் ரப்பர் பெறுவதற்குப் பதிலாக 1,100 இருத்தல் பெறமுடியுமென்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பொருள்களுடன் தென்னை, மிளகாய், கோப்பி, வெங்காயம், உருளைக் கிழங்கு, புகையிலை முதலியவற்றின் உற்பத்தியிலும் அக்கறை செலுத்தப்பட விருக்கிறது. இவற்றில் பல பொருள்கள் 1968-ம் ஆண்டு அளவில், சுயதேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்கு உற்பத்தி செய்யப் படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

விவசாய விருத்தியுடன் குடிசைக் கைத்தொழில், கைத்தொழில் முதலிய துறைகளிலும் அபிவிருத்தி ஏற்படக் கூடியவகையில் திட்டம்வழிகள் வகுத்துள்ளது. குடிசைக் கைத்தொழில்களை விருத்தி செய்வதன் மூலம் பெருந்தொகையான மக்களுக்கு வேலை கொடுக்க முடியுமென்று கருதப்படுகிறது. அத்துடன் நாட்டின் பொருளாதார விருத்திக்கு மிகவும் அவசியமெனக்கைத்தொழில் விருத்தியும் வற்புறுத்தப் படுகிறது. பிறநாட்டிலிருந்து வரவழைக்கும் பலபொருள்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்குப் பத்து வருடத்தில் பெருமுயற்சிஎடுக்கப்படவேண்டுமென வற்புறுத்தும் திட்டம் எமது நாட்டின் கைத்தொழில் விருத்திக்கு மின்சக்திதான் உதவமுடியுமென்றும், இரும்பும், நிலக்கரியும் நாட்டில் இல்லாததால்பிரம்மாண்டமானதொழிற்சாலைகள் திறப்பது கஷ்டமான தென்றும் கூறுகிறது.

## சுயதேவைப் பூர்த்தி

மக்கள்நுகர் பொருள்கள் (Consumer goods) பலவற்றை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலம் பிறநாடுகளுக்கு எமது பணம் போகாது தடுக்கலாம். இதனால் நாட்டின் பணவருவாய் பலதிட்டங்களில் முதலீடு செய்வதற்குதவும். இதை உணர்ந்தே பத்துவருடத் திட்டக் கர்த்தாக்களும், விவசாயத்திற்கடுத்ததாக கைத்தொழில் விருத்தியில் அதிக கவனம் செலுத்தல் அவசியம் எனக் கூறுகின்றனர். சீனி, புடைவை, செயற்கை உரம் முதலிய மூன்று பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அதி முக்கியமாகத் திறக்கப்படவேண்டுமென்றும், இவற்றைவிடப் பிற சிறு சிறு தொழிற்சாலைகளும் திறக்கப்படலாமென்றும் அவ்வத் தொழிற் சாலைகள் பற்றிய விபரமான திட்டங்களுடன் விளக்கியிருக்கிறார்கள். சீனித் தொழிற்சாலை கூடிய சீக்கிரத்தில் திறக்கப்படலாம். காலப்போக்கில் இலங்கைக்குத் தேவையான முழுச் சீனியையும் இங்கே உற்பத்தி செய்ய இடமுண்டு. இதேபோல் புடைவையும், செயற்கை உரமும் பெரும்பாலும் சுயதேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்கு உற்பத்தி செய்யப்பட முடியும். கைத்தொழில் விருத்திக்கு அரசாங்க ஆதரவு மிக முக்கியம். எனவே,கைத்தொழில் விருத்தியில் அரசாங்கம் அக்கறை காட்டுவதுடன் சுதேசிப் பொருள்களுக்கும் பாதுகாப்பு அளிப்பது அவசியம். இது திட்டத்திலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மீன்பிடித் தொழில் விருத்தியும் கைத்தொழில் விருத்தியைப் போன்ற முக்கியமானதால் அதன் ஆக்கத்திற்கும் வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் புதிய தேர்தல் தொகுதிகள்

## முஸ்லிம்களுக்கு மூன்று இரட்டைத் தொகுதிகள்

— வ. மகாதேவன் —

ஈழநாடு 2-5-59 இதழில் "அரசியல் அவதானி" என்ற புனைப்பெயரில் "தேர்தல் தொகுதிகள் நிர்ணயம்; இலங்கையில் கையாளப்படும் விதிமுறைகள்" என்ற கட்டுரை வெளியாயிற்று. இக் கட்டுரையில் எதிர்பார்த்த விபரப்படியே தேர்தல் தொகுதிகள் ஏறக்குறைய முற்றுக நிர்ணயமாகி இருக்கின்றன. இலங்கை 150 அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கு தொகுதிகளாக பிரிக்கப்படும்என நான் அக்கட்டுரையிற் குறிப்பிட்டிருந்தேன். சப்பிரகமுவா மாகாணத்திற்கு ஒருதொகுதியை மேலதிகமாகச் சேர்த்து தொகுதி நிர்ணயக் குழுவினர் இலங்கையை 151 அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் 145 தேர்தல் தொகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர்.

மாகாண ரீதியாகத் தொகுதிகளின் எண்ணிக்கை 1946-ம் வருட நிர்ணயத்தின் படியும் 1959-ம் வருட நிர்ணயத்தின் படியும் பின்வருமாறு:

| மாகாணம் | 1946 நிர்ணயப்படி | 1959 நிர்ணயப்படி |
|---|---|---|
| மேல் மாகாணம் | 18 | 32 |
| மத்திய மாகாணம் | 14 | 22 |
| தென் மாகாணம் | 11 | 19 |
| வட மேல் மாகாணம் | 10 | 16 |
| சப்பிரகமுவா மாகாணம் | 9 | 16 |
| வட மாகாணம் | 9 | 13 |
| ஊவா மாகாணம் | 6 | 10 |
| கீழ் மாகாணம் | 7 | 9 |
| வட மத்திய மாகாணம் | 5 | 8 |
| மொத்தம் | 89 | 145 |

மாகாண ரீதியாக தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு:

| மாகாணம் | 1946 நிர்ணயப்படி | 1959 நிர்ணயப்படி |
|---|---|---|
| மேல் மாகாணம் | 20 | 35 |
| மத்திய மாகாணம் | 16 | 23 |
| தென் மாகாணம் | 12 | 19 |
| வட மேல் மாகாணம் | 10 | 16 |
| சப்பிரகமுவா மாகாணம் | 9 | 16 |
| வட மாகாணம் | 9 | 13 |
| கீழ் மாகாணம் | 7 | 11 |
| ஊவா மாகாணம் | 7 | 10 |
| வட மத்திய மாகாணம் | 5 | 8 |
| மொத்தம் | 95 | 151 |

### பல அங்கத்தவர் தொகுதிகள்

1946இல் பின்வரும் பல அங்கத்தவர் தொகுதிகள் அமைக்கப்பட்டன.

(1) மத்திய கொழும்பு — 3 அங்கத்தவர் தொகுதி.

(2) அம்பலாங்கொடை பலப்பிட்டி—இரட்டை அங்கத்தவர் தொகுதி.

(3) கடுகன்னுவை — இரட்டை அங்கத்தவர் தொகுதி.

(4) பலாங்கொடை — இரட்டை அங்கத்தவர் தொகுதி.

(5) பதுளை—இரட்டை அங்கத்தவர் தொகுதி.

சிறுபான்மையோருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் நோக்கத்துடனேயே ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் பல அங்கத்தவர் தொகுதிகள் வகுக்கப்படுகின்றன. நிர்ணயக் குழுவினரின் நோக்கங்கள் சில சமயங்களில் நிறைவேருமல் போய் விடுவதுண்டு. பலாங்கொடை, வதுளை ஆகிய இரட்டைத் தொகுதிகள் இந்திய மக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக அமைக்கப்பட்டவை. 1947ல் நிகழ்ந்த பொதுத் தேர்தலில் வதுளையில் ஒரு இந்திய மக்களின் பிரதிநிதி வெற்றி பெற்றுர். பலாங்கொடையில் ஓர் இந்தியரும் தெரிவு செய்யப்படவில்லை. இந்தியரின் பிரஜாவுரிமை பறிபோனதும் இத்தொகுதிகளில் 1952இலும் 1956இலும் பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளே தெரிவு செய்யப்பட்டனர். மத்திய கொழும்புத் தொகுதியில் எதிர்பார்த்தபடி ஒரு தமிழ் அங்கத்தவராவது கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் வெற்றி பெறவில்லை. கடுகன்னுவையில் 1952இலும் 1956இலும் ஒரு முஸ்லிம் தெரிவு செய்யப்பட்டார். மத்திய கொழும்பில் இரு முஸ்லிம்கள் 1952 இல் தெரிவு செய்யப்பட்டனர்; 1947இலும் 1956இலும் ஒரு முஸ்லிம் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது தொகுதி நிர்ணயக்குழுவினர் மத்திய கொழும்பைத் தொடர்ந்து மூன்று அங்கத்தவர் தொகுதியாக இருக்கச் செய்து முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் நோக்கத்துடன் மத்திய மாகாணத்தில் அக்குரான என்ற ஒரு புதிய இரட்டை அங்கத்தவர் தொகுதியையும், கீழ் மாகாணத்தில் மட்டக்களப்பையும் மூதூரையும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளாகவும் வகுத்துள்ளனர். தொகுதி நிர்ணயக் குழுவினரின் விபரமான அறிக்கை இன்னும் வெளிவரவில்லை. புதிய தெற்குக்கொழும்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி தமிழருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் நோக்கத்துடன் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

### தமிழ் அங்கத்தினர்

வட மாகாணத்தில் நல்லூர், உடுப்பிட்டி, உடுவில் கிளிநொச்சி என நான்கு புதிய தேர்தல் தொகுதிகளும் கீழ் மாகாணத்தில் அம்பாறை, நிந்தாவூர் என இரண்டு புதிய தேர்தல் தொகுதிகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த பொதுத் தேர்தலில் கீழ் மாகாணத்தில் அம்பாறையிலிருந்து ஒரு சிங்களவரும் ஏனைய தொகுதிகளிலிருந்து ஐந்து தமிழரும் ஐந்து முஸ்லிம்களும் தெரிவு செய்யப்படுவார்கள் என தொகுதி நிர்ணயக் குழு எதிர்பார்க்கின்றது.

எனவே, வட மாகாணத்திலிருந்து 13 தமிழர்களும், கீழ் மாகாணத்தில் இருந்து 5 தமிழர்களும் ஏனைய மாகாணங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு தமிழர்களும் தெரிவு செய்யப்பட்டால் அடுத்த பாராளுமன்றத்தில் 19 அல்லது 20 தமிழர்களே அங்கத்துவம் வகிப்பார்கள் என எதிர்பார்க்கலாம். இப்போதைய பாராளுமன்றத்தில் 12 தமிழர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

வட மாகாணம் கீழ் மாகாணம் ஆகியவற்றின் புதிய தேர்தல் தொகுதிகளைப்பற்றி இனி வருங் கட்டுரைகளில் விபரமாக ஆராய்வோம்.

சிறுகதை

# “நான் இருக்கிறேன்”

ரா. ஆறுமுகம்

“என்னங்க கவுண்டரய்யா, ரொம்ப தூரமோ?” என்ற சத்தம் கேட்டு, ‘இது யாரடா அபசகுனம் மாதிரி’ என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்தார் கருப்பண கவுண்டர்.

“ரயிலடிக்குத்தானே போறீங்க. நானும் அங்கேதான் வர்றேன்” என்று சொல்லிக் கொண்டே பக்கத்தில் நடந்து வந்தான் ஒரு வாலிபன்.

“அடடே, தம்பிராமசாமியா? எங்கேப்பா உன்னைக் கண்ணிலேயே காணுறதில்லே? இப்ப என்ன, உத்தியோகத்திலேயா இருக்கே?”என்று விசாரித்தார் கவுண்டர்.

“ஆமங்க, மதுரையிலே தபால் ஆபிசிலே இருக்கிறேன். இங்கேதான் எங்கப்பா, அம்மா எல்லாம் இருக்காங்க, மாதம் ஒருதடவை வந்து பாத்திட்டுப் போறது”. என்று பேசிக்கொண்டே நடந்தான்.

“ஓஹோ, மதுரையில் தனியாத்தான் இருக்கியா? இன்னும் உனக்குக் கல்யாணம்...”

“ஆகலேங்க. இப்ப அங்கே ஹோட்டல்லேதான் சாப்பிட்டு வர்றேன். அங்கேயே ஒரு அறையிலே தங்கியிருக்கிறேன்”.

“அடடா, ஹோட்டல் சாப்பாடு உடம்பைக் கெடுத்திடுமே? நம்ம ஊரிலே பெண்களுக்கா குறைச்சல்? உனக்கும் வயசாகலேயா? ஏன் இன்னும் உன் தகப்பன் தாய் கவனிக்காமே இருக்காங்க......இருக்கட்டும், நான் அவுங்களைக் கண்டு சொல்றேன்......”

“அது நடக்கிறபோது நடக்கட்டுங்க. நீங்க எந்த ஊருக்குக் கிளம்பிட்டிங்கய்யா?”

“திண்டுக்கல் வரையிலும் தானப்பா. அங்கே கோர்டிலே ஒரு வழக்கு நடக்குது.........”

“ஆமா, ஆமா. நான்கூடக் கேள்விப்பட்டேன். ஏதோ நிலத் தகராறு விஷயம்தானே? நான் இங்க படிச்சுக்கிட்டிருக்கும்போதே, இந்த ஊர்க்கோர்ட்டிலே இரண்டு மூன்று வருஷம் நடந்ததே.........”

“அந்த வழக்குத்தானப்பா. இந்தக் கீழ்க் கோர்ட்டிலே எனக்குப் பாதகமாகத் தீர்ப்பு ஆகிட்டது. இப்ப திண்டுக்கல் கோர்ட்டிலே அப்பீல் போட்டு அங்கேயும் இரண்டு வருஷமா நடக்குது.” என்று சுருக்கமாகச் சொன்னர் கருப்பணக் கவுண்டர்.

“அடப்பாவமே, அஞ்சு வருஷமாகவா கோர்ட்டுக்கு அலைஞ்சு வர்றீங்க? பணம் ஏராளமாகச் செலவு ஆகியிருக்குமே?” என்று பரிதாபப்பட்டான் அவருக்காக.

“அதை ஏனப்பா கேட்கிறே? இதுவரைக்கும் மூவாயிரம் ரூபாய் காலியாகிவிட்டது. இன்னும் ஒரு முடிவு தெரியலே”

பேசிக்கொண்டே அவர்களிருவரும் ரயில்வே ஸ்டேஷன் வந்துவிட்டார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் ரயிலும் வந்துவிட்டது. டிக்கட்டை வாங்கிக் கொண்டு இருவரும், வண்டியில் கூட்டமில்லாத இடத்தில் ஏறி உட்கார்ந்தார்கள். பழனி ஸ்டேஷனை விட்டு ரயில் புறப்பட்டதும் அவர்கள் பேச்சும் தொடர்ந்தது.

“திண்டுக்கல்லில் உங்களுக்கு வக்கீல் யார்? கெட்டிக்காரர் தானே?” என்று கேட்டான் ராமசாமி.

“அங்கே யாரையும் நான் ஏற்பாடு செய்யலே. இந்த ஊரிலே, உனக்கு நம்ம நீலகண்டையரைத் தெரியவில்லையா? அவர்தான் இங்கே கேஸை நடத்திருரு. இப்ப திண்டுக்கல் கோர்ட்டுக்கும் அவரே தான் வர்ருரு.”

“அப்படியானு, மொத்தமா கேஸு முடியும்வரை இவ்வளவுன்னு பணம் பேசிட்டிங்க போலிருக்கு?”

“பேசினது ஒருபக்கமிருக்கு. அவர் என்னிடம் வாங்கியது ஒருபக்கமிருக்கு. ஆனல் ஒவ்வொரு வாய்தா நாளிலும் அவருக்கு இருபது முப்பதுன்னு கொடுத்தால்தான் அவர் திருப்தி அடைவாரு!”

“எல்லாம் கணக்கு எழுதி வைச்சிருப்பதில்லேயா?......சரி, வக்கீல் இந்தக்கேசைப்பத்தி என்ன சொல்ருரு? உங்கபக்கம் அனுகூலமாகுமா?”

“நானிருக்கிறேன். நீ ஏன் பயப்படுகிறே? எப்படியாவது ஜெயிச்சுக் குடுத்திட்றேனு தான் சொல்லி வர்ருரு!”

“திண்டுக்கல் கோர்ட்டிலேயே தீர்ப்பு உங்களுக்கு ஆகிடுமா?”

“அதை எப்படிச் சொல்ல முடியுமப்பா? இந்தக் கோர்ட்டிலேயும் எனக்குப் பாதகமா ஆகிட்டா அப்புறம் மதுரைக் கோர்ட்டுக்கு வரணும். எனக்குச் சாதகமா ஆகிவிட்டாலும் என் எதிரி விடமாட்டான். அவன் மதுரைக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வான் போலிருக்கு”

“சரியாப் போச்சு போங்க. ஆகவே இதுக்கு ஒருமுடிவு சீக்கிரம் ஏற்படாது?”

“கோர்ட்டுன்னு போயிட்டா இப்படித்தானப்பா இழுத்துக்கிட்டே இருக்கும். அதுவும் சிவில் கேஸுகள் வருஷக் கணக்கிலேதான் போகும்”.

“நீங்கள், நம்ம ஊரிலேயே நாலுபேரை வைச்சுப் பேசி இந்த விவகாரத்தைத் தீர்த்திருக்கலாம். ஏன்ன உங்க சொந்தக்காரர் தானே இப்ப உங்களை எதிர்த்து வழக்காடுறவரு?” “இருபதாயிர ரூபாய் பெறுமானமுள்ள நிலமில்லேயா? அதனலே அவன் என்னேட சமாதானத்துக்கு வர முடியாதுன்னு சொல்லிவிட்டான். மேலும் இப்ப கீழ்க் கோட்டிலே அவன் பக்கம் சாதகமாகி விட்டது. மேல் கோர்ட்டிலேயும் ஜெயிச்சிடலாமின்னு நினைக்கிருன்.”

“என்ன ஆகுதோ பாக்கலாம். நீங்க மதுரைக்கு வந்தா என்னை வந்து பாருங்க கவுண்டரய்யா. நான் இருக்கிற இடத்திலேயே தங்கிக் கொள்ளலாம்.”

“அதை நான் அப்பவே தீர்மானம் பண்ணிட்டேன். நான் மதுரைக்கு வர்றதுக்குள்ளே நீ வீடும் குடித்தனமுமா இருக்கணுமப்பா. நான் இன்னைக்கு பழனிக்குத் திரும்பிப் போனதுமே உங்க அப்பா அம்மாவிடம் சொல்றேன்.”

ரயில், திண்டுக்கல்ஸ்டேஷன் வந்துவிட்டதால் கவுண்டர் விடைபெற்றுக் கொண்டு இறங்கிவிட்டார். ராமசாமி தொடர்ந்து அதே ரயிலில் மதுரைக்குப் போக வேண்டியதால் அவன் இறங்கவில்லை.

வக்கீல் நீலகண்டய்யருக்கு பழனிதான் சொந்த ஊர் என்ருலும் திண்டுக்கல்லிலும் ஒரு கிளை ஆபீஸ்இருந்தது. ஏனென்ருல் பழனியில் நடக்கும் வழக்குகள் அடுத்தபடியாகதிண்டுக்கல்லுக்குத்தான் வரவேண்டும். அவரது கட்சிக்காரர்களும் அவரைத்தொடர்ந்து வருவார்கள் என்று அவருக்குத் தெரியும்! அதற்காகவே அவர் ஒரு காரும் வைத்திருந்தார். பழனியிலிருந்து திண்டுக்கல்லுக்கு ஒரு மாதத்தில் பத்துத் தடவையாவது அவர் வந்து திரும்புவார்.

கருப்பணக் கவுண்டர், ரயிலை விட்டு இறங்கியதும் காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு நேரே வக்கீல் ஆபீசுக்குச் சென்ருர். அங்கே அவரைப் போல பலகட்சிக்காரர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கெல்லாம் வக்கீல் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். கவுண்டரைக் கண்டதும், “வாங்கய்யா, இன்னைக்குத் தானு உம்மகேஸும் வாய்தா?” என்று சந்தேகமாய்க் கேட்டார்.

“என்னங்க சாமி இப்படிக் கேக்கிறீங்க? போன வாய்தாவிலேயே, கட்டாயம் இந்தத் தடவை விசாரணை நடக்குமின்னு வரச் சொன்னீங்களே?” என்று மரியாதையாக இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு, பணிவாகச் சொன்னர் கவுண்டர்.

“ஆமா, ஆமாம்நான் தயாராத் தானிருக்கிறேன். ஆன ஜட்ஜ் இன்னைக்கு எந்தக் கேஸை எடுக்கப் போருரோ? யார்கண்டது?”

“நீங்கதான் எஜமான் கிட்டேச் சொல்லணும். ஏன்ன, இந்த மூனு மாசமா நானும் வந்து வந்து......”

“இந்தாங்க கவுண்டரே, மூனு மாசமான என்ன, மூனுவருஷமான என்ன? எப்படியும் கேஸ் நம்ம பக்கம் ஜெயிக்கணும். அதுதானே நமக்கு வேண்டியது? நானிருக்கிறேன். நீங்க ஒன்னும் பயப்படவேண்டாம். இன்னைக்கு உன் எதிரியைக் கூட்டிலே ஏத்தட்டும். எப்படியெல்லாம் குறுக்குக் கேள்வி கேட்டு மடக்குறேன் பாருங்க......ம்......பீசு கொண்டாந்தீங்களா?” என்று கையை நீட்டினர் வக்கீல்.

“எனக்கு வரவேண்டிய இடத்திலேயிருந்து இன்னும் வரலேங்க...”

“பாத்தீங்களா. அந்தக் கதையெல்லாம் என்கிட்டேச் சொல்லலாமா? உங்களுக்கு வரவேண்டியது இன்னைக்கில்லேன்ன நாளைக்கு வருது. பெட்டியிலே இருக்கிறதை எடுத்திட்டு வர வேண்டியதுதானே?”

“நீங்க ஒன்னு. என்னைப் போல விவசாயிக பெட்டியிலேயா பூட்டி வைச்சிருப்பாங்க பணத்தை?...இந்தாங்க, இந்த அஞ்சுதான் மடியிலே இருக்கு இதைக் கணக்கிலே வைச்சுக்கங்க...”


“ஏதோ, குடுங்க இப்படி. ஏன்ன வாய்தா வாய்தாவுக்கு பணமின்னு வந்தால் தான் எனக்கு உற்சாகமா இருக்கும்!......சரி, நீங்க நேரே கோர்ட்டுக்கு வந்திடுங்க, பதினேரு மணிக்கெல்லாம்” என்று சொல்லிக் கொண்டே ஐந்து ரூபாய் நோட்டை மேசைக்குள் வைத்துப் பூட்டினர் வக்கீல்.

“இன்னைக்கு எப்படியும் நம்ம கேஸை எடுத்து விசாரிக்கச் சொல்லுங்க சாமி!”

“நானிருக்கிறேன். நீங்க போயிட்டு வாங்க. அந்தக் கவலை எனக்கில்லேயா?”

கவுண்டர், அதற்கு மேல் பேசினல் வக்கீல் சரியாகப் பதில் சொல்ல மாட்டாரென்று தெரியும். அதனல் அவர் வெளியேறிவிட்டார்.

(அடுத்த இதழில் முடியும்)



பிரிட்டனில் முதன் முதலாக அமெரிக்க விமான சேவைக்குரித்தான நிறங்கள் பூசப்பட்ட விமானமொன்றை மேலே காணலாம்.


நவநாகரிகமான முறையில்

குறித்த தவணையில்



ஓடர் நகைகள்

செய்து கொடுக்கப்படும்.

பொற் தொழில்

ஒத்துழைப்புச் சங்கம்

நல்லூர்

82/5, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.


## சிறுகதை எழுத்தாளர்களுக்கு

பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைநிலை ஆகியவற்றை செம்மையாக்கும் நோக்கத்துடன் எழுதப்பெறும் சிறுகதைகளை “ஈழநாடு” வரவேற்கின்றது. கதைகள் ‘பூல்ஸ்காப்’ தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் தாளில் ஒரு பக்கத்தில் மையினல் எழுதப்பெற்றுமிருக்க வேண்டும்.

### வாழ்க்கைச் சம்பவங்கள்

நாளாந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட வாழ்க்கைச் சம்பவங்களையும் எழுத்தாளர்கள் எழுதி அனுப்பலாம். இச்சம்பவங்கள் இப்பத்திரிகையில் ஒரு பத்திக்கு (கலம்) மேல் அமையக்கூடாது.

# காவியத்திற் காணும் கும்பகர்ணன்

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —

இராமாயணம் நம் நாட்டு மக்களின் இரத்தத்தில் ஊறி ஒன்றி இணைந்துவிட்ட கதை. எதற்கும் அதிலிருந்து உவமையும் உதாரணமும் எடுத்துக் காட்டக்கூடியவாறு அது நம் வாழ்வோடு கலந்துவிட்டது. இராமாயணத்திலுள்ள பாத்திரங்கள் பண்டிதர் பாமரர் எல்லார் உள்ளத்திலும் நன்கு பழகிப்பரிச்சயமானவை. யாராவது ஒருவர் நேரங் கடந்து நெடுந்துயில் கொள்ளுகிருரென்ருல் 'அவரென்ன கும்பகர்ணனே' என்று கேட்கும் வழக்கம் நந்தமிழ்நாட்டில் என்றும் உண்டு. கும்பகர்ணன் என்ருல் நன்ருகத் தூங்குபவன் என்பது பொருளாய் விட்டது. உண்மை அவ்வாறன்று. குணச்சிறப்பால் கும்பகர்ணன் விபீடணனுக்கு இணையானவனுயும் இராவணனைக் காட்டிலும் பன்மடங்கு மேம்பட்டவனுயும் விளங்குபவன் என்பது காவியத்திற்கண்டது.

## நெடுந்துயில்

கும்பகர்ணனைச் சித்திரிக்கப் புகுந்த கம்பர் கற்போர் கருத்தைக் கவரவல்லதொரு உயர்ந்தமுறையைக் கையாளுகின்ருர். முதலில் அவனது புறத்தோற்றப் பொலிவும் பின்னர் அவனது அகத்தோற்றத்தின் அழகும் விளக்கப்படுகின்றன. முதல் நாட்போரில் முற்றும் இழந்து சோர்ந்திருந்த இராவணனுக்கு மகோதரன் குப்பகர்ணனை நினைவூட்டி, 'ஓங்கலே போல்வான் மேனி காணவே ஒளிப்பர்' என்று அவனுக்கு உற்சாகத்தை உண்டாக்குகின்ருன். இது கும்பகர்ணனது தோற்றப் பொலிவைக் கூறுவதற்கு ஒரு தோற்றுவாயாக அமைகின்றது. அதனை அடுத்து இராவணனின் ஏவலாளர் கும்பகர்ணனை எழுப்புகின்றனர். அவர்களது முயற்சி சாதாரணமானதன்று. குதிரைப்படைகளும் யாளிப்படைகளும் கூட்டம் கூட்டமாய் அவன் மார்பில் மிதிக்கின்றன. மல்லர்கள் பலர் அவன் கன்னத்திலும் காதிலும் வாளும் மழுவும் கொண்டு தாக்குகின்றனர். தூங்கும் குழந்தைக்கு அதன் தொடையில் தட்ட அது மேலும் நன்கு தூங்குவதுபோல கும்பகர்ணனுக்குச் செய்த அந்த வன்மையான செயல்களெல்லாம் அவன் மேலும் துயிலத் துணைசெய்கின்றன. 'அவனை இதோ எளிதாக எழுப்பிவிடுகிருேம்' என்று சென்ற வீரர் அவனது சுவாசக் காற்றின் வசப்பட்டு நிலை தளர்ந்து அவனது மூக்கினுள் போவதும் விரைந்து வெளியே வருவதுமாய் அல்லற்பட்டுக் களைத்து மீளுகின்றனர்.

## பேருணவு

இக் காட்சிகள் கும்பகர்ணனது நெடுந் துயிலை எடுத்துக் காட்டுகின்றன. கும்பகர்ணன் இவ்வாறு உறங்கும் இயல்பு எவர்க்கும் அவன்மீது உயர்ந்த கருத்தை உண்டாக்கத் துணை செய்யாது. எவரும் அவனை இகழவே செய்வர். அவ் விகழ்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்வதாய் உள்ளது அவன் உண்ணும் பேருணவு. மலை போன்ற உடலையுடைய அவன் விழித்தெழுந்ததும் மலை மலையாக ஊனையும், குடங்குடமாக மதுவையும் வாரி உண்ணுகின்ருன். ஆயிரமாயிரம் வண்டிகளில் வந்த உணவு அவனது அரை வயிற்றுக்கும் போதவில்லை. இவ்வாறு அளவு மீறி உண்பவனுக்கு இரவும் பகலும் உறங்குதலைத்தவிர வேறு செயல் என்ன இருக்க முடியும்? எனக் கருதுவதிற் பிழையில்லை. கும்பகர்ணன் வாழ்நாளின் பெரும் பகுதியை உண்பதிலும் உறங்குவதிலுமே கழித்தான். "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்பது போல கும்பகர்ணனது புற இயல்பினை மாத்திரம் கண்டு அவன் இத்தகையன் என முடிவு செய்தல் தகாது.

## யாருடன் போர்?

இராவணன் கும்பகர்ணனை அழைத்து அவனுக்குப் போர்க் கோலம் செய்கின்ருன். அதன் காரணம் கும்பகர்ணனுக்கு விளங்கவில்லை. உறங்கிக் கிடந்தமையால் ஊரில் ஏற்பட்ட விளைவுகளை அவன் அறியவில்லை. யாருடன் போர்? யாது காரணத்தால் போர்? என அவன் வினவிய போதுதான் இராவணன்சீதையை இன்னும் விடவில்லையென்பதையும் அதனுல் இராவணனுக்கும் இராமனுக்கும் போர் உண்டாயிற்று என்றும் அறிகின்ருன். இராவணன் இராமனேடு போர் செய்து தோற்ற பின்பே இராமனை வெல்ல முடியாது என எண்ணினன். கும்பகர்ணனே இராமனைக் காணுதவன்; போர் முனையிலே இராமன் வீரத்தைப் பாராதவன். ஆயினும், இராவணன் இராமனுல் மாள்வான் என்பதை உறுதியாய் அறிந்து, தான் விழித்த போதெல்லாம் அதனை இராவணனுக்குக் கூறியவன். தன்னைப் போர்க்கோலம் செய்த அப்பொழுதும், "ஆனதோ வெஞ்சமம், அலகில் கற்புடைச் சானகிதுயர் இ(ன்)னம் தவிர்ந்ததில்லையோ" என இராவணனை வினவுகின்ருன். கும்பகர்ணன் இராமன் அம்புக்கு அஞ்சினனல்லன். சீதையின் துயரைக் கண்டே சிந்தைநொந்து மேற்கண்டவாறு வினவினன்.

## வாய்மையுமுடையவன்

இராவணன், வீரத்தை மேலாகக் கருதி வாழ்ந்தவன். கும்பகர்ணன், மடவார்கற்பை உயர்வாக மதித்து வாழ்ந்தவன். "அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும்" என்பதை உறுதியாக நம்பியவன். இராமனுடன் செய்யும் போரினை இராவணன் கருதியது வேறு; கும்பகர்ணன் கருதியது வேறு. தேவரிலும் மூவரிலும் தலைவனுன வீரன் ஒருவனேடு தான் போர் புரிவதாக இராவணன் கருதினன். "நாசம் வந்துற்ற போது நல்லதோர் பகையைப் பெற்றேன்." என்று அப்போர் குறித்துப் பூரிப்பும் அடைந்தான். ஆனல் கும்பகர்ணனே அது இராம ராவண யுத்தமன்று என்றும் தருமத்துக்கும் அதருமத்துக்கும், கருணைக்கும் வஞ்சனைக்கும், மெய்மைக்கும் பொய்மைக்கும் மூண்டபோர் என்றே கருதினன். கும்பகர்ணன் அறத்தை விரும்பியது மட்டுமன்றி அஞ்சாது எடுத்துரைக்கும் வாய்மையுமுடையவன் என்பது இராவணன் தன்னை வெறுப்பான் என்று தெரிந்தும் அவன் அவனுக்கு இடித்துரைத்ததால் அறியப்படும்.

## இரங்குகின்ருன்

கும்பகர்ணன் தான் விரும்பும் அறத்தை இராவணன் சிறிதும் விரும்பாதவன் என்று தெரிந்தும் அவன் மேல் அளவற்ற அன்பு வைத்திருந்தான். மண்டோதரி தனது நாயகனை இராவணன் தீயவனுயபோதும் அவனிடத்து வைத்த அன்பில் குறையாமை போலக் கும்பகர்ணனும் தன் அண்ணனை இராவணன் அறநெறிதவறிய போதும் அவன்பால் வைத்த அன்பில் சிறிதும் குறைந்தானல்லன். தன்னைப்பலியிட்டாவது தமையனுக்குப் புத்தியுண்டாகவும் அவன் நல்வாழ்வடையவும் ஆசைப்படுகின்ருன். "என்னை வென்றுளரெனில் இலங்கைகாவல, உன்னை வென்றுயருதல் உண்மை, ஆதலால் பின்னை நின்று எண்ணுதல் பிழை, அப்பெய்வலை தன்னை நன்களிப்பது தவத்தின் பாலதே" என்பதில் தான் இறந்ததைக் கண்டாயினும் தன் தமையனைத் திருந்திநடக்குமாறு வேண்டுகின்ருன். கும்பகர்ணன் போர்க்களம் சென்றபோது விபீடணன் அவனை இராமன் பக்கம் சேர்ந்து உய்யுமாறு புத்திபுகட்டுகின்ருன். அப்பொழுதும் கும்பகர்ணனுக்கு தன் தமையன்மேல் வைத்த அன்பே மேம்பட்டு நிற்கின்றது. தான் இராமனேடு சேர்ந்தால் இராவணனுக்கு ஏற்படுவனவற்றை ஒவ்வொன்ருய் எண்ணி உருகுகின்ருன். தன்சொல் மீருன்என்று நம்பித் தமையன் தன்னைப்போர்க் கோலம்செய்து அனுப்பிவிட்டிருப்ப, தான் இராமனேடு சேரின் அச்செய்தி இராவணன் செவியில் எட்டுமாயின் அவன் எவ்வளவு ஏமாற்றமும் மனக் கவலையும் உறுவான் என நினைந்து கும்பகர்ணன் இரங்குகின்ருன்.

## உள்ளத்தில் போராட்டம்

அது ஒருபுறமிருக்க, தனக்கு உணவு முதலியன தந்து அதுவரை வளர்த்த இராவணனது நன்றியை மறப்பின் தன் அறவாழ்வு என்னுகும் என அஞ்சுகின்ருன். மேலும், தம்பிமார் ஒருவருமின்றி இராவணன் போர்க்களத்திலே தனியே மாண்டுகிடப்பானே என அவனது பரிதாப நிலையை நினைந்து உருகுகின்ருன் அங்ஙனம் இறந்த இராவணன், முன்னுளில் தன்னுல் வெல்லப்பட்ட யமனுடைய வாயிலுக்குத் தனியாய்த் தலைகவிழ்ந்து நாணிச் செல்வானேஎனவும், தானும் போர்க்களத்தில் இறப்பின் தமையனேடு தானும் சேர்ந்து யமன் நகரம் செல்லுதலால் தமையனது நாணம் சிறிது குறையும் என்றும் எண்ணுகின்ருன். வாழ்க்கையில் இருவித தர்மங்களுக் கிடையில் போராட்டம் ஏற்படுவதுண்டு. அப்போராட்டங்களைப்பற்றிக் கயவர்கள் சிறிதும் கவலைப்பட மாட்டார்கள். நல்லவர்களுக்கோ வாழ்க்கை முழுவதும் கவலையும் கஷ்டமுமே.

"நன்றறிவாரில் கயவர் திரு
வுடையர்
நெஞ்சத்தவல மிலர்"

என்ற வள்ளுவர்வாக்கிற்கிணங்க கும்பகர்ணன் இருதர்மங்களுக்கிடையே அவலமுறுகின்ருன். அவன் நெஞ்சத்தை ஒருபக்கம் அறம் இழுக்கின்றது. மறுபக்கத்தில் அன்பு இழுக்கின்றது.

அறப் பெருந்துணைவர் என்று முன்பு கும்பகர்ணனுல் கூறிப் போற்றப்பட்ட இராமர் அவனை அழைக்கின்ருர். ஆகவே அறத்திற்குப்பணிந்து வாழ்வதா? அன்றி, நீர்க் கோலவாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்பு போர்க் கோலம் செய்துவிட்ட அண்ணன் பொருட்டுப் போர்செய்வதா? இரண்டுதர்மங்களும் மேலானவை. அத்தர்மங்களைக் குறித்துக் கும்பகர்ணன் உள்ளத்தில் நிகழ்ந்த போராட்டமும் பெரிதானது. ஈற்றில் அன்பே அவனை வசப்படுத்தியது. எனவே கும்பகர்ணன் தான் பெற்ற வரத்தால் தாமத இயல்பினனுயினும் உள்ளப் பாங்கினுல் உயர்வாகப் போற்றப்படத் தக்கவனே.

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

### 'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழநாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

★ போட்டோவின் அளவு, 6" X 4"
★ முடிவு திகதி 31-12-59

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

கலாநிலையப்பதிப்பகம்
யாழ்ப்பாணம்

VENUS
SOAP
வீனஸ் சோப்

தரத்தில் சிறந்தது, உடைகளை வெண்மையாக்குவது,
அதிக நுரையைத் தருவது
வீனஸ் சோப்
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# சிங்களமே நாட்டின் மொழியாக வேண்டுமாம்!

## பௌத்த இராச்சியம் அமைக்க பிக்குகள் மும்முரம்

— நமது நிருபர் —

அனுராதபுரம்.

இது நாள் வரையும் மத அடிப்படையில் இயங்கி வந்த பிக்குகளின் சிங்கள ஜாதிக சங்கம், பத்தேகம வண. விமலவன்ஸ தேரோ என்பவரின் தலைமையில் புது அரசியற் கட்சியாக மாறியுள்ளது. இச் சங்கத்தின் முதலாவது பொதுக் கூட்டம் இம்மாதம் 23-ந் தேதி இங்கு நடைபெற்றது.

வெளியூரிலிருந்து மக்களை பஸ்களிற் கொண்டு வந்து 'திரளான' கூட்டம் கூட்டிய இப் பொது மக்கள் தாபனத்தில் உள்ளூர் வாசிகள் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டனர்.

இப்பொதுக் கூட்டத்தில் தனது கொள்கையை இச் சங்கம் விளக்கியிருக்கிறது. இந் நாட்டின் ஒரே மொழியாகச் சிங்களமும், மதமாகப் பௌத்தமும் இருக்கவேண்டும் என்று தீர்மானித்துள்ளார்கள். இந்தப் பௌத்த இராச்சியக் கொள்கையில் சிலர் திருப்தியும் ஆர்வமும் கொண்டுள்ள போதிலும் சில முனைகளில் அதிக எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

### கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பு

'இந்தப் பௌத்த இராச்சியம் என்ற கொள்கை மீண்டும் வகுப்பு வாதக் கொள்கைக்கே அடிகோலும்' என்று அனுராதபுரக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி திரு ஏ. குணசேகரா, 'ஈழநாடு' நிருபரிடம் கூறினர்.

"முன்னர் அரசாங்கத்தை ஆதரித்த இந்தப் பௌத்த பிக்குகளின் தாபனம், மத அடிப்படையில் பிற் போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்காத காரணத்தால் மட்டும் அதை எதிர்க்கிறது." என்று அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல்கள் பற்றிக் கூறுகையில் திரு. குணசேகரா குறிப்பிட்டதாவது:- அனுராதபுரப் பிரிவில் உள்ள எட்டுத்தொகுதிகளில் இரண்டு அல்லது மூன்று தொகுதிகளைத் தவிர்த்து மற்றவற்றில் போட்டியிட உத்தேசித்துள்ளோம். விரைவில் மும்முரமான தேர்தல் பிரச்சாரம் நடத்தப் போகின்றோம்".

### திரு. குணவர்த்தன இடமாற்றம்

1951-ம் ஆண்டிலிருந்து அனுராதபுரம் நகர சபையின் விசேஷ கொமிஷனராகப் பணியாற்றி வருகின்ற திரு. எஸ். டபிள்யு. குணவர்த்தன செப்டம்பர் மாதம் முதலாந் தேதி மாற்றம் பெறுவதுடன் இங்கிலாந்துக்கும் செல்லவிருக்கிறார்.

அனுராதபுரம் நகரின் பலவித விருத்திக்கும் உதவிய திரு. குணவர்த்தன, சிங்கள—தமிழ்க் கலாசாரத்துக்குப் பல விதங்களில் உதவியிருக்கிறார். இவரது நிர்வாகத்தின் கீழ் புது நகரத்திட்டம் சிறப்பாகிக் கொண்டு வந்தது. சமீபத்தில் கூட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பெற்ற ஒரு பகுதி வீடுகளை, மந்திரி விமலா விஜயவர்த்தன திறந்து வைத்தார்.

திரு. திஸநாயக்கா என்பவர் திரு. குணவர்த்தனவுக்குப் பதிலாக இங்கு வருகிறார்.

# தமிழரை இனியும் ஏமாற்ற முடியாது

## கோப்பாய் எம். பி. கருத்து

"தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்களகுமாஸ்தாக்களை அனுப்புவதென்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. இதனை நான் உங்களுக்கு உறுதிப்படுத்த முடியும்"—, இவ்வாறு பிரதமர் பண்டாரநாயக்கா எங்களிடம் தெரிவித்தார், என்று கோப்பாய்ப் பிரதிநிதியும் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. கு. வன்னியசிங்கம் நமது நிருபருக்களித்த பேட்டியில் கூறினர். திரு. வன்னியசிங்கம் மேலும் கூறியதாவது: தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்கள குமாஸ்தாக்களை அனுப்பி, அங்குள்ள நிர்வாகத்தை சிங்களமயமாக்குவது என்னும் வதந்தியைக் கிளப்பிவிட்டு, தமிழர்கள் இதை எவ்வாறு வரவேற்கிறார்கள் என்று பரிசோதிக்க எண்ணிய பிரதமர், தனது பரிசோதனையில் தோல்வியையே கண்டுள்ளார். குறிப்பிட்ட அறிக்கை பத்திரிகைகளில் வெளிவந்ததும் தமிழினம் வன்மையாக ஆட்சேபித்தது. 'இதன் விளைவாகக் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றியும் வேறு பல விஷயங்கள் பற்றியும் பிரதமரிடம் பேச்சு வார்த்தை நடாத்தினேம். அவர் எதற்கும் திட்டவட்டமான பதில்தராமல் 'எல்லாம் நான் யோசிக்கிறேன். சற்று பொறுங்கள்' என்று தெரிவித்தார். தமிழினத்தைப் பொறுத்தவரை நாம் இனிமேலும் ஏமாற மாட்டோம். அகிம்சை வழியில் நாம் சிங்கள மக்களைச்சந்திக்கும் காலம் வெகு தொலைவிலில்லையென்பதை என்னுடைய நண்பர் பண்டாரநாயக்காவுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ந. நி.

# கோவில் நிர்வாகத்தில் சமரச முடிவு

திருக்கோணமலைப் பகுதியிலுள்ள வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் நிர்வாகத்தில் பிணக்கு ஏற்பட்டு, கோர்ட்டார், திருக்கோணமலை மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. எஸ். எம். ஆறுமுகத்தை இதையிட்டுவிசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கூறினர். ஆயிரக் கணக்கானோர் கூடிய இக்கூட்டத்துக்குத் திரு. ஆறுமுகம் தலைமை வகித்து ஒரு சமரச முடிவை ஏற்படுத்தியுள்ளார். இப்பகுதி இந்து - கிராமச் சங்கத் தலைவர்களும் கிராமத் தலைவர்களும் அடங்கிய, நிர்வாகசபை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. ந. நி.

# நகரத்தின் கட்டட நிதிக்காக களியாட்ட விழா

திருக்கோணமலை.

திருக்கோணமலை நகரசபை நடாத்தும் களியாட்ட விழாவைத் திருக்கோணமலை பாராளுமன்றப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம் திறந்து வைத்தார். அவர் பேசும் போது, இக்களியாட்ட விழா நகரத்தின் கட்டடநிதிக்காக நடாத்தப்படுகிறது என்றும் எல்லோரும் இதில் ஒத்துழைத்தல் வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். நகரசபைத் தலைவர் திரு. பா. நேமிநாதன் பேசும்போது, திருக்கோணமலை நகரசபை, நகரத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதில் முனைந்து இருக்கிறது என்றும் பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ந. நி.

# இப்படியும் சொன்னார்கள்

ஒரு பெண்ணுடன் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதியோ அல்லது ஒரு மந்திரியோ பேசினால் போதும்; அது சம்பந்தமாகக் கெடுதலான கதை உருவாகிவிடும்.

—மரைக்கார்.

ஆசியாவிலேயே, யப்பானைத் தவிர, இலங்கை தான் ஒரு நீண்ட ஜனநாயக சரித்திரத்தைக் கொண்டுள்ள நாடாகும்.

—ஜே. ஆர். ஜெயவர்த்தன.

எம். ஈ. பி. அரசாங்கம் கிழடு தட்டிய ஒருவரின் பல்லைப் போன்றது; ஆடிக்கொண்டேயிருக்கிறது; எந்த நிமிஷமும் விழுந்துவிடக்கூடும்.

—டக்டர். என். எம். பெரேரா.

நான் ஒரு கொம்யூனிஸ்டும் அல்ல; கொம்யூனிஸ்ட் அல்லாதவனும் அல்ல.

—நேருஜி.

சிலர் யு. என். பி. இறந்துவிட்டது என எண்ணினர்; ஆனல், அது மீண்டும் உயிர் பெற்றுவிட்டது. அது மாத்திரமல்ல, நாட்டிலேயே மிகப் பலமுள்ள கட்சியாகவும் அது விளங்குகின்றது.

—டட்லி. சேனநாயக்கா.

நான் பதவியேற்றேன்; மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; வரவேற்புத் தருகிறார்கள்,

—எஸ். எதிர்மன்னசிங்கம்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பத்து வருடத் திட்டம் மக்களின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும். நாடும் செழிப்புறும்.

—பி. ஜி. கலுகல்லா.

# பாவைகள் செய்வதில் புதுமுறை

## கைத்தொழிற் பகுதியினரின் பொருட் காட்சி

கொழும்பு கலாபவனத்தில் (ஆர்ட் கலரி) இம்மாதம் 19.8.59 தொடக்கம் 23.8.59 வரைநடைபெற்ற கைப்பணி, நார் வேலைப் பொருட்காட்சியை சேர் ஒலிவர் குணத்திலக்கா திறந்து வைத்தார். இப் பொருட் காட்சியைப் பெருந்திரளான மக்கள் பார்த்துச் சென்றனர். மூன்றுண்டுகளுக்கு முன் கிராம அபிவிருத்தி கைத்தொழில் பகுதியினரால் முதற் பொருட்காட்சி ஏற்படுத்தப்பட்டது. அதற்குப்பின் இதுபோன்ற பொருட் காட்சிகள் ஏற்பாடாகியுள்ளன. இந்தப் பொருட்காட்சி கைத்தொழில் பகுதி ஏற்படுத்தும் ஆருவது காட்சியென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இட வசதியின்மையால் இப்பகுதியினர்நடாத்தி வரும் வேறு கைத்தொழில் வேலைப்பாடுகளை பொது மக்கள் பார்வைக்கு அளிக்க இயலாமலிருக்கிறார்கள். நெசவு வேலைப் பொருட் காட்சியொன்றை இவ்வருடம் டிசம்பர் மாதம், கைத்தொழில் பகுதி ஏற்பாடு செய்யும். கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை சிறந்த ரகமான உயர்ந்த பொருள்களைத் தயாரிக்க உதவி செய்து, பின்னர் அதனைக் குறைந்த விலையில் மக்களுக்கு விற்பதே குடிசைக் கைத்தொழிற் பகுதியின் நோக்கம். இதைப் பூர்த்தி செய்வதற்கு நவீன முறைகள் கையாளப் படுகின்றன.

பாவை செய்வதில் புது முறைகளை இப் பகுதி மேற்கொண்டு வருகிறது. இதற்கு உதவியாக ஜப்பானிலிருந்து வரவழைக்கப்பட்ட நிபுணர்கள் தீவிரமாக உழைத்து வருகின்றனர்.

மரப் பாவைகள் செய்வதும் ஒரு புதிய கலைதான். இதனையும் கைத்தொழிற் பகுதியினர் செய்து வருகின்றனர். இதைப் பார்வையிட ஜப்பானிலிருந்து திரு. கே. சோடா என்ற நிபுணர் இலங்கை வந்துள்ளார். குழந்தைகளுக்கு ஆர்வம் ஊட்டும் பொம்மைகளையெல்லாம் இப் பகுதி செய்கிறது. இலங்கை கைத்தொழிற் பொருள்களைக் கொழும்பிலும் பிற இடங்களிலும் பெறுவதற்கான வசதிகளை அரசினர் செய்துள்ளனர். ந. நி.

# கண்ணோட்டம் 14

# ஆஸ்பத்திரி ஊழல்

இலங்கையிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளின் நிலை மிகவும் கேவலமானது என்பதை யாருமே மறுக்கமுடியாது. ஏற்கனவே அதிகாரிகளினதோ அல்லது பொதுவாக அரசாங்கத்தினதோ கவனிப்பற்றுக் கிடந்த இந்த ஆஸ்பத்திரிகளில் இப்பொழுது ஊழலும், ஒழுங்கீனமும் அதிகரித்து வருகின்றன. பொதுமக்கள் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது. தங்கள் குரலை ஆணித்தரமான முறையில் அதிகாரிகளிடமும், அரசாங்கத்திடமும் வெளியிடும் காலம் வந்துவிட்டது.

கர்ப்பிணிகளை, கதியற்ற வயோதிகரை, கடும் வியாதியால் கஷ்டப்படும் நோயாளிகளைக் கருணையின்றி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேற்றவோ அல்லது ஆஸ்பத்திரியுள் செல்ல அனுமதி கொடுக்காமல் மறுக்கவோ தயங்கவே மாட்டார்கள் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் சிலர். பொது ஆஸ்பத்திரிகளிலுள்ள 'பெரிய' உத்தியோகத்தர்கள் தொடக்கம் 'சிறிய' மேற்பார்வையாளர், தாதிமார் இவர்கள் வரை கருணையற்ற மனேபாவத்தையே காட்டுகின்றனர். இதனல் மிகவும் கஷ்டப்படுபவர்கள் ஏழைகளே.

ஒரு நோயாளி குணமடைய வேண்டுமானல், அவருக்கு ஆஸ்பத்திரியில் முறையான கவனிப்புக் கிடைக்கவேண்டுமானல், அவர் பணமுள்ளவராக இருந்தால்தான் இது முடியுமென்ற அளவுக்கு இலங்கையிலுள்ள பொது ஆஸ்பத்திரிகளின் நிலை கீழிறங்கிவிட்டது. பணமிருந்தால்தான் ஆஸ்பத்திரியில் கிடக்கும் பிணத்தைக் கூடச் சரிவரக் கவனிப்பார்கள் என்றால்.......?

அண்மையில் ஓர் அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளி ஒருவரின் இரத்தம் சோதிக்கப்பட்டது. சோதனையின் பின் அவர் ஆஸ்பத்திரியில் ஒரு பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். ஆனல், அந்தப்பகுதியைச் சேர்ந்த டாக்டர் நோயாளியைப் பார்த்துவிட்டு, அவர் அப்பகுதிக்குச் சேரவேண்டியவரல்ல என்பதைத் தெரிந்து கொண்டு அவரை இன்னுமொரு சோதனைக்கு அனுப்பி வைத்தார். இரண்டாம் சோதனையின் முடிவு முதலாம் சோதனை பிழையென்பதை நிரூபித்தது. இவ்வாறு ஆஸ்பத்திரிகளில் நடாத்தப்படும் சோதனைகள் அநேகமாகப் பிழையான முறையிலேயே நடைபெற்று வருகின்றன. பல ஆஸ்பத்திரிகளில், இரத்தச் சோதனைகளும், 'எக்ஸ்ரே' கருவி மூலம் படமெடுத்தலும் கவலையீனமாகக் கையாளப்படுகின்றன.

இன்னுமொரு ஆஸ்பத்திரியில், ஒரு நர்ஸ், அறையொன்றில் நிர்வாணமாகக் காட்சியளித்ததைக் கண்டதாகப் பாராளுமன்றப் பிரதிநிதி ஒருவரே முறையிட்டுள்ளார்! அந்த நர்ஸ், குறிப்பிட்ட ஆஸ்பத்திரிக்கு, அங்கு கடமையாற்றும் டக்டர் ஒருவரின் விசேஷ வேண்டுகோளின்மீது அனுப்பப்பட்டிருக்கின்றார் என்றும், இதுபற்றி உடனே விசாரணை நடத்தவேண்டுமென்றும் இப் பிரதிநிதி கேட்டுள்ளார்.

காங்கேசன் துறையில் உள்ள காசநோயாளர் ஆஸ்பத்திரியின் நிலையும் நோயாளிகளுக்குக் கஷ்டம் அளிப்பதாகவே உள்ளது. அங்குள்ள நோயாளிகள் தினமும் காங்கேசன்துறைச் சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் சிமெந்துத் தூசை உட்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்காளாகியுள்ளனர். பல அந்தர் தூசி ஒவ்வொருநாளும் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே கூட்டித் தள்ள வேண்டியிருக்கிறதாம்.

கடமை உணர்ச்சி இல்லாத சில கவனிப்பாளர், அசிரத்தை காட்டிவரும் சில மேலதிகாரிகள், இவற்றையெல்லாம் அறிந்தும் அறியாதமாதிரி இருக்கும் அரசாங்கம்—இவை யாவும் இருக்கும்வரை அரசாங்க ஆஸ்பத்திரிகளின் நிலைமை சீரடையுமென எப்படி எதிர்பார்க்க முடியும்! இந்த நிலைமை எப்பொழுது மாறுமோ!


யாழ்ப்பாணப் பகுதியில்

**ஈழநாடு**

**விற்பனை செய்வோர்**

1. **தம்பித்துரை,** நியூஸ் ஏஜன்ட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
2. **எஸ். பாலசிங்கம்,** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
3. **ஸ்ரீ தம்பிப்பிள்ளை,** பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
4. **பிருந்தாவனம் ஓட்டல்,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
5. **வி. எஸ். எஸ். கே,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
6. **எவறெஸ்ட் டீ றூம்,** ஸ்டேசன் வீதி, யாழ்ப்பாணம்.
7. **ரி. நல்லைநாதன்,** கல்வியங்காடு, யாழ்ப்பாணம்,
8. **முனீஸ்வர கபே,** ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
9. **பூபாலசிங்கம் புத்தகசாலை,** பெரியகடை, யாழ்ப்பாணம்.
10. **சென்ட்றல் கபே,** மெயின் வீதி, யாழ்ப்பாணம்,
11. **நாகலிங்கம் கபே,** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
12. **லேக் வியூ ஓட்டல்,** கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
13. **ஆனந்தபவான்,** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
14. **பத்மா கபே,** கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்
15. **மலாயா கபே,** பெரியகடை, யாழ்ப்பாணம்.

(தொடரும்)

# எட்டியாந்தோட்டை மகாநாட்டில் நான் கண்ட காட்சிகள்

— ஜயாறன் —

எட்டியாந்தோட்டை காங்கிரஸ் மகாநாட்டுக்கு அழைப்புக் கிடைத்ததும், அங்கு செல்ல வேண்டியது என் கடமையென்று உணர்ந்தேன். ஏன் தெரியுமா? தோட்டத் தொழிலாளர்தான் நமக்குப் படியளக்கும் உண்மையான எஜமானர்கள்.

எப்படி? இலங்கையிலே எம்மில் ஒவ்வொருவருக்கும் சராசரி வருமானம் வருடத்தில் ரூபா 568. ஆசியாவிலேயே, யப்பானுக்கு அடுத்தபடியாக நாம்தான் இவ்வகையில் இருக்கிறோமாம். இந்தத் தேசிய வருமானத்தில் சுமார் பாதி, தோட்டத்தொழிலாளரின் உழைப்பால் கிடைக்கிறது. அரசாங்க வருமானத்திலும் நூற்றுக்கு 60 வீதம் தேயிலை, ரப்பர் தோட்டத் தொழிலாளரின் உழைப்பால் கிடைக்கிறது.

இந்தத் தொழிலாளரின் உழைப்பு இல்லாவிடில், இங்கு மந்திரிகள் உள்ளிட்டு எம்மில் பலரும் மாதச் சம்பளமோ, வருமானமோ பெறுவது சங்கடமாகும். ஆகவே நமக்குப் படி அளக்கும் தோட்டத் தொழிலாளர் நமக்கு மறைமுகமான எஜமானர்களாகின்றனரல்லவா?

* * *

சென்ற சனிக்கிழமை காலை எட்டியாந்தோட்டைக்கு நான் சென்ற சமயம், மழையும் வெயிலும் மாறியாறி வந்தன, நம் வாழ்க்கையிலே இன்பமும் துன்பமும் விட்டுவிட்டு வருவது போல.

கொட்டும் மழையில் நனைந்துகொண்டே, காங்கிரஸ் தொண்டர், வீதிப் போக்குவரத்துகளை, பொலிஸைவிடத் திறமையாக ஒழுங்குசெய்துகொண்டிருந்தனர். பொலிசாரில் சிலரும் அங்கு இருந்தனர். என்றாலும், தொண்டர்கள் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனித்ததால், பொலிசுக்கு வேலையில்லை.

ஒரு தொண்டரிடம் விசாரித்தேன். அவர் தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்யும் ஒரு தொழிலாளியாம். நீலக் கால் சட்டையும், வெள்ளை சேட்டும், சிவப்பு டையும், தலையில் காந்திக்குல்லாவும், காலில் பூட்சும அணிந்திருந்த அவரைப் பார்த்தால், தோட்டத் தொழிலாளி என்று யாரும் நம்ப முடியாது. முதல்நாளே தாம் வந்துவிட்டதாயும், இரவெல்லாம் தூக்கமில்லாமல் கடமை பார்த்ததாயும் அவர் பெருமையுடன் தெரிவித்தார்.

கடைத் தெருவிலே ஆண் தொண்டர்களும், பெண் தொண்டர்களும் அணிவகுத்து ஒழுங்காக ஊர்வலம் சென்றனர். தோட்டங்களிலிருந்து, மோட்டார் வான்களில் ஆண் பெண் தொழிலாளர் பிரதிநிதிகள் வந்துகொண்டிருந்தனர். "வயது வந்தவர்களைப் பதியுங்கள்". "பிரஜா உரிமை வேண்டும்", "சமசம்பளம் தருக" என்று பலவித கோஷங்களடங்கிய அட்டைகளைத் தாங்கிக்கொண்டு சென்றனர். "தொழிலாளருக்கு ஜே" என்ற கோஷத்தை அடிக்கடி எழுப்பினர். மழை பெய்தபோதிலும், ஊர்வலம் கலையவில்லை.

* * *

எட்டியாந்தோட்டை ஒரு சின்ன ஊர்தான். ஆகவே முக்கியஸ்தர்கள் மட்டும் வந்தால் போதும் என்று கட்டுப்படுத்தினர்களாம். அங்கு சுமார் நாலாயிரம் முதல் ஐயாயிரம் பேர்வரை இருக்கும் என்றாலும் ஊர் தாங்கவில்லை. மறுநாள் ஞாயிறன்று லீவாதலால் அதிக கூட்டம் வருமென்று சொன்னர்கள்.

மகாநாடு நடைபெறும் இடத்துக்குச் செல்லுகையில் வழியெல்லாம் திருவிழாக்கடைகள்போல் இருந்தன. இதில் சிங்களவரே அதிகம். தோட்டத் தொழிலாளருக்கு இளநீர், கடலை, பலகாரம், சிற்றுண்டி, இவற்றை ஆவலுடன் விற்கக் காத்திருந்தார்கள் அவர்கள்.

இவர்களையெல்லாம் தாண்டி, "அங்கப்பநகர்" சென்றேன். மழை பிசு பிசுத்துக் கொண்டிருந்தது. என்றாலும் மக்கள் நனைந்து கொண்டே பிரசங்கத்தைக் கேட்டனர். இருபுறமும் இருகொட்டகைகள். அங்கு நாற்காலிகளில் பெண்கள் ஏராளமாக இருந்தனர். ஆண்களைவிடப் பெண்கள் கூட்டம்தான் அதிகம் போலிருந்தது. வெள்ளைப் புடைவையும், சிவப்பு ரவிக்கையும் அணிந்து, பெண் தொண்டர்கள் கம்பீரமாக நடந்து சென்றதைப் பார்த்ததும், முன்னர், காலஞ்சென்ற பெரிசுந்தரம் அவர்கள் கூறியது ஞாபகம் வந்தது.

"தோட்டங்களிலுள்ள நமது பெண்கள், மற்றப் பெண்களைப் போல் காலில் பூட்ஸ் போட்டு, குடை பிடித்து, முகத்தில் பவுடர்போட்டு, நவ நாகரிகத்துடன் சரி நிகர் சமானமாகத் தெருக்களில் செல்லவேண்டும்" என்று அவர் நுவரேலியாவிலே ஒரு கூட்டத்தில் பேசுகையில் தம் ஆசையைத் தெரிவித்தார். எட்டியாந்தோட்டைத் தெருக்களிலே நவநாகரிகமாக தோட்டப் பெண்மணிகள் சென்றதை அவர் ஆவிஉருவில் கண்டு, பெரும் திருப்தி அடைந்திருப்பார்.

இதைப்பற்றி ஒரு காங்கிரஸ் தலைவரிடம் சொன்னபோது, "எங்கள் பெண்கள் எங்களையெல்லாம் தூக்கி அடித்துவிட்டார்கள். நாளைக்குப் பாருங்கள், அவர்கள் உற்சாகத்தை. ஆனல் இந்த உற்சாகத்தையெல்லாம் நன்கு பயன்படுத்தக்கூடிய சரியான தலைவி இல்லாததுதான் குறை" என்றார்.

* * *

சிவப்பு நிறமான உயர்ந்த கொடி மரத்தில் காங்கிரஸ் கொடி ஏற்றப்பட்டது. மூன்று வகுப்புக்களுக்கும் பிரதிநிதித்துவமாக மூன்று வர்ணங்களும், சமாதானத்துக்காக குறுக்கே முன்பக்கம் நீல நிறமும், அதில் தொழிலாளரின் லட்சியத்தைக் குறிக்கும் சிவப்பு நட்சத்திரமும் இருந்தன. கொடி ஏறிய போது, மேடையில் என் பக்கமிருந்த இரு பெண்கள், "தொழிலாளிக்கு ஜே" என்று ஆவேசத்துடன் கோஷம் செய்யவே பலரும் பின்பற்றினர்.

* * *

ருவான்வெல கிராமச்சங்கத் தலைவர் சில்வாவும், தெகியோவித்த கிராமச்சங்கத் தலைவர் ஜயவர்த்தனவும், சிங்களத்தில் பேசுகையில், இங்கு வகுப்பு ஒற்றுமை நிலவுவதையும், இந்திய தோட்டத் தொழிலாளருக்குப்பிரஜா உரிமைகளைவழங்கவேண்டுமென்றும் கூறித்தொழிலாளர் ஒற்றுமை பற்றியும் குறிப்பிட்டனர் இருவரும்இடதுசாரியைச் சேர்ந்தவர்களாம். சிங்களப் பேச்சு உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. ஆனல் இதற்கு அவ்வளவு அவசியமில்லை என்பதை உணர்ந்தேன்.

தொழிலாளரில் பெரும்பாலோருக்கு தமிழ், சிங்களம் இரண்டும் தெரிகிறது. சிங்களத் தொழிலாளரும் பலர் இருந்தனர். அவர்கள் தமிழரா, சிங்களவரா? என்பதைக் கண்டு பிடிப்பது கஷ்டம்.

மத்தியானம் மழைக்காக ஒரு வீட்டு முன்புறம் நண்பருடன் ஒதுங்கினேன். அங்கு ஒரு பெண் வெள்ளைப்புடைவையும், சிவப்பு ரவிக்கையும் அணிந்து, தமிழில் பேசினுள். "நசநச வென்று மகாநாட்டில் பெண்டுகள் ஓயாமல் பேசுகிருர்கள். அதனுல் காதில் ஒன்றும் கேக்கலை. வூட்டுக்குப் போகிறோம்" என்ருள் ஒருவித ஏமாற்றத்துடன். அவள் புருஷனிடம் விசாரித்தபோது தான் அவர்கள் சிங்களவரென்பது தெரிந்தது!

என்னிடம் ஒருவர் தூய தமிழில் பேசினுர். தமிழரென்றே இருந்தேன். பெயரைக் கேட்டபோது "பண்டா" என்ருர்! வியப்பாக இருந்தது.

தோட்டப் பகுதிகளில் சிங்களவருடன் தமிழர் அமைதியாகவே சகோதரர்போல் வாழுகின்றனர். மொழிப் பிரச்சினை எதுவும் கிடையாது. சென்ற கலகத்தின்போது மற்ற இடங்களில் தீப்பற்றி எரிகையில் எட்டியாந் தோட்டையிலே எல்லா மக்களும் மிகவும் அமைதியாகவும் சமாதானமாகவும் இருந்துவந்ததாக, வரவேற்புத் தலைவர் நாயர் பெருமையுடன் சொன்னுர். அவரே இப்பகுதிக்கும், இம் மகாநாட்டுக்கும் உயிர்நாடி என்று கூறவேண்டும். அவர் பேச்சு தமிழ், சிங்களம், ஆங்கிலம் இம்மூன்றிலும் வழங்கப்பட்டது.

* * *

மகாநாடு கூடியுள்ள இடம் காடாகக் கிடந்ததாயும், அதையெல்லாம், இராப்பகலாகஉழை

(15-ம் பக்கம் பார்க்க)

## நேரு - அயூப்கான் சந்திப்பு புது டில்லியில் ஆலோசனைகள்

பாகிஸ்தானின் ஜனதிபதி ஜெனரல் அயூப்கான் இந்தியப் பிரதமர் நேருவை முதன் முதலாக புதுடில்லியில் செப்டம்பர் 1ஆம் திகதி சந்தித்து ஆலோசனைகள் நடாத்தப்போகின்ருர். பாகிஸ்தான் தலைநகராகிய கராச்சியிலிருந்து கிழக்குப் பாகிஸ்தான் தலைநகராகிய டக்காவிற்கு விமான மார்க்கமர்கச் செல்லும்வழியில் ஜனதிபதி அயூப்கானும் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி ஜனப் மன்சூர் குவாடீரும் புதுடில்லியில் பாலம் விமான நிலையத்தில் பிரதமர் நேருவைச் சந்தித்து ஒருமணி நேரம் கலந்தாலோசனை செய்வார்கள் எனத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து இரு நாடுகளின் மந்திரிகள், உத்தியோகத்தர்கள் அடங்கிய மாநாடுகள் பல நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதற்கு நேரு—அயூப்கான் முதற் சந்திப்பு அத்திவாரம் இடுமா?

### மத்திய உணவுமந்திரியின் ராஜினுமா

## இந்தியா

சென்ற சனிக்கிழமை லோக் சபையில் உணவுத்தானியங்களின் விலைகள் ஏறியிருப்பது குறித்து நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது இந்தியாவின் மத்திய உணவு விவசாய மந்திரி திரு. அஜீத் பிரசாத் ஜெயின் தாம் மந்திரி என்ற முறையில் கடைசித் தடவையாக உரை நிகழ்த்துவதாகக்கூறி, தாம் ராஜிநாமா செய்யத் தீர்மானித்திருப்பதை உறுதிப்படுத்தினர். இராச்சியங்கள் இடையே உணவுப் பொருள்கள் வியாபாரம் செவ்வனே நடைபெறவேண்டுமானுல் உறுதியான கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டியது அவசியம் என எச்சரித்தார். இக் கட்டுப்பாடுகள் இல்லாதபடியால்தான் மேற்கு வங்காளம் போன்ற சில இராச்சியங்களில் விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. உணவுப் பொருள்களை மக்களுக்கு விநியோகிக்கும் பொறுப்பு இராச்சிய அரசாங்கங்களுடையது என வற்புறுத்திக்கூறினர்.

உணவுப்பொருள்களின் விலைகள் ஏறிவருவது குறித்துச் சுமத்தப்பட்ட கண்டனங்கள் காரணமாகவும், மந்திரி சபையில் உணவுக் கொள்கை குறித்து எழுந்திருக்கும் அபிப்பிராய பேதம் காரணமாகவும் உணவு விவசாய மந்திரி ஜெயின் ராஜினமாச் செய்வதாகக் கருதப்படுகின்றது. 56 வயதான திரு. ஜெயின் 1950 இல் புனருத்தாரண மந்திரியாகப் பதவியேற்ருர். முன்னுள் உணவு மந்திரியான திரு. ரவி அகமத் கித்வாய் காலமானதும், 1954 இல் உணவு மந்திரியாக நியமிக்கப்பட்டார். முன்பு இருமுறை ராஜினமா செய்ய முயற்சித்த போது பிரதமர் நேரு விட்டுக்கொடுக்கவில்லை. இவருடைய ராஜினமா ஏற்றுக்கொள்ளப்பட்டு 24-8-59 இல் போக்குவரத்து மந்திரி, திரு. எஸ். கே. பட்டில் உணவு விவசாய மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

### கேரளம்

கேரளத்தின் ஜனதிபதி ஆட்சிப் பிரகடனம் சென்ற வியாழக்கிழமை (20-8-59) லோக் சபையினல் அங்கீகரிக்கப்பட்டது. சாதகமாக 270 வாக்குகளும் பாதகமாக 38 வாக்குகளும் கிடைத்தன. பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும் ஏனைய கொம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகளும் சாதகமாக வாக்களித்தன. வாக்களிப்பு விபரங்கள் அறிவிக்கப்பட்டதும் கொம்யூனிஸ்ட் அங்கத்தவர்கள் வெளியேறினர்கள்.

கேரள இராச்சியத்தில் வாக்காளரின் பட்டியல்கள் திருத்தம் செய்யப்படுகின்றன. மொத்தம் 114 தொகுதிகளில் 56 தொகுதிகளில் இவ்வேலை பூர்த்தியாகிவிட்டது. ஏனைய 58 தொகுதிகளிலும் இத்திருத்தம் செய்யும் வேலை சென்ற திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் மாதம் பிற்பகுதிவரை இவ்வேலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதால் இடைக்காலப் பொதுத் தேர்தல் டிசம்பர் மாதத்துக்கு முன் நடைபெறுவதற்கு இடமில்லை. பொதுத் தேர்தல் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் நடைபெறலாம் என்றும் கொம்யூனிஸ்ட் அல்லாத கட்சிகள் ஒரு முன்னணியை அமைத்துப் போட்டியிடும் எனவும் திரு. பட்டம் தாணுப்பிள்ளை கூறியிருக்கிருர்.

### அஸாம் தேசாதிபதியின் மறைவு

அஸாம் இராச்சிய தேசாதிபதி சையத் பசல்அலி 22-8 59 இல் இராச்சிய தலைநகராகிய சிலோங்கில் காலமானுர். 73வயதான இவர் பல மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். இவர் வகித்த பதவிகள் பின்வருமாறு :— சமஷ்டி நீதிமன்ற நீதிபதி 1947-50; இந்தியாவின் உயர் நீதிமன்ற நீதிபதி 1950-52; ஒரிஸா இராச்சிய தேசாதிபதி 1952-54; இராச்சியங்கள் புனரமைப்புவிசாரணைச்சபைத் தலைவர் 1953-55 ; அஸாம் இராச்சிய தேசாதிபதி 1956 தொடக்கம் ; 1941-ல் சேர் பட்டத்தையும் 1956 இல் பத்ம பூஷண் விருதையும் பெற்ருர். இவருடைய ஈமக்கிரியைகள் வாரணசி (காசி)யில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

ஒரிசா இராச்சியத்தின் பிரதம நீதியரசர் திரு. சந்திரேஷ்கர் பிரசாத் சிங்கா, தற்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பூஜ்யம் தபால்

திரு. டி. பி. இலங்கரத்ன,
உள் நாட்டு மந்திரி,
கொழும்பு.

அன்பரே!

மூன்று வருட காலமாகத் தொழில் மந்திரியாக இருந்த தாங்கள், எக்காரணம் பற்றியோ, அது வேண்டாமென்று விட்டு விட்டு, உள்நாட்டு அமைச்சரானீர்கள். ராமேச்சுவரம் சென்றும் சனீச்சுரன் பின்னேடே என்பது போல், இலாகா மாறியும் தங்களுக்குத் தொல்லை விடவில்லை.

கண்டி புரக்டரான கொலுகல, நம்பிக்கை மோசடி குற்றத்துக்காக சிறைத் தண்டனை பெற்றிருந்தார். அவருக்குக் கருணைகாட்டி ஜெயில் சுப்பிரெண்டெண்டுக்கு டெலிபோன் செய்து, அவரை ஆஸ்பத்திரி சிகிச்சைக்காக மாற்றச் செய்ததுடன், தினசரி அவர் மனைவியையும் நண்பர்களையும் தாராளமாகப் பார்த்துப் பேச அனுமதிக்குமாறு செய்தீர்கள்.

ஆனல் அவரோ ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி மறைந்து விட்டார். இப்போது வியன்னுவிலே இருப்பதாக ஒருவர் பார்லிமெண்டில் தெரிவித்ததுடன், தாங்கள் இவ்விஷயத்தில் தவறு செய்து விட்டதாயும், அதனல் ராஜினமாச் செய்ய வேண்டுமென்றும், வற்புறுத்தினர்.

தங்கள் கருணையுள்ளத்தையும், வாக்காளருக்குத் தாங்கள் செய்யும் கடமையையும் அவர்கள் உணரவில்லை. "என் தொகுதி மக்களுக்கு நான் செய்யவேண்டிய சாதாரண கடமையையே செய்தேன்" என்று தாங்கள் சரியான வாயாப்புக் கொடுத்தீர்கள்.

இதைக் கேட்டதும், தங்கள் தொகுதிக்குக் குடிவந்துவிடலாமா என்று என்னைப் போல் இத்தீவிலுள்ள பலரும், சிறப்பாக சிறைக் கைதிகளும் நினைக்கலாம். தங்களைப் போல் இவ்வளவு கருணையும், வாக்காளர்பால் இத்தனை அன்பும் உள்ளவர் எங்களுக்குப் பிரதிநிதியாகக் கிடைக்க முடியுமா?

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:

இந்தியாவிலே உணவு மந்திரி ஜெயின் கண்டனங்களுக்குப் பயந்து ராஜினமாச்செய்து விட்டது போல், தாங்களும் செய்ய வேண்டுமென்று சிலர் கேட்கிருர்கள். அதற்குத் தாங்கள் செவிசாய்த்துவிடமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

தாங்கள் அப்படி ராஜினமாச் செய்வதாகக் கூறவும் பிரதம மந்திரி தங்களை விடமாட்டார். ஒருவர் நீங்கினலும், மந்திரி சபை குலைந்துவிடலாமல்லவா?

மேலும் கைதி கொலுகல ஓடிவிட்டதால், பொதுமக்களுக்கு நீங்கள் மறைமுகமாக நன்மையே செய்திருக்கிறீர்கள். அக் கைதியை ஜெயிலில் வைத்துப் பராமரிக்கும் செலவு இனி பொதுமக்களுக்கு இராதல்லவா?

பூஜ்யம்

## நீர்வேலியில் அருணகிரிநாதர் விழா

நீர்வேலி, கந்தசுவாமி கோயிலில் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவிழா செப்டம்பர் மாதம் 5, 6, 7 ஆம் திகதிகளில் நடைபெறும். 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், குகஸ்ரீ ரசபதி உட்பட ஈழத்து அறிஞர்கள் பலர் இவ் விழாவிற் பங்குபற்றி விரிவுரைகள் ஆற்றுவார்கள். தேவார, திருப்புகழ் பஜனைகளும் நடைபெறும். இவ்விழாவிற்குப் பண உதவி செய்ய விரும்புவோர், திரு. சு. இராஜேந்திரக் குருக்கள், கந்தசுவாமி கோவில், நீர்வேலி என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆவணி மீ 13உ (29-8-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna.
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## கிழக்கு, வடக்கு வேற்றுமை!

இலங்கையிலே தமிழன்னை குற்றுயிராய்க்கிடக்கின்றாள். தன் மக்கள் ஒன்று சேர்ந்து, தன்னுடைய மானத்தைக் காத்து முன்போலவே தலை நிமிர்ந்து நடமாடச் செய்வார்களா என்றஏக்கத்துடனும் கவலையுடனும் அவள் கண்ணீர் விட்டுக்கொண்டு இருக்கின்றாள்.

இவ்வித பரிதாபமான சமயத்தில் ஈழத்திலுள்ள தமிழ் மக்கள் தங்களிடையே எவ்வளவு வேற்றுமை இருப்பினும், அவற்றை எல்லாம் மறந்து, தங்களைஈன்றெடுத்ததமிழன்னையின் கண்ணீரைத் துடைக்க முன்வர வேண்டியிருக்க, புதிய புதிய வேற்றுமைகளையும் பிளவுகளையும் கிளப்பிக்கொண்டுசந்தி சிரிக்கத் தங்களுக்குள் அடித்துக்கொள்வது வெட்கக்கேடு. அடிபட்டுக் கிடக்கும் தமிழன்னைக்கு இது வெந்த புண்ணிலே வேல்பாய்ச்சுவதுபோல் இருக்கும். மௌனமாக அவள் விடும் கண்ணீரை, தமிழ்த்தலைவர்கள் இன்னும் காணவில்லையா? அல்லது கண்டும், தங்கள் சுயநலப் பேராசைகளை விடமுடியாமல், தங்கள் அன்னைக்குச் செய்ய வேண்டிய கடமையிலிருந்தும் தவறுகின்றார்களா?

இலங்கையிலே சிறுபான்மையராகவுள்ள தமிழ்ச் சமூகத்தாரை, கூறு கூறாகப் பிளவுபடுத்தி, அவர்கள் மீது அரசியல், பொருளாதார ஆதிக்கம் செலுத்த சில அரசியல் வாதிகள் திட்டம் போட்டு வேலை செய்வதைப் பார்க்கின்றோம். 1956-ம் ஆண்டில் நிறைவேறிய சிங்களம் மட்டும் சட்டம், இத்தீவிலுள்ள எல்லாத் தமிழருக்கும் பொதுவாக விழுந்த அடியாகும். சென்ற வருடம் நடந்த கலவரங்களில் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்குப் பின்னராவது தமிழர் அனைவரும் தங்கள் வேற்றுமைகளை விட்டு, தமிழ் மொழி உரிமையைக் காக்க ஒன்றுபட்டு ஒத்துழைப்பார்களென்று எதிர்பார்த்தால், அதற்கு இப்போதைய நிலை பெரும் ஏமாற்றமும் மனவேதனையும் அளிப்பதாக இருக்கின்றது.

தமிழ் மக்களிடையே சாதி. சமய வேற்றுமைகள் ஒருபுறமிருக்க, புதிதாக கிழக்கு, வடக்கு மாகாண வேற்றுமைகள் இப்போது கிளப்பப்பட்டு வருகின்றன. இந்த வாக்குவாதக் குப்பைகளைக் கிளறிவிட்டு, இதில் யார் சரி, யார் தவறு என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவது பயனற்ற வேலை. இந்த வேற்றுமை வளருமாயின், அது எல்லாத்தமிழரினதும் அரசியல் தற்கொலையில் தான் முடியும்.

தமிழரைப் பலவிதங்களிலும் பிளவு படுத்தி வீழ்த்த திரை மறைவில் முயற்சிகள் நடைபெறும் இச்சமயத்தில், தமிழரின் இன்றைய பெரிய அரசியல் கட்சியான தமிழரசின் தலைவர்களுக்குப் பெரிய பொறுப்புண்டு. அரசியல்வேறுபாடுகள் என்ன இருப்பினும், தமிழ்மொழி உரிமையை ஆதரிக்கும் எல்லாரையும் ஒன்று சேர்த்து அவர்களது ஒத்துழைப்பைப் பெற முன்வர வேண்டும். சமசமாஜக்கட்சியின் பொருளாதாரக்கொள்கை வேறாயினும், மொழி உரிமை விஷயத்தில், தமிழை அவர்கள் பூரணமாக ஆதரித்தே நிற்கிறார்கள். அவ்வித கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறத்தக்க விரிந்த மனப்பான்மையுடன் இனிக் காரியங்களைச் செய்ய வேண்டிய சமயம் வந்துவிட்டது. தேர்தல் காரணங்களை இதற்குக் குறுக்கே நிற்க அனுமதிக்கக்கூடாது. தீர்க்கதரிசனமும், தியாகபுத்தியும், அளவுகடந்த பொறுமையும், கட்டுப்பாடும் தேவை. இவை மூலந்தான் தமிழ் அன்னையின் கண்ணீரைத் துடைக்க முடியும். தமிழரிடையே வேற்றுமைகளை வளர்ப்பவர்கள் தமிழ் அன்னையின் சாபத்துக்காளாவார்கள்.

## வரவு செலவு விவாதமும் தமிழ்ப் பிரதிநிதிகளும்

இலங்கையிலுள்ள மொத்தம் 16 மந்திரிகளில் ஒன்பது பேரின் நிர்வாகத்தைப் பற்றி பார்லிமெண்டில் ஆராய நேரமே இல்லை. கல்வி, தொழில், கைத்தொழில், போக்கு வரத்து, தேசியமயமாக்கப்பட்ட சேவைகள், வர்த்தகம், தபால், சமூக சேவை முதலிய ஒன்பது மந்திரிமாரின் நிர்வாகத்தைப்பற்றி சிறிதும் ஆராயாமல், 'பட்ஜட்' நிறைவேறியுள்ளது பெரிய குறை.

இவ்விதம் நேரிடுவது இது முதல் தடவையல்ல. இதைத் தீர்க்க எல்லாக் கட்சியினரும் சேர்ந்து ஒத்துழைத்து ஒரு முன்னேற்பாட்டைச் செய்தல் வேண்டும். சபை குழுவாக மாறி மான்யங்களை நுணுக்கமாக ஆராய ஒதுக்கப்படும் நாட்களை, ஒவ்வொரு மந்திரிக்கும் முக்கியத்துவத்துக்குத் தக்கபடி, பிரித்து ஒதுக்கி, அந்தந்த விவாதத்தைக் குறித்த காலத்துக்குள் முடிக்க வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்திக் கொண்டால் இந்தக் குறையைத் தீர்த்துக் கொள்ளலாம். இனியாவது இதற்கான ஏற்பாட்டைச் செய்தல் அவசியம்.

விவாதகாலத்தில் "கோரம்" என்ற 21 பிரதிநிதிகள் கூட இல்லாமல் சபை பல தடவை தள்ளி வைக்க நேர்ந்துள்ளது. நடந்த விவாதமும் தூங்கி வழிந்ததாம். தமிழ்ப் பிரதிநிதிகளில் சிலரையும் சபையில் காண்பது அபூர்வமாக இருந்ததாயும், அவர்களும் பொதுவாக நாட்டு விஷயங்கள் பலவற்றில் கவனம் செலுத்தாமல் இருந்ததாகவும், நமது "பார்லிமெண்ட் நிருபர்" தெரிவிக்கின்றார்.

மக்களிடம் தேர்தல் காலத்தில் மன்றாடித் தெரிவு செய்யப்பட்டவர்கள், பார்லிமெண்ட் கடமைகளில் தங்கள் நேரத்தையும் கவனத்தையும் பூரணமாகச் செலுத்த வேண்டும். அப்படி முடியாதவர்கள், ராஜினாமாச் செய்து விலகி விடுவதே நல்லது.

## நேரு - அயூப்கான் சந்திப்பு

குருஷேவும் ஐஸனேவரும் சந்தித்துப் பேசுவது எவ்வளவு முக்கியமானதோ, அதே போன்றது இவ்வாரம் புதுடில்லியில் பாகிஸ்தான் தலைவர் அயூப்கானும், பாரதப் பிரதமர் நேருவும் சந்தித்துப் பேசுவது.

கிழக்குப் பாகிஸ்தானுக்குச் செல்லும் வழியில், புதுடில்லியிலே இறங்கி பாரதப் பிரதமருடன் பேச பாகிஸ்தான் தலைவர் சம்மதித்துள்ளார். இச்செய்தி இந்தியா, பாகிஸ்தான் இந் நாடுகளில் மட்டுமன்றி, பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளிலும் பொதுவாக வரவேற்கப்படுகின்றது.

சுதந்திரமடைந்தது முதல் இவ்விரு நாடுகளுக்கும் நல்லுறவு இல்லை. இரண்டும் போட்டா போட்டியுடன் ஆயுத முஸ்தீபுகளைச் செய்துகொண்டிருக்கின்றன. இதனால் இவ்விரு நாடுகளையும் சேர்ந்த 50 கோடி மக்களின் முன்னேற்றமும் தடைபட்டுள்ளதுடன், இப்பகுதியின் சமாதானமும் பலமுற முடியாமல் உள்ளது.

இரு தலைவர்களும் என்ன பேசப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. காஷ்மீர் எல்லைத் தகராறுகளைப்பற்றிப் பேசுவதாயின், அதற்கு இச்சந்திப்பால் முடிவு காண முடியுமா என்பது சந்தேகமே. இவ்விஷயத்தில் இரு சார்பினரும் அநேகமாகப் பிடிவாதமாகவே உள்ளனர். என்றாலும் இதற்கிடையே புது சீனப்படைகள், காஷ்மீர், பூடான் முதலிய பகுதிகளில் மெதுவாகப் புகுந்து வருவதாகச்செய்திகள்கூறுகின்றன. திபேத் நெருக்கடிக்குப் பின், இந்தியா—புதுசீன உறவு அவ்வளவு திருப்தியாக இல்லை. ஆகவே தங்களுக்குள் எவ்வளவு வேற்றுமைகள் இருப்பினும், தங்கள் பொது நன்மையைப் பாதுகாத்துக்கொள்ள இரு நாட்டுத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேலும் இருதேச பொருளாதார விருத்திக்கும், மக்களின் சுபிட்சத்துக்கும், இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை இரு தேசத் தலைவர்களும் உணர்ந்தே இருப்பர். இந்தச் சந்திப்பால் உடனடியாக என்ன பலன் கிடைக்குமென்பதை திட்டமாகச் சொல்லுவதற்கில்லை. என்றாலும், இரு தலைவர்களும் நேரில் அறிமுகப் படுத்திக்கொண்டு பேசுவதே, இருநாட்டு மக்களிடையேயும் புது உறவு ஆரம்பமாக வழி உண்டாக்கும்.

அடுத்த மாதம் நேருஜி ஆப்கானிஸ்தான் செல்லும் வழியில் லாகூரில் இறங்கி, தலைவர் அயூப்கானை மீண்டும் சந்திக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது. அண்டைவீட்டுக்காரர் இருவரும், நேரில் அடிக்கடி கலந்து பேசுவதால், பழைய மனஸ்தாபங்களை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வழி பிறப்பதுடன், இரு தேச மக்களின் சுபிட்சத்தையும், ஆசிய சமாதானத்தையும் பலப்படுத்துவதாகும்.

## வகுப்புக்கலக நஷ்டஈடு

சென்ற வருடம் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் போது எத்தனையோ பேர் உயிர் நீத்தனர். வேறு பலர் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாயினர். இவர்களின் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு கொடுக்கும் திட்டம் ஒன்றினை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா சமர்ப்பித்துள்ளார். இத் திட்டத்தை அரசாங்க அதிபர்கள் பரிசீலனை செய்து வருகின்றனர். பிரதிநிதிகள் சபையில் இதற்கென ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்து அரசாங்க ஊழியர்களாகப் பணியாற்றுகையில் இறந்தவர்களுக்கு உபகாரச்சம்பளம்கொடுக்கவேண்டுமெனவும், அரசாங்கஊழியர்களாக இல்லாதவர்களுக்கு தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டத்தின்பிரகாரம் நஷ்டஈடு அளிக்கப்படவேண்டுமெனவும் திரு. ஸ்ரீகாந்தாவின் திட்டத்திற்காணப்படுகின்றன.

இதுசம்பந்தமாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட சபையானது எந்தவித நஷ்டஈடும் கொடுக்க முடியாதெனத் தெரிவித்திருந்தது. ஆனால் இன்று அமைதியான ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் இதுசம்பந்தமாகப் புனராலோசனை செய்து வகுப்புக்கலவரத்தில் உயிரிழந்த அரசாங்க ஊழியர்களுக்கும் ஏனையோருக்கும் நஷ்டஈடு அளிக்க முன்வருமாயின் அது பேருதவியாகும்.

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையே கோரமான வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தது. இதற்குப் பலியானவர்கள் தமிழர்களாயினும்சரி, சிங்களவராயினும்சரி, அவர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு அளித்தேயாக வேண்டும். இத்துறையில் அரசாங்கம் ஏனோதானோ என்று இருந்துகொண்டாலும், தமிழ்ப் பிரதிநிதிகளும் தயாளசிந்தை படைத்த ஏனைய எம். பிக்களும் ஊக்கம் எடுத்து ஆவன செய்யத் தவறக் கூடாது. அழுதபிள்ளை தான் பால்குடிக்கும்.

## பொலிசாருக்கு வேண்டுகோள்

சென்னை மாநிலம் எங்கும் பொலிஸ் நூற்றாண்டு விழா சென்றவாரம் கொண்டாடப் பெற்றது. இச் சந்தர்ப்பத்தில் பாரதத்தின் குடியரசுத் தலைவர் டக்டர் இராஜேந்திர பிரசாத் பொலிஸ் பகுதியினருக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளை இங்கு குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது. டக்டர் ஒருவர் பொது மக்களுக்கு எவ்வித கண்ணோட்டத்துடன் பணியாற்றுகின்றாரோ, அவ்வாறே பொலிஸ் துறையைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென இராஜன் பாபு குறிப்பிட்டிருந்தார். நோயாளியைக் குணப்படுத்தும் நல்ல நோக்கத்துடன்தான் டக்டர் கசப்பான மருந்தைக் கொடுக்கின்றார். சிலசமயம் அறுவை சிகிச்சையானது நோயாளிக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தாலும் அவரின் நலனுக்காகவே அவ்விதமான சிகிசசை முறையையும் டக்டர் கையாளுகின்றார். இவ்வாறு வேதனையைக் கொடுத்து வருத்தத்தை நீக்கும் ஒரு டக்டர் போலவே பொலிஸ் பகுதியினரும் பொதுமக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு நேர்மையுடனும் திறமையுடனும் பணியாற்ற வேண்டும். சென்னை மாநிலப் பொலிசாருக்கு டக்டர் இராஜேந்திரப் பிரசாத் விடுத்துள்ள வேண்டுகோளை இலங்கைப் பொலிஸ் பகுதியினரும் கவனித்துத் தங்கள் கடமைகளை நாணயத்துடன் நிறைவேற்றி மக்களின் நம்பிக்கையைப் பெறலாம் அல்லவா?

## வரவு செலவுத்திட்ட விவாதத்தில் தமிழ் எம்.பிக்கள் அசிரத்தை

— நமது பார்லிமெண்ட் நிருபர் —

பதினான்கு அமைச்சுகளில் ஆக ஒன்பது அமைச்சுகளின் மான்யங்களே சென்றவாரம் முடிவுற்ற வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மற்ற ஐந்தையும் விவாதிப்பதற்கு நேரம் போதவில்லை. காரணம்: பல அங்கத்தவர்கள், முக்கியமாக எதிர்க்கட்சி அங்கத்தவர்கள், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேர எல்லைகளுக்குள் பேச்சை முடிக்காமல் அளந்து கொட்டிக் கொண்டு போனதுதான். பிரசங்கங்களுக்கு முன்கூட்டியே நேரம் ஒதுக்கும் பிரதம மந்திரியும் எதிர்க்கட்சித் தலைவரும் சபாநாயகரும் இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாயும் உறுதியாயும் இருந்திருந்தால், பாராளுமன்றத்தில் முன்னெப்போதும் ஏற்படாத இந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்காது. இதுவுமன்றி, வரவு செலவுகளுடன் சம்பந்தமில்லாத சில பிரச்சினைகளும் சபையின் நேரத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. சென்றவாரம் நாம் குறிப்பிட்ட நீதிமந்திரி, கைலஞ்ச விசாரணைக் கொமிஷனர், மாத்தளைப் பிரதிநிதி விஷயமும், சிறையிலிருந்து தப்பியோடி மாயமாய் மறைந்துவிட்ட ஒரு கண்டிப் புறொக்டரின் விஷயமும் சபையின் அருமருந்தன்ன நேரத்தைப் பறித்துவிட்டன. முதற்சொன்ன விஷயத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா எவ்வளவு வீறாப்புடன் பேசினாரோ, அதுபோலவே பின்னைய விஷயத்தில் பீற்றர் கெனமன் காரசாரமாகப் பேசினார். கொல்வினுடைய பேச்சை ஒரு சூறாவளிக்கு ஒப்பிட்டால் பீற்றரின் பேச்சை இளம் தென்றலுக்கு ஒப்பிடலாம்.

### சபைக்குள் சாராயம்

உள்நாட்டு மந்திரியின் மான்யங்கள் பற்றிய விவாதம் நடந்தபோது றொபேட் குணவர்த்தன ஒரு வடிசாராயப் (கசிப்பு) போத்தலையே சபைக்குள் கொண்டுவந்து அதை மோந்து பார்க்கும்படி சபாநாயகரைக் கேட்டார். பாவம், அவர் என்ன செய்வார், மோந்துதான் பார்த்தார்! சாராய விலை பத்து ரூபாயாக உயர்த்தப்பட்டபின், கள்ளத்தனமான வடிசாராயம் காய்ச்சுதல் நாடுமுழுவதும் பரவிவிட்டதென்றும், இந்த 'நெருப்புத்தண்ணீர்' ஏழை மக்களின் உயிரையே உறிஞ்சிவிடுகிறதென்றும் பல அங்கத்தவர்கள் எடுத்துரைத்தார்கள். ஒரு போத்தல் சாராயத்துக்கு 2 ரூபாய் அதிகமாக வாங்கி வருமானம் தேடும் உள்நாட்டு அமைச்சு, வடிசாராயத்தின் கெடுதியை உணரவில்லை.

### அசிரத்தையா?

வரவுசெலவுத்திட்ட விவாதம் நடக்கையில் சபையில் இருந்த எவரும் ஒரு விஷயத்தை மட்டும் மறக்க முடியாது. தமிழ்ப் பிரதிநிதிகள், இந்த அதிமுக்கியமான விவாதத்தில், எவ்வளவுதூரம் பங்கெடுத்துக் கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறார்களோ, அந்தஅளவுக்கு அவர்கள் பங்குபற்றவில்லை என்பதைத்தான் ஆச்சரியத்தோடும் வருத்தத்தோடும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. வரவு செலவுத்திட்டத்தைஅக்குவேறுஆணிவேறாகப் பிய்த்தெடுக்கும் ஜி. ஜி. யைக்கூடக்காணவில்லை. கிழவர் சேனநாயக்கா காலத்தில் இத் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்த சுந்தரருமில்லை! இவர்களுக்கெல்லாம் என்ன வந்துவிட்டது? வாக்கெடுப்புக்கு மட்டும் சுந்தரர் வந்தார். ஈற்றில் அரசாங்கக் கட்சி எப்படியாவது வெல்லும் என்பதற்காக வாயை மூடிக்கொண்டிருப்பதா? பாராளுமன்றத்துக்கு இவர்களை அனுப்பிவைத்த தமிழனுக்கு இது நம்பிக்கைத் துரோகமல்லவா? இது அசிரத்தையா, அல்லது தோல்வி மனப்பான்மையா?

# இரத்தினக் கம்பளம்

பதுமன்

வானம் பார்க்கும் பூமியாகிய யாழ்ப்பாணத்தில் வனப்புமிக்க காட்சிகளைக் காண்பது அரிது என்ற குறைபாடு நெடுநாட்களாக இருந்துவருகின்றது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த கிடுகு வேலிகளே நெளிந்து செல்கின்றனவென்று தென்னிலங்கையிலிருந்து வருவோர் எள்ளி நகையாடுவதுமுண்டு. சென்ற வருடம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பத்திரிகையாளர் ஒருவர் 'கிடுகுத்திரைக்குப் பின்னல்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தைப்பற்றிய சில கசப்பான உண்மைகளை அம்பலப்படுத்தியிருந்தார். சில காரியங்களை அவர் மிகைப்படுத்திக் கூறியது உண்மைதான் எனினும், அவர் கிடுகு வேலிக்குப் பின்னல் நின்றுகொண்டு எட்டி எட்டிப் பார்த்தபடியால் அரைகுறையான சில தகவல்களையே அவர் சுருட்டிக்கொண்டுபோய் கொழும்பிலிருந்து அவற்றை உதிர்த்தினர்.

இப்படியெல்லாம் எதற்காக எழுதுகின்றேன் என்றல் மாற்றத்தை விரும்பாத யாழ்ப்பாணம் இப்போது எல்லாம் அந்த மூலையிலும் இந்த முடக்கிலும் மாற்றமடைந்துவருகின்றதென்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான். இந்த மாற்றங்கள் யாழ்ப்பாணப் பட்டினத்தை வனப்புமிக்க நகரமாக்கினல் அது நல்லதுதானே!

## சேற்றில் செந்தாமரை!

இந்த நோக்கத்துடன் யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு மேற்கேயுள்ள சேறும் சகதியும் நிறைந்த குளம் இன்று ஆழமாக அகழப்படுகின்றது. இதனைத் துப்புரவாக்கி சுற்றிலும் சிமெந்தால் அணைக்கட்டுவேலைகள் நடைபெறப் போகின்றன. தொழிலாளர் பட்டாளம் அங்கு சுறுசுறுப்பாக உழைத்துவருவதைப் பார்க்கும்போது 'புல்லுக் குளம்' என்ற பெயருடன் நகரின் மத்தியிலே நாற்றமெடுத்துக்கொண்டிருந்த இந் நீர்நிலை விரைவிற் பூங்குளமாகப் பொலிந்து விளங்குமாயின் அதில் ஆச்சரியம் எதுவுமில்லை. சேற்றில் முளைத்த செந்தாமரை என்று யாழ்ப்பாணம் பெருமையடித்துக்கொள்ளலாம்.

## படகு வீடு

யாழ்ப்பாணம் மாநகரசபை பூங்குளத்துடன் திருப்தியடையப்போவதில்லை. படகு வீடுகளை அமைத்துப் பூங்குளத்தில் உல்லாசமாக மிதந்து விளையாடுவதற்கான வழிகளையும் மக்களுக்கு மேயர் செய்துகொடுக்கத்தான் போகின்றர். அதுமாத்திரமா? இப் பூங்குளத்தைச் சுற்றி அமைக்கப்படவிருக்கும் பூங்கா மின்சார தீபாலங்காரத்துடன் 'டால்' வீசுமாம். இவற்றையெல்லாம் குசாலான ஆசனங்களில் இருந்துகொண்டு நாம் எல்லோரும் அனுபவிக்கத்தான் போகின்றேம்.

## திருவிழாவில்

நல்லூர்த் திருவிழாவைப் பற்றி இங்குப் பதுமன் எழுதிய குறிப்பு பொலிஸ் புலிகளின் கண்ணிற் பட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற கார்த்திகைத் திருவிழாவின் போது பொலிசார் 'ஜரூராக'க் கடமையாற்றினர் என அறிகின்றேன். இதனல் பக்தர்களிற் சிலர் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாயினர். பெண்மணிகள் கூடிநின்ற இடத்தைப் பார்த்துக்கொண்டு அவர்களிற் சிலர் நின்றதாகவும், இளைஞர் ஒருவர் சிறு 'சேட்டை' விட எத்தனித்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுப் பொலிஸ் புலி ஒருவரிடம் 'மளார் மளார்' என வாங்கிக் கட்டினராம்.

# "இலங்கைக்கும் ராஜாஜியின் புதிய கட்சி அவசியம்"

## இன்றுள்ள அரசியல் நிலைபற்றி ஒரு முக்கிய தமிழ்த் தலைவரின் கவலை

(சாணக்கியன்)

ராஜாஜியின் புதிய சுதந்திரக்கட்சியைத் தழுவி, இலங்கையிலும் ஒரு புதிய கட்சியை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் அதிகரித்திருக்கிறதென்று அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுள்ள ஒரு முக்கிய தமிழ்த் தலைவர் கருதுகின்றர். ஆனல் இங்கு ஒரு ராஜாஜியும் பண பலமும் இல்லையே என்று அவர் கவலை தெரிவித்தார்.

"இப்போதுள்ள எம். ஈ. பி. யு. என். பி. கட்சிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தலைகாட்ட முடியாதபடி மொழி முதலிய வகுப்புவாதக்கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றனர். தமிழரசுக்கட்சியும், சிங்களவர்கள் அதிற்சேர முடியாதபடி ஒருவித வகுப்பு வாத முறையையே பின்பற்றி வருகின்றது.

"இடது சாரிக்கட்சிகளோ ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாதபடி இயங்குகின்றன.

"இதைத்தவிர சிலர் மத வெறிகளைக்கிளப்ப முற்பட்டிருக்கிறர்கள். பௌத்தர்களும் இந்துக்களும் சேர்ந்து, கத்தோலிக்கரையும், கிறிஸ்தவர்களையும் ஒழிக்கவேண்டுமென்ற ஆபத்தானயோசனைசிலவட்டாரங்களில் நிலவுகின்றது.

"பொதுத் தேர்தல் வரவர நெருங்கிவருகிறது. அது நெருங்க நெருங்க, வகுப்பு துவேஷப்பிரசாரங்களும் அதிகரிக்கலாம். பார்லிமண்ட் ஸ்தானங்கள் 150க்கு உயர்ந்துள்ளதால் துவேஷப்பிரசாரமும் அதிகரிக்கும்.

"மலை நாட்டுத் தமிழரைத் தாக்கி தீவிர பிரசாரங்கள் நடைபெறுகின்றன. இலங்கையில் பௌத்தமத ராஜ்யத்தை ஏற்படுத்தச் சிலர் கங்கணம்கட்டிக்கொண்டு அனுராதபுரத்தில் கூட்டம் போட்டுள்ளனர். கிறிஸ்தவர் ஆஸ்பத்திரியும் நடத்தக்கூடாதாம்! இந்தத் துவேஷம் எங்குதான் முடியுமோ?

"நாட்டில் இன்றுள்ள இவ்வித அலங்கோல அரசியல் நிலையை நினைக்கையில், சாதாரண மக்களுக்கு, "இதற்குத்தான நாம் சுதந்திரம் பெற்றேம்" என்ற திகைப்பும் எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் பீதியும் ஏற்படுவதாகவுள்ளது.

விலைவாசிகளும் உயர்ந்துகொண்டுவருவதால் பொதுமக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகின்றனர்.

"இந்நிலையில் இங்கு ராஜாஜியின் சுதந்திரக்கட்சிபோல், ஒரு புதிய கட்சி தெய்வீக நம்பிக்கையுடன் நாட்டை நடத்திச் செல்ல ஏற்படுவது அவசியம்தான். ஆனல் இங்கு ராஜாஜியைப்போன்ற துணிச்சல் மிகக தியாக வீரர் ஒருவர்கூட இல்லையே" என்று அத்தலைவர் கவலை தெரிவித்தார்.

## அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை 16வது ஆண்டு மாநாடு

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பதினருவது மாநாடு 30-8-59 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30க்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெறும். மேயர் திரு. தங்கராசா துரையப்பா மாநாட்டைத் திறந்துவைப்பார். அன்று மாலை 5-30க்கு யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திற் பொதுக்கூட்டம் நடைபெறும். நகர மண்டபத்திலிருந்து 4-30 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு, புதிய பஸ் நிலையத்தை அடையும்.

## திருக்கைலாய யாத்திரை விரிவுரையும் படக்காட்சியும்

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் இன்று 29-8-59 மாலை 7 மணிக்கு யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் தமது திருக்கைலாய யாத்திரை பற்றி படக்காட்சியுடன் விரிவுரையாற்றுவார். மேயர் ஏ. தங்கராசா துரையப்பா தலைமை தாங்குவார்.

## இலங்கை – இந்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் ஒன்றுதான் போக்குவரத்துக்கு இருந்தது. இந்தப்பாதையில் நஷ்டம் வருகிறதென்று காரணம் கூறி, கப்பலை வாரத்தில் மூன்றே நாள் விடுவது இருதேச நல்லுறவுகள் பலப்படுவதற்கு உதவாததுடன், பிரயாணஞ் செய்யும் பொது மக்களுக்கு பெரும் இம்சை செய்வதாகும்.

இரு தேச அரசாங்கப் பிரதிநிதிகளும் நேரில் கலந்து பேசி, இந்த கூடாத உத்தரவை ரத்து செய்வதுடன், இருதேச யாத்திரை வசதிகளை அதிகரிக்கவேண்டும். பொதுஜன நலத்திற்கான இவ்விஷயத்தில் சற்றே நஷ்டம் ஏற்பட்டாலும் அதைக் கவனிக்கப்படாது. இவ்விஷயத்தில் இலங்கை அரசாங்கம் இந்திய தூதுவருடன் கலந்து இந்தத் தீர்மானத்தை உடன் மாற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று, பிரயாணம் செய்யும் பொது மக்கள் பெரிதும் விரும்புகின்றர்கள்.

"இந்தியாவை வந்து பாருங்கள்" என்று ஒருபக்கம் பிரசாரம் செய்யும் இந்திய அரசாங்கம், மறுபக்கம் இவ்விதம் பிரயாணத்துக்குப் புதிய தடைகள் போடுவது முரண்பட்ட நடவடிக்கையாகும். இதைப் பற்றி எடுத்து விளக்கினல், இத் தீர்மானம் மாற்றப்படுமென்றே ஆவலுடன் நம்பப்படுகிறது.

* * *

கொழும்பு ஸ்ரீராம கான சபையின் ஆதரவில் சென்ற புதன்கிழமை ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி விழா நடைபெற்றது. ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி வரானந்தா, ஸ்ரீகிருஷ்ணவதாரத்தின் மகிமையையும், பகவத்கீதை நம் வாழ்வு மேம்படுவதற்குக் காட்டும் நெறியினையும்பற்றி விளக்கிப் பேசினர்.

* * *

சேர் அருணசலம் மகாதேவா தம்பதிகளின் தலைமையிலே ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரியின் இன்னிசைக் கச்சேரி சென்ற செவ்வாய்க்கிழமை சங்கீத நாட்டிய சபையின் ஆதரவில் லேடீஸ் கல்லூரியில் நடைபெற்றது. அன்று அவர் பாடிய கல்யாணி, காம்போதி ராகங்கள் கரகோஷங்கள் பெற்றன. சபையின் சார்பாக ஸ்ரீ கணேசராஜா நன்றி கூறினர்.

## பண்டிதமணிக்குப் பாராட்டு விழா



சைவத்தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பாராட்டு விழா 29-8-59 சனிக்கிழமை காலை 8 மணிக்கு திருநெல்வேலி சைவவித்தியாசாலையில் ஆரம்பமாகின்றது. வெள்ளிக்கிழமை காலை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் தென்மராட்சிப் பழைய மாணவர் சார்பில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பண்டிதமணியின் நூல் வெளியீடும் வரவேற்பும் நடைபெற்றன.

## புத்தபிக்குகளின் அரசியற் 'சத்தம்'!

அனுராதபுரத்தில் சென்ற வாரம் சிங்கள ஜாதிக சங்கத்தின் பிரசாரக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் சிங்கள ஜாதிக சங்கம் ஓர் அரசியல் கட்சியாக மாற்றப்பட்டது. எதிர்வரும் பாராளுமன்றத்தில் இக்கட்சியும் மற்றைய கட்சிகளுடன் போட்டியிடும்.

இலங்கையை ஒரு பௌத்த, சோஷலிசக் குடியரசாக்கவிரும்புகிறது இப்புதிய 'பௌத்த' கட்சி. சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது அதன் மற்றேர் அவா. பொருளாதாரத்தைப் பெருக்க யோசித்துள்ள வழிவகைகளில் முக்கியமாக விளங்குவது 'அரசியல் சட்டம்'. அந்த அரசியல் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்தப் போகிறர்களாம்!

அனுராதபுரப் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஒரு பிக்கு புத்த சமயத்துக்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டெனவும், ஒன்றில்லாமல் மற்றது வாழவும் முடியாதென்றும் கூறியுள்ளார். முற்றும் துறந்த ஞானி புத்தர். அவருடைய சீடர்களோ அவருக்கு எதிர் மாருக விளங்குகிறர்கள். வாழ்க்கையில் பாசமும், பற்றுக்கோடும் தான் பிரச்சினைகளுக்கு எல்லாம் அடிப்படை என்றுகூறிச் சென்ற அந்த அருள் வள்ளல் எங்கே? அரசியல்தான் எல்லாம் என்று கண்டுள்ள இந்த ஞானிகள் எங்கே?

இலங்கையில் இன்று குழப்பமும், அமைதியின்மையும் நிலவி வருகின்றனவாம். ஆகையால், இந்த பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபட்டு நாட்டைக் காப்பாற்ற வேண்டுமாம். கிணற்றுத் தவளைகள் மாதிரி இனி மேலும் ஆலயங்களுக்குள் அடங்கியிருத்தல் ஆகாதாம். நாட்டைச் சீர் திருத்தப் புறப்படும் இப் புத்தபிக்குகள், நாட்டின் இன்றைய நிலைக்கு யார் காரணமென்பதைச் சற்றே ஆலோசித்தார்களேயானல் இப்படியெல்லாம் திசைமாறி இறங்கமாட்டார்கள்.

பாராளுமன்றம் ஏறுவதோ அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதோ இவர்களின் நோக்கமல்லவாம். பின்னர் எதற்காக இந்தக்கட்சி? ஏன் இந்தப் பிரசாரக் கூட்டங்கள்? பேசாமல் தியானத்தில் இருக்கலாமே! அப்படியெல்லாம் தியானித்துக்கொண்டிருந்தால் போதுமா? அழகிய இலங்கைத் தீவின் அரசியல் ஊழல்களையும் ஊதாரித்தனத்தையும் இவர்கள்தான் அகற்றப்போகின்றர்களாம்!

இலங்கை அரசியல் அழுக்கு நிறைந்த சாக்கடையாகத் தான் தோன்றுகிறது. ஆனல், புத்தபிரான்மேல் பக்தி பூண்டுள்ள பிக்குகள் இச் சாக்கடைகளில் இறங்கலாமா? பரிசுத்தம் நிறைந்தவர்கள், சேற்றை அள்ளிப் பூசுவது அழகாகுமா? புத்த தர்மத்துக்கு மாசு விளைப்பது சரியா? ஏன்? இன்னுமொரு முக்கியமான கேள்வி உண்டு. இத்திருக் கூட்டம் அரசியலில் ஈடுபடுவதன் மூலம் இலங்கை அரசியலின் அழுக்கு நீங்குமா? அதுவேறு விஷயம் என்பார்கள் அவர்கள்.

இவ்வளவு சொல்லியும், அரசியல் வாதிகளாகவே இந்த பிக்குகள் விளங்க விரும்பினல், இவர்களுக்கு ஒரு நல்ல யோசனை கூற விரும்புகின்றேம். மஞ்சள் நிறக்காவி உடுப்பைக் கழற்றிவிட்டு வீரபுருடர்களாக இவர்கள் வீதிகளில் உலாவட்டும். அதன் பின்னர், இவர்கள் அரசியல் சாக்கடையில் (மூக்கைப் பொத்திக்கொண்டு) இறங்கி ஆழத்தைப் பார்க்கட்டும். அப்படியானல் அரசியலைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களே இவர்களைக் குறைகூறமாட்டார்கள்.

—ம. ம.

## சிறு குழந்தையின் பரிதாப மரணம்

கிணற்றடிக்கு கால் முகம் கழுவச் சென்றபோது தனது இரண்டரை வயதுக் குழந்தை (ஸ்ரீ ரஞ்சினி) கிணற்றுக்குள் கிடக்கக் கண்டதாக கொக்குவிலைச் சேர்ந்த நெடுங்கேணி காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா அக்குழந்தையின் மரணம் பற்றி நடைபெற்ற விசாரணையின் போது கூறினர். குறிப்பிட்ட விசாரணையை யாழ்ப்பாணப் பகுதி மரண விசாரணையாளர் திரு. எஸ். கனகரத்தினம் நடத்தினர்.

இப்பரிதாப சம்பவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை (23. 8. 59)ல் நடைபெற்றது. காலைச் சாப்பாட்டுக்குப் பின்னர் தண்ணீர் தருமாறு அக் குழந்தை கேட்டதாகவும் அச்சமயம் அலுவலாக இருந்த தாயாரின் காதுகளுக்கு அது எட்டவில்லையென்றும், குழந்தை தானகவே கிணற்றடிக்குத் தண்ணீர் அள்ள எத்தனித்ததாகவும் அதன் விளைவாக மரணத்துக்குள்ளாயிற்றெனவும் தெரிகிறது.

ந. நி.

## கச்சேரி ஊழியர்மீது கைலஞ்சக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கை இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். 'விஸா' முடிவடைந்தவொரு இந்தியரிடம், இவர் முந்நூறு ரூபாய் வாங்கியதாகத் தெரிகிறது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

மாதர் பகுதி

**முதன் முதலாகத் தாயாகப்போகும் தன் தங்கைக்கு ஒரு டாக்டரின் இரண்டாவது கடிதம். முதலாவது கடிதம் 18-4-59 இதழில் வெளியாகியுள்ளது.**

# அருமைத் தங்கைக்கு அறிவுரை

'நந்தி'

'நாம் மாத்திரம் வாழ்ந்தால் போதாது. எல்லோருமே வாழ வேண்டும்' என்பது தமிழருக்குரிய பண்புகளில் ஒன்று. இது உனது உள்ளத்தில் ஊறியிருக்கிறது, இல்லையேல் நான் உனக்கு எழுதிய கடிதத்தைப் பத்திரிகைக்கு அனுப்பி மாதர் பகுதியில் வெளியிடச் செய்வாயா?

'அண்ணு, நீங்கள் பெரிய விஷயங்களை இனிய தமிழில் எழுதுகிறீர்கள். உங்கள் அறிவுரை எனக்குப் பெரிதும் பயன்பட்டது. என்னைப்போல் நம் நாட்டில் ஆயிரம் ஆயிரம் கர்ப்பிணிகள் இருப்பார்கள். அவர்களும்படித்துஅறிவுபெறட்டும் என்றுதான் கடிதத்தைப் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தேன். தவறிருந்தால் மன்னிக்கவும்' என்று எழுதுகிருய்.

அருமைத் தங்கையே! ஏன் இந்த மன்னிப்பும் வேண்டுகோளும் சமாதானமும்? நானும் உன் அண்ணு அல்லவா? உன்னைப் போலவே பெண்கள் எல்லோரையும் அன்பு அக்கா, தங்கையாகவே நான் கருதுகிறேன். ஆகையால் என் கடிதங்களை நீ வாசித்துத் திருத்தி அறிவுரைகளை மட்டும் பத்திரிகைக்கு அனுப்பலாம். எங்கள் வீட்டு விஷயங்கள் மற்றவர்களுக்கு வேண்டாம். எங்கள் சுக துக்கங்களை அவர்கள் அறிந்து நலனடைய நாம் என்ன நேரு குடும்பத்தினரா?

உனது பள்ளிக்கூடத் தோழி சேதாவும் மூன்றுமாதக் கர்ப்பிணி என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். நீங்கள் இருவருமே அழகான குழந்தைகளைப்பெறப்போகிறீர்கள்.

## மசக்கை

சேதா காலையில் எழுந்தவுடன் வயிற்றுப் புரட்டலாலும் குமட்டலாலும் அவதிப்படுகிருள் என்று எழுதியிருக்கிருய். மசக்கை கர்ப்பிணிகளுக்கு முதல் மூன்று மாதங்களில் ஏற்படும் ஒரு வகையான உணர்ச்சி. மசக்கை வியாதியல்ல. கருப்பையிலே உருவாகும் குழந்தையை நல்ல முறையில் இடம் கொடுத்து வளர்க்கத் தாயின் உடலில் ஏற்படும் மாறுதல்களின் விளைவுதான் அது. இந்த உண்மையை நீ உன் சினேகிதிக்குத் தெரிவித்து அவளை உற்சாகப்படுத்த வேண்டும். இந்த உணர்ச்சி எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. அப்படி மசக்கை வராது தப்பிக்கொண்டவர்களில் நீயும் ஒருத்தி. சிலர் காரில் அல்லது ரயிலில் பிரயாணம் செய்யும் போது வாந்தி எடுப்பார்கள். அந்த வகையைச் சேர்ந்தது தான் கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் வயிற்றுப் புரட்டல். அது தாஞகவே மூன்ரும் அல்லது நான்காவது மாதங்களில் நின்றுவிடும்.

மசக்கையினுல் வருந்துபவர்கள் ஒரே சமயத்தில் அதிக அளவு உணவு உண்பதைத் தவிர்த்துப் பல தடவைகளில் சிறிதுஅளவு உண்ணவேண்டும். எண்ணெய் கலந்த பதார்த்தங்களையும் கடினமான உணவையும் தவிர்க்க வேண்டும். பழமும் பழரசமும் மிக நல்லது. காலையில் படுக்கையை விட்டு எழுவதற்கு முன்னர் பழரசத்துடன் உலர்ந்த பிஸ்கோத்து அருந்தும்படியாகச் சேதாவின் குடும்ப டாக்டர் கூறியது மிகவும் சரி. அப்படிச் செய்வது குமட்டலைத் தடுக்க நல்ல வழியாகும்.

உண்மையில் காலையிலே சிறிதுநேரம் அதிகமாகப் படுத்திருப்பதாலும் குமட்டலைத் தடுக்கலாம். குறும்புப் பெண் சேதா ஏன் அதிகாலையிலேயே எழுந்து அவதிப்பட வேண்டும்? வானெலியில் இன்னிசையைக் கேட்டுக் கொண்டோ, காலைப் பத்திரிகையைப் படித்துக் கொண்டோ காலை ஏழரை மணி மட்டுமாவது இந்த நாட்களில் படுத்திருக்கச் சொல்லவும்.

## வேறு சில அறிகுறிகள்

மசக்கையைப் பற்றி நான் விபரமாக எழுதியதால், கர்ப்பிணிகள் முதல் மூன்று மாதங்களில் தெரிவிக்கக்கூடிய வேறு சில அறிகுறிகளையும் குறிப்பிட விரும்புகிறேன். கருப்பை வளரும்போது சிறு நீர்ப் பையை ஓரளவு அமுக்குகிறது. இதனுல் சிலருக்கு அடிக்கடி சிறுநீரைக் கழிக்க வேண்டியிருக்கும். அதேபோல் உணவு செரியாமல் இருப்பது, மலச்சிக்கல் முதலியவையும் தோன்றலாம்.

சில பெண்கள் கர்ப்பமுற்றதும் வாயில் எதையாவது போட்டு சதா மென்று கொண்டிருப்பார்கள். அடைக்காய் தொடக்கம் அடுப்புக்கரிவரை எதுவானுலும் வாயில் போட்டுக் கொள்வார்கள். குழந்தைக்குத் தாயாகப் போகிறவர்களுக்கு ஏன் இந்தக் குழந்தைப் புத்தியோ தெரியவில்லை!

குழந்தை துடிப்பதைப் பற்றி நீ உன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாய். ஆம், கர்ப்பப்பைக்குள் குழந்தை துடிப்பதையும், புரளுவதையும், உதைப்பதையும் நாலாம் ஐந்தாம் மாதங்களிலிருந்து தாய் உணரக்கூடும். ஆரம்பத்தில் இந்தத் துடிப்பு மெல்லியதாக இருக்கும். பின்பு நாட்கள் செல்லக் குழந்தை துடிப்பது அதிகமாகவும் கடுமையாகவும் இருக்கக்கூடும். சில குழந்தைகள் அவ்வளவு புரளுவதில்லை என்பதையும் நீங்கள் தெரிந்திருக்க வேண்டும். உன் ராசா உனக்கு இப்போது உதைய ஆரம்பித்திருப்பான். அதனுலென்ன? செல்வ மகன் தன் சிறு கால்களால் உதைவதால் உனக்கு ஒரு தீங்கும் வரமாட்டாது. இன்பமாக இருக்கும் என்று சொல்லேன்!

குழந்தை பிறக்கும் காலத்தைக் கணக்கிடும் விதத்தை அறிய நீ ஆவலாக இருப்பாய். பெண்கள் அனைவரும் இதை அறிந்திருக்க வேண்டும். அடுத்த கடிதத்தில் இதை விபரமாக எழுதுகிறேன்.

நீயும் சேதாவும் உங்கள் குடும்ப டாக்டரிடம் ஒழுங்காகப்போய் உங்களைக் காட்டிக் கொள்கிறீர்கள் அல்லவா?

உனது அன்புள்ள,

நந்தி அண்ணு.


**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சிரீசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**நைகரகாபமேற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீலியோ நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**

K. S. செல்லையா, ஞேயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
பயனீயர்ஸ் டிரேடிங் சென்றர், நெல்லியடி, கரவெட்டி.
எஸ். எம். ஏ. அலியுத்தும்மா லெப்பே, 153, மெயின் வீதி, கல்முனை.
எல். ஈ. எப். அமரசேகரா 10, வல்லாஞ, பாணந்துறை.
என். சச்சிதானந்தன், திருக்கேதீஸ்வரம், மன்ஞர்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
வி. வடிவேலு அன்ட் பிறதர்ஸ், 25-27, பழையகடைத்தெரு, நுவரேலியா.
கே. செல்லத்துரை, முதலியார் வளவு, சுன்னுகம். மூலமாயும் வேண்டிக்கொள்க.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

**கொழும்பு 8.**


# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | |
| | இவ்வார கிரகநிலை | | புத. |
| | | | சூரி வெ. |
| சனி | வியா. | | செ. ரா. |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(29-8-59 — 4-9-59)

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) இவ்வாரத்தில் பணவருவாய் அதிகரித்தாலும் வேறு சில சிரமங்கள் ஏற்படும். இனத்தவருடன் வெறுப்புத்தோன்றும். பிரயாணங்களை மேற்கொள்வீர். மாதாவழியினர் மூலம் நன்மைகள் வந்தடையும்.

**இடபம்:** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) அன்னியர் நட்பு அதிகரிக்கும். மறைமுகமாகச் சிலர் இகழக்கூடும். பணத்துறையில் சில சிக்கல்கள் தோன்றும்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) உத்தியோகத்துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் மூலம் அதிக இலாபமும் புகழும் கிடைக்கும். வாரத்தின் கடைசிநாளைக் கவனமாகக் கழிக்கவும். நண்பரும் இனத்தவர்களும் அதிக உதவியாயிருப்பர்.

**கடகம்;** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. நீர் முயன்றுழைப்பதோடு புதுப் பொறுப்புக்களையும் மேற்கொள்வீர். எதிர்பாராத முறையில் சில கருமங்கள் ஏற்படக்கூடும். பொதுமக்களின் உதவியால் ஆரம்பிக்கும் கருமங்கள் நிறைவேறும்.

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) பழைய முதலீடுகள் மூலம் அதிக இலாபமடைவீர். எதிர்பாராத காரியங்கள் இவ்வார இறுதியில் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் பணவருவாய் அதிகரிக்கும். புத்திரர்களால் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்) இனத்தவர்களுடன் வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். குடும்பச் சூழலில் அமைதி குலையும். பெண்பாலார் நட்பு அதிகரிக்கும். நிலை மாற்றங்களும் வருமானங்களும் உண்டாகும். சத்துருக்களின் செயல்கள் ஈற்றில் நன்மையே தரும்.

**துலாம்:** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) குடும்பத்தில் புண்ணிய கருமங்கள் நிறைவேறும். உமது கருமங்களில் மாறுதல்கள் ஏற்படும். பெரியோர்களின் தொடர்புகள்உண்டாகும். அனேக நாட்களாக மனதிற் குடி கொண்டிருந்த எண்ணம் இவ் வாரத்தில் நிறை வேறும்.

**விருச்சிகம்;** (விசாகம் 4-ம் பாதம். அனுஷம், கேட்டை) புதிய கருமங்களில் மனம் சதா நாடிக் கொண்டே இருக்கும். வாகனங்களினுல் கஷ்டங்கள் ஏற்படக் கூடும். அன்னியர் நட்பு அதிகரிக்கும். மனதுக்குச் சற்றே கவலை தரும் சம்பவங்கள் நிகழக் கூடும்.

**தனுசு:** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) வியாபாரத்துறையில் இது நல்ல வாரம். நடந்த கருமங்களினுல் சில தொல்லைகள் ஏற்படும். புதுச் சினேகித விருத்திகள் வார இறுதியில் உண்டாகும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பேரில் நிறைவேறும்.

**மகரம்:** (உத்தராடம் 2,3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம், 1, 2-ம் பாதம்) பிரயாண அலைச்சல் சிரமத்தை உண்டாக்கும். நடந்த கருமங்களினுல் தொல்லைகள் தோன்றி மறையும். வருவாய் அதிகரிக்கும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பகுதி

செல்வக் குழந்தைகளே!

வணக்கம். உங்களில் அநேகர் எழுதி அனுப்பும் கதைகளும் கட்டுரைகளும் மிக நீண்டுவிடுகின்றன. அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் இரண்டு பக்கங்களுக்குக் குறையாமலும் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்புமாறு அனைவரையும் வேண்டுகிறேன். இப்போது விடுமுறை காலமானபடியால் கட்டுரைகள் கதைகள் எழுதப் போதிய அளவுநேரம் இருக்கும் என நம்புகின்றேன்.

சின்னமாமா

## ஆளத் தெரியாத அரசன்!

தேன்மலர்

முன்னொரு காலத்தில் முதலாம் ஸ்ரீ சங்கபோ என்ற அரசன் ஒருவன் இலங்கையை ஆண்டு வந்தான். இயற்கை அன்னையின் அருள் நிறைந்த பார்வையால் செழித்துக் கொழித்த இலங்கைத் தீவை நல்ல முறையில் ஆளத் தெரியாத மன்னர்களுள் இந்த அரசனும் ஒருவன். தானாகச் சிந்திக்காமல் பிறர் போதனைகளை சரியோ பிழையோ அப்படியே கடைப்பிடித்த இந்த அரசனின் ஆட்சியில் ஊழல்கள் மிகவும் மலிந்திருந்தன.

நாட்டிலே வழிப்பறியும் கொள்ளையும் பெருமளவில் மக்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கியிருந்த காலத்தில் அரசனின் முதன் மந்திரி இதைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதின் அவசியத்தை அரசனுக்கு உணர்த்தினர்.

“பிறகு பார்க்கலாம்” என்று மன்னர் கூறிவிட்டார்.

இந்தச் சமயத்தில், நாட்டில் ஒரு விதக் கொடிய நோய் பரவி மக்களின் கண்களைக் குருடாக்கிக் கொண்டிருந்தது. சுகாதார முறைகளை அனுஷ்டிக்கச் சொல்லத் தெரியாத மன்னன் பௌத்த மதத்தில் சொல்லப்பட்டுள்ள முறைகளைக் கையாளவும் முடியாமல் திணறினன். கடவுளுக்குப் பலி கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இக் கொடிய நோய் தீரும் என்று பலர் கூற மனிதப் பலியை விரும்பாத மன்னன் மந்திரியிடம் யோசனை கேட்டான்.

“நாட்டில் குற்றங்கள் மலிந்திருக்கின்றன. குற்றவாளிகளைக் கொண்டு வந்து பலி இட்டு விடலாமே!...” என்று ஆலோசனை கூறினர் மந்திரி. குற்றவாளிகள் அப்படியாவது குறைந்து விடுவார்கள் என்று எண்ணினர் மந்திரி.

ஆனல் இது பிடிக்கவில்லை மன்னருக்கு. இருந்த போதிலும் மந்திரியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர் போல் காட்டிக் கொண்டு அந்த முறையைக் கையாள விரும்பினர்.

குற்றவாளிகள் ஒவ்வொருவராக மன்னன் முன் கொண்டு வரப்பட்டனர். மன்னரின் விசாரணையின் போது குற்றம் செய்தது உண்மை என்று நிரூபிக்கப் பட்டதும், உடனே சிறைச் சாலையில் அடைக்கப் பட்டனர். இப்படி எல்லோரையும் அடைத்து விட்டு, மன்னர் ஒரு புதிய உத்தரவைப் போட்டார்.

“நாட்டில் இறக்கும் அத்தனை மனிதர்களின் பிரேதங்களையும் ஆட்சியாளர்களிடம் தந்து விட வேண்டும்” என்று அந்த உத்தரவு கூற, மக்கள் இறந்தவர்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்கள்.

பலியை விரும்பாத அரசனும் இந்தப் பிணங்களை எரித்துக் காட்டிவிட்டுக்குற்றவாளிகளைத் தப்ப விட்டுக் கொண்டிருந்தான். மக்களும் மற்றவர்களும் எரிக்கும் பிணங்கள் குற்றவாளிகளுடையவை என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். இனி நாட்டில் குற்றங்கள், கொலைகள் யாவும் சம்பவிக்கா என்று எண்ணிச் சந்தோஷமடைந்தார்கள்.

ஆனல் மன்னரால் தப்புவிக்கப் பட்ட குற்றவாளிகள் மீண்டும் நாட்டில் குழப்பம் செய்து வந்தனர். அவைகள் பெருகவும், குற்றவாளிகளை நகர்க்காவலர்கள் பிடித்து மன்னரிடம் கொண்டு போவதும் பின்னர் அவர்கள் தப்பி வருவதும் நடைமுறையாயின.

இது மந்திரிக்குத் தெரிய வந்தது. இந்த நிலையில் போய்க்கொண்டிருந்தால் நாட்டில் அமைதியிருக்காது என்று எண்ணி ஆட்சியைத் தானே எடுக்க முயற்சித்தார். இதற்காக அரசனைக் கொலை செய்யத்திட்டம் போட்டுக் கொண்டிருந்தார். இதை அறிந்த மன்னன் அன்று இரவே சில காவலாளிகளுடன் ஒரு காட்டிற்குச் சென்றுவிட்டான். மந்திரி அரசனனன்.

இந்த மூட அரசனின் தலையை ஒரு விவசாயி வெட்டிக்கொண்டு வந்து புதிய அரசனிடம் பரிசையும் பெற்றுச் சென்றான் என்று இலங்கைச் சாத்திரம் கூறுகின்றது. பதவி கிடைத்தால் மட்டும் போதாது. அதை ஆளவும் தெரிய வேண்டும் என்பது தெளிவாகிறதல்லவா?

## புதிய மருமக்கள்

பெயர்களும், பதிவு எண்ணும்.

428. ப. துர்க்காதேவி,
23/2, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

429. எஸ். ஏ. சுப்பிரமணியன்,
புதிய கபீரியல் கல்லூரி,
எட்டியாங்தோட்டை.

430. மு. சாகீர்,
145, அம்புகவெ வீதி,
கம்பளை.

431. யோ. யதீனி,
‘கொன்வென்ற்’
நம்பைகுளம்,
வவனியா.

432. செ. நவரத்தினம்,
மே/பா நா. ச. செல்லையா,
துன்னலை வடக்கு,
கரவெட்டி.

433. கா. இந்திரா,
சங்கானை மேற்கு,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

434. மதிவாணன்,
மாச்சம்பாளையம்,
சுந்தராபுரம் அஞ்சல்,
போத்தனூர் (வழி),
கோயம்புத்தூர்.

435. சு. சுவாமிநாதன்,
13, ஓடை ஒழுங்கை,
வண்ணர்பண்ணை,
யாழ்ப்பாணம்.

436. து. நித்தியானந்தன்,
ஓ. ஏ. பங்களா,
மன்னர்.

437. வ. சிவகாமி,
42, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

438. க. உஷா,
64, பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

439. பா. க. நந்தன்,
64, பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

440. க. ஜீவா,
64, பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

## கெட்டிக்காரன் புளுகு

எம். ஏ. காதர் (காற்று)
(பதிவு எண் 402)

தையற்காரச் சந்தன் மிகவும் ஞாபக மறதியுள்ளவன். அவனுக்குப் பிறரைக் குறை கூறுவதே வேலை. தன் திறமையைப் பற்றிப் பெருமையாகப் பேசுவதில் அவனுக்கு நிகர் அவனே எனலாம்.

அன்று வழக்கம் போல் அவன் கடையில் தனது நண்பர்களுடன் தன் திறமையைப் பற்றிப் பெரிதாகப் பேசிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் ஒருவர் வந்து “இந்தச் சட்டை கிழிந்து போய் விட்டது சற்றுத் தைத்துத்தா” என்று கூறி அவனிடம் தமது சட்டையைக் கொடுத்து விட்டுச் சென்றார்.

சந்தனுக்கு இச் செயல், வெறும் வாய்க்கு அவல் கிடைத்தது போல் இருந்தது. அவன் அந்தச் சட்டையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு “இக் காலத்தில் தையல் வேலையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களும் தைக்கத் தொடங்கி விட்டார்கள். ஒழுங்காக உடுப்புகளை யாருக்குமே தைக்கத் தெரிவதில்லை. என்னைப்போல் அழகாக, ‘ஸ்டைலா’கத் தைக்க எவரால் முடியும். இந்தச் சட்டையையும் ஒருவன் தைத்தானே. அருமையான துணியை அநியாயமாக்கி விட்டான்” இப்படிச் சட்டையைத் தைத்தவனைப் பற்றித் தெரியாது, ஏளனமாகப் பேசிக் கொண்டே தைத்து முடித்தான்.

சட்டை தைக்கக் கொடுத்தவர் வந்தார். உடனே சந்தன் அவரிடம் “யார் இதை இவ்வளவு கேவலமாகத தைத்தது” என்று கேட்டான். அவர் சந்தனை ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு, நீர் தைத்துத் தந்த சட்டையை நீரே மறந்து விட்டீரோ?” என்று கேட்டார். தையற்காரச் சந்தனின் தலை அவமானத்தால் குனிந்தது.

## கப்பல்

(அழகனூர் பதிவு எண். 127)

நாடு விட்டு நாடுகள்
நாடி யோடி நாளுமே
ஓடு கின்ற கப்பலே
உயர்ந்த நல்ல கப்பலாம்!

வீசி வீசி எங்குமே
விதந்து வீசும் அலையிலே
கூசி டாது ஓடிடும்
கப்பல் நல்ல கப்பலாம்!

ஆட்கள் தம்மை ஏற்றியே
அண்டை நாட்டைச் சேர்த்திட
ஊட்ட முள்ள கப்பலே
உயர்வு கொண்ட கப்பலாம்!

பொருளை ஏற்றிச் சென்றுபின்
பொருளைக் கொண்டு கடலிலே
விரைந்து மீண்டு வந்திடும்
விந்தை செய்யும் கப்பலாம்.

## அறிவுச்சுடர்

### கேள்விகள்

1. ஆயிரம் ஏரி கொண்ட நாடு எது?

2. ஹரிஜனங்களுக்குள்ளே தோன்றி அவர்களைச் சீர்திருத்திய சமீபகாலத்து மகான் யார்?

3. கணவன் ஒரு பிறவிக் குருடு என்று அறிந்ததும் தன்னையும் குருடாக்கிய பெண் எந்தக் கதையில் வருகிறாள்?

4. டில்லிச் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்த பெண்மணி யார்?

5. இஸ்லாமியரின் சிறந்த நூலெது?

(விடை 15ஆம் பக்கம் பார்க்க)

## ‘ஈழநாடு’ சிறுவர் பகுதி

★ **ஈழநாடு சிறுவர்** பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 5-9-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

★ **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**விண்ணப்பப் பத்திரம்**

**(29-8-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதி**யில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.

விலாசம்...

கையொப்பம்

பெற்றார் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

# இலங்கையின் பத்தாண்டுத் திட்டம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

## முதலீடு

பத்துவருடகால எல்லைக்குள் பொருளாதார விருத்திக்கென 1,360 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுமென்றும், அதன்மூலம் கிட்டத்தட்ட 1,390,000 மக்களுக்கு வேலையளிக்க முடியுமென்றும் திட்டக்கர்த்தாக்கள் கருதுகின்றனர். 1,360 கோடிப்பணத்தில் கிட்டத்தட்ட மூன்றிலிரு பகுதியை அரசாங்கம் முதலீடு செய்யுமென்றும் மிகுதியைத் தனிப்பட்டவர்கள் முதலீடு செய்வார்களென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. அரசாங்கம் முதலீடு செய்வதற்கு பணம் எவ்வெவ்வகையிற் கிடைக்குமெனத் திட்டம் கூறுகின்றது. பணந்திரட்டும் வகையில் திட்டத்தினர்எதிர் பார்த்த வெற்றி கிடைக்குமென்பது மிகச் சந்தேகமே—அவர்கள் பணந்திரட்டக் கூறும் வழிவகைகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை புலனுகும்.

## அரசினர் எண்ணம்

தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் சிலவற்றைக் குறைத்தும், அரிசி மான்யத்தைக் குறைத்தும், பல மிகைப்படியான வரிகளை விதித்தும், மக்களின் கொள்முதல் பொருள்களின் விலைகளைக் கூட்டியும், சமூக சேவைகளில் செலவிடப்படும் பணத்தொகையைக் குறைத்தும் புகையிரத சேவை, பஸ் சேவை முதலியனவற்றிற்குக் கொடுக்கும் மான்யங்களை ஒழித்தும், அரசாங்கம் எதிர் பார்த்த பணத்தைத் திரட்ட எண்ணியிருக்கிறது. சமதர்மம் நிலவும் சமுதாயத்தை உண்டு பண்ண எத்தனிக்கும் எந்த அரசாங்கமும் முதலீடு செய்யும் பொறுப்பில் கூடிய பங்கை எடுத்துக் கொள்வது அவசியமெனினும் அதைச் செயலாற்றவும் சிறந்த வழிவகைகள் கடைப்பிடிக்க வேண்டும். இந்தியா, மூன்ருவது ஐந்துவருடத் திட்டத்தில் அரசாங்கப் பொறுப்பிலேயே பெருமளவு முதலீடு செய்யும் பொறுப்பை விட எண்ணியுள்ளது. இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில்கூட இந்திய அரசாங்கம் முதலீடு செய்யும் பொறுப்பில் கணிசமான அளவை ஏற்றுக்கொண்டு அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

இலங்கை அரசாங்கம் எதிர் பார்த்த வழிகள் மூலம் பணம் திரட்டுவது சுலபமானதல்ல.

பொருளாதாரநிலையைஉயர்த்தாமல் தொழிலாளர் சம்பளத்தைக்குறைப்பது அசாத்தியம். அரிசியின்உள்நாட்டு விளைவைப்பெருக்காமல் அரிசி மான்யத்தைக் குறைத்தலும் கடினம். பல மிகைப்படியான வரிகளை விதித்தல் சிறிதளவு சாத்தியமாயினும் வரிவிதித்தலுக்கும் ஒரு எல்லையுண்டாதலால் அதிகப்படியான வருவாயை இதிலிருந்து பெறமுடியாது. கொள்முதல் பொருள்களின் விலையை, பிறநாட்டுப் பொருள்களின் விலையைத் தடைசெய்து ஓரளவு கூட்டலாம். ஆனல் மிதமிஞ்சிக் கூட்ட மக்கள் ஒப்புக்கொள்ளார்கள்.மக்கள் தொகை அசுர வேகத்தில் வளர்ந்துசெல்லும் இலங்கையில்சமூகசேவைகளில் பணத்தைக் குறைப்பதென்பது பகற்கனவேயாகும். பொருளாதாரநிலை உயர்ந்தால்தான் இதுவும் சாத்தியமாகும். இன்று பஸ் சேவை, புகையிரதசேவை முதலியன சென்றுகொண்டிருக்கும் நிலையை நோக்கும் பொழுது அரசாங்க மான்யம் கூட்டப்படவேண்டி வருமே தவிர குறைக்கப்படமுடியுமென நினைப்பது பிழையான கருத்தாகவே முடியும். தேசியமயமாக்கப்பட்ட சேவைகளினல் அரசாங்கத்திற்குப்பெரும் நட்டமென மந்திரிமார்களே ஒப்புக்கொள்ளும்போது மான்யத்தை குறைப்பதாயிருந்தால், மேற்குறிப்பிட்ட சேவைகளின் தரம் குறையும். அதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

## ஒத்துழைப்பு அவசியம்

இன்றுள்ள நிலையில் கூடிய கட்டணம் விதிப்பதும் முடியாத செயலாகும். எனவே அரசாங்கம் பணம் திரட்டக் கூறியிருக்கும் வழிவகைகள் மிகவும் சந்தேகத்துக்கிடமானவையாகவே இருக்கின்றன. இலங்கை மக்கள் தமது நாடு பொருளாதாரத்துறையில் வளர வேண்டுமென விரும்பிச் சில தியாகங்களைச் செய்தால் அரசாங்கம் மேற் கூறிய பணம் திரட்டும் வகைகளில் சிலவற்றை வெற்றிகரமாகச் செயலாற்றலாம். ஆனல் இன்றைய நிலையில் நாம் இதை எதிர் பார்க்கலாமா? மக்கள் அரசாங்கத்தில் தளராத நம்பிக்கை வைத்திருந்தால் சில சமயம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கலாம். ஆனல், இன்றுள்ள நிலையை, நோக்கும்பொழுது அதாவது இடையரு வேலை நிறுத்தங்கள் முதலியன நடந்து கொண்டிருக்கும் இன்றைய நிலையை நோக்கும்பொழுது, அரசாங்கத்தின்மீது மக்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறதென கூறமுடியாது. எனவே, பத்தாண்டுத் திட்டம் இப்போதுள்ள அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட வேண்டுமாயின் மக்களின் ஒத்துழைப்பை அது பெறுவது மிகவும் வேண்டற்பாலதொன்ருகும்.

## தனியார் மூலதனம்

முதலீடு செய்யும் பணத்தில் மூன்றிலொருபகுதி தனியார் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. திட்டத்தின் ஆக்கத்திற்கு வெளிநாட்டார் உதவியும் வரவேற்கப்பட்டுள்ளது. தனியார் மூலதனத்திற்கு (வெளிநாட்டார் மூலதனம் உட்பட) தக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டால் தான் இது சாத்தியமாகும். பிறநாட்டு மூலதனம் நாட்டை விட்டோடிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் தக்க வாக்குறுதிகளைக் கொடுத்து அவற்றை அரசாங்கம் தடை செய்வதாகத் தெரியவில்லை. எதிர்காலம் எப்படி இருக்குமோ எனப் பயந்து உள்நாட்டில் வாழும் பணம்படைத்த தனியாரும் முதலீடு செய்ய வருகின்ருர்களில்லை. எனவே அரசாங்கம் தக்க வாக்குறுதிகளை அளித்துத் தனியார் மூலதனத்தை நாட்டின் அபிவிருத்திக்கு உபயோகப்படுத்த வேண்டும். இல்லையேல் திட்டத்தார் எதிர்பார்த்த தனியார் பணவருவாய் கடைசிவரையும் கிடைக்காது.

உலக நாடுகளெங்கும் குறுகிய காலத்திட்டங்கள் வகுத்து செயலாற்றப்படும் இக் காலத்தில் இலங்கையில் நீண்டகாலத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பது விசித்திரமாக இருப்பினும், அரசாங்கத்துடன் மக்கள் தியாக உணர்ச்சியுடன் ஒத்துழைத்தால் திட்டம் ஓரளவு வெற்றியீட்டலாம். மக்கள் தியாக உணர்ச்சி படைத்தவர்களாக மாறினல்தான் திட்டத்திற்குரிய பணம் பெறுதல், அதைச் செயற்படுத்தல் முதலியனயாவும் சாத்திய மாகுமே தவிர மக்கள் இன்றிருக்கும் நிலையில், பத்தாண்டுத் திட்டக் கர்த்தாக்கள் எதிர்பார்க்கும் வெற்றி கிடைப்பது மிக அரிது.

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

சேட்
காற்சட்டை
ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

# சென்னையில் அகில இந்திய எழுத்தாளர் மாநாடு

இவ் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி தொடக்கம் 8 நாட்கள் சென்னையில் அகில இந்திய எழுத்தாளர் மாநாடு நடைபெறும். இதை நடாத்துவதற்கான வரவேற்புக்குழு ஒன்று அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் தலைமையிற் சமீபத்தில் அமைக்கப் பெற்றது. டக்டர் ஏ. லஷ்மண சுவாமி முதலியார், ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல், ஸ்ரீ வி. எஸ. தியாகராஜா முதலியார், திரு. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் (ஆசிரியர், சுதேசமித்திரன்) திரு. எஸ். ஏ. கோவிந்தராஜன் (துணை ஆசிரியர் 'ஹிந்து') ஆகியோர் வரவேற்புக்குழுவின் உபதலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வரவேற்புக் குழுவில் பிரபல எழுத்தாளர்களும், அறிஞர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திரு. கொடுமுடி இராஜகோபாலன், திரு. சோ. சிவபாதசுந்தரம், க. நா. சுப்பிரமணியம் ஆகியோர் செயலாளராகப் பணியாற்றுகின்ருர்கள். வரவேற்புக்குழு பிரதிநிதிக்கட்டணம் ரூபா 10-, நன்கொடை உறுப்பினர் கட்டணம் ஆகியவற்றை, திரு. கண. முத்தையா பொருளாளர்,66 பெரிய தெரு, திருவல்லிக் கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இம் மாநாடு மிகப் பெரிய அளவில் நடைபெறுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

# நமது நூல் நிலையம்

**உளநூலும் கல்வியும்: ஆசிரியர்:** த. இராமநாதபிள்ளை: **வெளியீடு:** ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்; **விலை** ரூ. 3. 50.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இளம் உள்ளங்களோடு பழகுபவர்கள். அவற்றை விரும்பத்தகுந்த வழிகளிலே திருப்பிவிட்டு வளர்ச்சி காண முயல்பவர்கள் ஆசிரியர்கள் என்பது மிகையாகாது. எனவே உள்ளங்களின் இயல்பையும் அமைப்பையும் ஆழ்ந்து கற்று அவ்வுணர்வு நிரம்பப் பெற்றவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இந்த வகையிலே

**மதிப்புரை விரும்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.**

'உளநூலும் கல்வியும்' என்ற நூல் மிகவும் பயன் மிக்கதொன்று என்பதில் ஐயமில்லை. இருபத்தேழு அதிகாரங்களாக வகுக்கப் பட்டுள்ள இந்த நூலிலே உள்ளத்தின் இயல்புகளையும், அவைகளைப் பற்றி அறிந்தவற்றைக் கல்வி கற்பித்தலின்போது எவ்வாறு பயன்படுத்தலாமென்பதையும் ஓரளவு விரிவாகக் கூறுகிருர் நூலாசிரியர். மொன்ரிசூரியம்மையார் முறை, ஏர்பாட் முறை, டோல்ற்றன் முறை என்பன பற்றி தனித்தனியாக விளக்கியிருப்பதோடு தொழிற்கல்வி, முதியோர் கல்வி என்பன பற்றியும் சிறப்பாக எழுதியிருக்கிருர் ஆசிரியர். ஆசிரியர்களுக்கும், ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கும் பயன்படும் நல்ல புத்தகம் இது.

**இலங்கைச் சரித்திரம்** 1500—1948: ஜி. ஸி. ஈ. வகுப்புக்குரியது. **ஆசிரியர்:** மு. இளையதம்பி,பி. ஏ.**வெளியீடு:** ஸ்ரீலங்கா அச்சகம், 234, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்; **விலை** ரூ.4.

நான்கு நூற்ருண்டுகளுக்கு மேலாக அங்கியரின் ஆட்சியிலிருந்து வந்த இலங்கை 1948-ம் ஆண்டு சுதந்திர நாடாகியது. இந்நாட்டில் முறையே போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் பிரித்தானியரும் ஆட்சி செலுத்தி வந்தனர். இவர்களின் ஆட்சிக் காலம் கி. பி. 1500 தொடக்கம் 1948 வரை நிலவியது. இக் கால எல்லைக்குள் அடங்கிய சரித்திர நிகழ்ச்சிகளை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் ஆசிரியர் மு. இளையதம்பி விரிவாக எழுதியுள்ளார். நீண்ட காலமாகச் சரித்திரப் பாடங்களைப் பயிற்றி வருவதால் ஆசிரியர் பெற்றுள்ள அனுபவமும், இயல்பாகவே அவருக்குள்ள தமிழ் அறிவும் இந்நூலைத் தெளிவாக எழுதுவதற்குப் பேருதவியாக இருந்துள்ளன.

பிரித்தானியர் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சமுதாய மாற்றங்கள், அரசியல் சீர்திருத்தங்கள், இலங்கை சுதந்திரம் பெற்ற வரலாறு, சுதந்திர இலங்கை என்பன இந்நூலில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. நூல் அழகாக வெளியிடப்பட்டுள்ளது.

**நன்ஞள் அன்பளிப்பு:- ஆசிரியர்** வி. எஸ். கிருஷ்ண ஸ்வாமி; **வெளியீடு:** தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, தியாகராய நகர், சென்னை 17; **விலை:** ரூ. 2.

திருமணம் போன்ற மங்கள வைபவங்களின்போது அன்பர்களுக்கு நூல்களையும் அன்பளிப்பாக வழங்குவது இன்று வழக்கமாகிவிட்டது. வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புகள் இந்நூல்களில் இருத்தல் பெரிதும் வரவேற்கத்தக்கது. இந்நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூலில், பிரார்த்தனையின் சிறப்பு, உடல் நலன், குடும்பம், குடும்பக் கட்டுப்பாடு, வரவும் செலவும், நல்வாழ்வுக்குரிய வழிகள், வாழ்வில் இலட்சியம், மன உறுதியும் மகிழ்ச்சியும் போன்று பயனுள்ள பல விஷயங்கள் இடம் பெற்றுள்ளன.

நல் வாழ்வுக்குரிய வழிகளைப் பற்றி ஆசிரியர் கூறியிருப்பதில் ஒரு பகுதி வருமாறு: எந்த வேலையில் இருந்தாலும் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். பொதுமக்களுக்கு நலம் பயக்கும் ஆசிரியர், மருத்துவர் போன்ற வேலைகளில் சம்பளத்தை விடச் சிறந்தது சமூக சேவையே. சம்பளத்தால் உயர்ந்தவர்களை விட அவர்கள் உலகத்தின் மதிப்பில் உயர்ந்தவர்கள். ஆகவே சம்பளத்தைப் பார்க்காமல் எந்த வேலையையும் உற்சாகத்துடன் செய்யப் பழகவேண்டும்.

இந்நூல் உயர்ந்த தாளில் விளக்கப் படங்களுடன் கண்கவர் வனப்புடன் வெளியிடப்பட்டுள்ளது.

**மத்தியதீபம்:** ஆண்டு மலர்: **ஆசிரியர்:** சி. க. செல்வரத்தினம்; **வெளியீடு:** யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி இ. எ. சங்கம், யாழ்ப்பாணம்.

ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் உள்ள இளம் எழுத்தாளர்களை ஊக்கிவளர்க்கும் நோக்கத்துடன் தோன்றியுள்ள 'மத்தியதீபம்' ஓராண்டுக் காலத்துக்குள் பல நல்ல காரியங்களைச் செய்துள்ளது. ஆனல், 'மலரில்' பெரிய எழுத்தாளர்கள் பலரின் அரிய படைப்புக்களும் இடம்பெற்றிருப்பதைப் பார்க்கும்போது இளம் எழுத்தாளர்களின் பரந்த நோக்கத்தைப் பாராட்டாது இருக்க முடியவில்லை. "மத்தியதீபம் பிற பத்திரிகைகளைப் போலன்றி, மாணவர்களாலேயே, மாணவர்களின் நிர்வாகத்திலேயேநடைபெறும் பத்திரிகை" என அதன் மேற்பார்வையாளர் திரு. வே. க. நடராசா குறிப்பிட்டிருக்கிருர். எனவே மத்திய தீபத்தில் வெளியாகும் கட்டுரைகளும் கூடியமட்டில் மாணவர்களால் மாணவர்களுக்கென எழுதப்படுவதே வரவேற்கத் தக்கது. மலர் புகைப்படங்களுடன் சிறப்பாக வெளியாகியுள்ளது. மத்திய கல்லூரி இளம் எழுத்தாளர்களின் இச் சீரிய முயற்சியைப் பாராட்டுகின்ருேம்.

—கே. எஸ்

அருள்வழி

# என்ன பாவம் செய்தவனுயினும் கடைத்தேற வழியுண்டு

## கருணையுள்ள ஆண்டவனை நாம் நேரிற் காண்பதெப்படி?

சென்ற செவ்வாய்க்கிழமை கிருஷ்ண ஜயந்தி. கபடமற்ற அர்ச்சுனனுக்கு கண்ணன் தேர்ச் சாரதியாக அமர்ந்து, கீதை உபதேசித்து, பாரதப் போரிலே வெற்றி ஈட்டித் தந்தவன்.

வாழ்க்கையாகிற போரில் ஈடுபட்டுள்ள நாமும், ஆண்டவனை நம்மனத்திலே இருத்தி, அவனையே நம் வாழ்க்கைத் தேரோட்டும் சாரதியாகக் கொண்டு, அவனிடம் நம்மை ஒப்புவித்துவீட்டால், அவன் நம் எல்லாப்பொறுப்புகளையும் ஏற்று நடத்துவான் என்பதே **பகவத்கீதை** கூறும் செய்தியாகும்.

அந்த பகவத் கீதையைப்பற்றி, **ஆசாரிய வினேபாபாவே** வெளியிட்டுள்ள **கீதைப்பேருரை** களிலிருந்து, கருணையுள்ள ஆண்டவனைக் காணும் விதம் பற்றிய ஒரு பகுதியை இங்கு வெளியிடுகின்ருேம்.

நம்முன் உள்ள ஆண்டவனின் முதல் உருவம் நம் தாயே. "மாத்ருதேவோ பவ" என்று வேதம் கூறுகிறது. பிறந்தவுடனே தாயைத்தவிர குழந்தைக்குத் தென்படுவது வேறு யார்? அன்பின் உருவத்தில் ஆண்டவனே அங்கு நின்று கொண்டிருக்கின்ருன்.

அனைத்திலும் உயர்ந்த ஆண்டவன் குழந்தையின் முன் தாயின் உருவிலேயே வருகின்ருன். தாய் வழிபாடு என்பது அன்புருவாக நம்முன் நிற்கும் ஆண்டவனின் வழிபாடே.

தாய் என்பவள் ஒரு நிமித்தமே. ஆண்டவன் அவனிடத்தில் தன் அன்பை, ஆராமையைப் பொழிந்து அவளை ஆட்டிவைக்கின்ருன். பாவம், அவள் உள்ளத்தில் இவ்வளவு வாஞ்சையும் பாசமும் ஏன் தோன்றுகின்றனவென்றே புரியவில்லை. தன் முதுமையில் பயன்படுவானென்று கணக்கிட்டா அவள் குழந்தையைப் பராமரிக்கிருள்? இல்லவே இல்லை. அவள் அந்தக் குழந்தையைப் பத்துமாதம் சுமந்து பெற்ருள். அவனைப் பெறும் வேதனையை அவள் பட்டிருக்கிருள். அந்த வேதனைகள் அந்தக் குழந்தையின் விஷயத்தில் அவளுக்குப் பித்தமுண்டாக்கிவிட்டன. அந்த வேதனைகளே அவனை அன்புக்குரியவளாக்கிவிட்டன. அவளால் அன்பு செலுத்தாது இருக்கவே முடியாது. அவளுக்கு வேறு வழியே இல்லை. அந்தத் தாய் எல்லையற்ற சேவையே உருவானவள். ஆண்டவனுக்குச் செய்யும் தலைசிறந்த வழிபாடு ஒன்று உண்டென்ருல் அது அன்னையின் வழிபாடே.

### 'அம்மா' வில் ஆண்டவன்

ஆண்டவனை "அம்மா" என்றே அழை. "அம்மை" என்பதைவிட உயர்ந்த சொல் எது? "அம்மா" என்பது, முதலில் தோன்றும் தூலமான எழுத்துக்கள். அவற்றில் ஆண்டவனைக் காணக் கற்பாய். பிறகு தந்தை, குரு ஆகியோரிடமும் காண். குரு கல்வி அளிக்கிருர். மிருகங்களாக இருந்த நம்மை அவர் மனிதராக்கினர். அவர் செய்துள்ள உபகாரத்தை என்னென்பது? முதலில் அம்மை, பிறகு அப்பன், பிறகு ஆசான். அதன் பிறகு கருணைமிக்க பெரியோர்கள், மகான்கள். மிகவும் தூல உருவில் நம் முன்னுள்ள இந்த ஆண்டவனை முதலில் பார். இங்கே உனக்கு ஆண்டவன் காணப்படவில்லை எனில் வேறு எங்கு தான் காணப்படுவான்?

### குழந்தைகளிடமும்

அம்மை, அப்பன், ஆசான், மகான்கள் ஆகிய இவர்களிடத்தில் ஆண்டவனைப்பார். அதேவகையில் சிறு குழந்தைகளிடமும் நாம் ஆண்டவனைக் காணக்கூடுமாளுல் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்? துருவன், பிரகலாதன், நசிகேதன், ஸனகன், ஸனந்தனன், ஸனத்குமாரன், ஞானசம்பந்தர் இவர்கள் எல்லாரும் குழந்தைகள் தாமே! சுகதேவரும் சங்கராச்சாரியாரும் சிறு பிராயத்திலேயே வைராக்கியம் பெற்றுவிட்டனர். ஞானதேவரும் அப்படித்தான். இவர்கள் அனைவருமே பால்மணம் மாருத பிள்ளைகள். ஆனல் இவர்களிடம் ஆண்டவன் தூய உருவில் தோன்றிய வகையில் வேறு எங்கும் தோன்றவில்லை.

இயேசுநாதர், குழந்தைகளைப் பெரிதும் விரும்பிவந்தார். ஒரு சமயம் அவரது சீடர்கள் அவரிடம், "நீங்கள் எப்போதும் பரலோகம், பரம்பொருளின் லோகம் என்று பேசுகிறீர்களே! அந்த லோகத்துக்கு யார்தான் போக முடியும்?" என்று கேட்டனர். அருகிலேயே ஒரு குழந்தைஇருந்தது. இயேசுநாதர் அக்குழந்தையை எடுத்து மேசைமீது நிறுத்தி, "இக்குழந்தையைப் போன்றவர்களே அங்கேபோகஇயலும்" என்ருர். இயேசுநாதர் கூறியது முற்றிலும் உண்மை.

ராமதாஸ் சுவாமிகள் ஒரு சமயம் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தார். இதைக்கண்ட முதியோர்களுக்கு வியப்பாக இருந்தது. "நீங்கள் இப்படி ஆரம்பித்துவிட்டீர்களே!" என்று ஒருவர் அவாவிக்கேட்டார். அதற்கு அவர்,

"தம்மைச்சிறியோரென்ருேர்,
பெரியோரானுர்,
பெரியோரென்றவர் பெருந்
திருடரானுர்."

என்ருர்.

வயது ஏறஏற மனிதனுடைய மனத்தில் கொம்புகள் முளைக்கின்றன - வாசனைகள் வளருகின்றன. அப்பொழுது ஆண்டவன் நினைப்பு எப்படிவரும்? சிறு குழந்தைகளின் மனம் பூச்சற்றது. அவர்களறிவு நிர்மலமானது. குழந்தைக்கு நாம் "பொய்சொல்லாதே" என்று போதிக்கிருேம். அவன் "பொய் என்ருல் என்ன?" என்று கேட்கிருன். "உள்ளதை உள்ளபடியே சொல்ல வேண்டும்." என்ற தத்துவத்தைக் கூறுகிருேம். உள்ளதை உள்ளவாறே உரைப்பதைத் தவிர வேறுவகையில் உரைக்கும் முறையும் உண்டா? என்று எண்ணிக்கொண்டு அவன் குழம்புகிருன்.

இல்லாததொன்றைச் சொல்லுவதெப்படி? குழந்தைக்கு வியப்புத்தோன்றுகிறது. குழந்தைகள் யார்? தூய பரம்பொருளின் உருவங்களே. பெரியவர்கள் அவர்களுக்குத் தவருகப் போதிக்கிருர்கள். அது எவ்வாருயினும், தாய் தந்தை, குரு, மகான்கள், குழந்தைகள் ஆகிய இவர்களிடம் நாம் பரம்பொருளைக் காண வேண்டும். இயலாவிடில், வேறு எந்த உருவில்தான் பார்க்க இயலும்! இதிலும் சிறந்த அவர் உடலின் உருவம் வேறில்லை. ஆண்டவனின் இந்த எளிய, இனிய உருவங்களை முதலில் அறிந்துகொள். இவர்களிடம் ஆண்டவன் தெளிவான கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கிருன்.

முதலில் இந்தப்பாடத்தைக் கற்றுப்பின்னர் படிப்படியாக, சூரியன், சந்திரன், காற்று, புலி, பாம்பு, விரோதிகள் முதலிய எல்லாரிடமும் ஆண்டவன் இருப்பதையும், அவனில்லாததெதுவுமே இல்லையென்பதையும் உணர்ந்துகொள். ஒவ்வொரு துளியிலும், ஒவ்வொரு அணுவிலும் அவனே இருக்கின்ருன். எறும்பு தொடங்கி, பிரமமாண்டம் ஈருக எங்கும் பரம்பொருளே விரவி இருக்கிறது. எல்லோரையும் குறித்துக் கவலையுள்ள, கருணையுள்ள ஞானமூர்த்தியும், வாஞ்சையும், திறனும் புனிதமும் அழகுமுள்ள பரம்பொருள் நமக்கு நாற்புறமும் எங்குமே சூழ்ந்து நிற்கின்றது.


### கடையவனும் கடைத்தேறலாம்

கருணையுள்ள ஆண்டவனிடம், நாம் உண்மையில் மனம் கசிந்து சரணகதி அடைந்தோமாளுல், நாம் எவ்வளவு பாவம் செய்திருப்பினும் சரி கடையவனுயினும் சரி, அவன் கருணையினுல் கலந்து ஆண்டுகொள்வான். கடைத்தேற்றம் நிச்சயமாக உண்டு. "கடையவனேனைக் கருணையினுல் கலந்து ஆண்டுகொண்ட விடையவனே… " என்று பாடியுள்ளார் மணிவாசகப்பெருந்தகை.

"அபவித்ர, பவித்ரோவா,
சர்வாவஸ்தான் ததோபிவா,
யஸ்மரேத் புண்டரீ காக்ஷம்,
சவாஹ்ய அல்யந்தர சுசி
மானஸம், வாசிகம், பாவம்,
சர்மரை, ஸமுவார்ஜிதம்
ஸ்ரீராம ஸ்மரேணைய,
வியபோஹதி, நசம்சய"

என்பது வேத மந்திரம்.

(புனிதமற்றவனுயினும் சரி, புனிதனுயினும் சரி, எல்லா அவஸ்தைகளையும் பட்டவனுயினும் சரி, ஆண்டவனை உள்ளத்தால் யார் நினைந்து உருகுகின்ருனே அவன் புனிதமடைகின்ருன். முன்ளர் மனத்தால், வாயால், கர்மத்தால் எத்தகைய பாவங்கள் செய்தவனுயினும், அவன் ஆண்டவனை உள்ளத்தால் நினைத்தமாத்திரத்தில் அப் பாவமெல்லாம் தீர்ந்துவிடுகிறது. சந்தேகமே இல்லை.)



**டெலிவிஷன் மூலம் கல்வி**

அமெரிக்காவில் டெலிவிஷனைப் பொழுது போக்குக் கருவியாகவும், கல்வி போதிக்கும் ஆசானுகவும் உபயோகிக்கின்றனர். மேலேயுள்ள படத்தில், நியூயோர்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் இலக்கியப் பேச்சு ஒன்று நடாத்துகிருர்.

ஆசிரியருக்குக் கடிதம்

# இந்து ஆலய அற நிலையச் சட்டம் எந்தவகையிலும் ஏற்றதாயில்லை

இந்துக்களின் வாழ்க்கையில் முக்கியமான ஓர் அம்சமாக விளங்குவது அவர்களது சமயமே. இந்து சமயம், இந்துக் கலாச்சாரம் இந்துப் பண்பாடு ஆகியவற்றில் மிக முக்கிய இடத்தைப் பெறுவது இந்து ஆலயம். இந்து ஆலயங்கள், மடாலயங்கள் மற்றும் சமயரீதியான நிலையங்கள் முதலியவற்றைப் பாதுகாத்தல், நிர்வகித்தல் அவற்றின் வரவு செலவுத் திட்டத்தைக் கண்காணித்தல், இவை போன்றவை இந்து சமூகத்தின் முக்கிய கடமைகளாகும். அத்துடன் அவை இந்து சமய இலட்சியங்களுக்கும், தேவைகளுக்கும் பொருத்தமானவையாகவும் அமையும். ஒரு முக்கியமான பிரச்சினை இலங்கையில் இருந்து வருகிறது. இதற்குத் தகுந்த செயலை விரைவில் காண்பது அவசியமெனினும், முடிவு அவசரமானதாக இருக்கக் கூடாது.

அரசாங்கம் தயாரித்துள்ள இந்து ஆலய அற நிலையச் சட்டமானது அரசாங்கத்தின் தலையீட்டையும் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் சமய விஷயங்களில் புகுத்தப் பார்க்கின்றது. சமய நோக்கோடோ அல்லது உலகியல் நோக்கோடோ இச் சட்டத்தை அவதானித்தாலும் அதனை வரவேற்கக் கூடியதாயில்லை.

இப்பொழுது செய்ய வேண்டிய காரியமென்னவெனில், நாம் மேற்கூறிய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதேயாகும். இப்பொழுது இருக்கும் சட்டங்களை மாற்றி அமைப்பதாலும், இந்து ஆலயங்கள், மடாலயங்கள் முதலியவற்றின் மேற்பார்வைக்கான அரசாங்கக் கட்டுப்பாடில்லாத நிலையங்களை நிறுவுவதாலும் இதைச் சிறப்பாகச் சாதிக்கலாம். இலங்கையிலுள்ள இந்துக்களுக்கு முன் யோசனை, முயற்சி, பக்தி இவை இருந்தால் தமது புனித நிலையங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகைகளைத் தேடிக் கொள்வதில் அவர்களுக்குக் கஷ்டமிராது. இந்துக்களின் இந்த நன் முயற்சிக்கு மற்றச் சமயத்தவரிடமிருந்தும் ஆதரவு கிடைக்குமென நாம் திடமாக நம்புகின்ருேம்.

கொழும்பு.

**எஸ். சிவசுப்பிரமணியம்**


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.

சினிமா உலகம்

## 'பொலிஸார் உங்கள் நண்பர்'

### சென்னை அரசினரின் படம்

சென்னைப் பொலிஸ் பகுதியின் நூற்ருண்டு விழாவை விரைவில் வெகு விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது சென்னை அரசாங்கம். இவ்விழாவையொட்டி ஓர் செய்திப் படமும் வெளியிட அரசாங்கம் துரிதமாக ஈடுபட்டுள்ளது. இப்படத்தில் தமிழ்ச் சினிமா உலகில் ஜொலிக்கும் பிரபல நட்சத்திரங்கள் பலர் பங்குபற்றுகின்ருர்கள்.

இப்படத்தின் கதையைச் சென்னைப் பொலிஸ் பகுதியில் உதவிக் கொமிஷனராகக் கடமையாற்றும் திரு. பி. பரமகுரு எழுதியுள்ளார். வசனமும் அவர் பொறுப்பே. சிவாஜி கணேசன், டி. எஸ். பாலையா, சாரங்கபாணி, சந்திரபாபு, தங்கவேலு, பத்மினி, எம். என். ராஜம், தேவிகா முதலிய நடிக, நடிகைகள் இப்படத்தில் பாத்திரங்களேற்று நடிக்கின்றனர். படத்தை இயக்கும் பொறுப்பு கிருஷ்ணன்—பஞ்சு இவர்களின் கைகளில் உள்ளது. இம்மாதம் 30-ஆம் திகதி இப்படம் வெளியிடப்படும் எனத் தெரிகிறது.

தங்கள் கடமையைச் செய்யும் பொழுது, பொலிஸ்காரருக்கு ஏற்படும் தொந்தரவுகள் பற்றி விளக்குவதுடன், பொது மக்களின் ஒத்துழைப்பையும் நாடுவதுமே இப்படத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்தனை பிரபல நட்சத்திரங்கள் பங்கு பற்றுவதால் "பொலீஸ் காரர் உங்களுடைய நண்பராளுல்" அதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை!

## இந்திய – பாகிஸ்தான் கூட்டுறவுப் படம்

இங்கிலாந்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து ஓர் படம் தயாரிக்கின்றனர். இப்படத்தின் நோக்கம் என்னவெனில், இங்கிலாந்துச் சமூக வாழ்வில் எவ்விதம் வெற்றிகரமாக இந்தியரும், பாகிஸ்தானியரும் பங்கு பற்றலாமென்பதை விளக்குவதேயாகும். இப்படத்தின் ஆரம்பப் படப்பிடிப்பு யோர்க்சையர் என்னும் இடத்தில் எடுக்கப்பட்டது. மூன்று மாதங்கள் இடைவிடாத முயற்சிக்கும், கிரமமான ஒத்திகைகளுக்கும் பின்னரே இப்படம் இப்பொழுது ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இப்படம் முடிவடைய இன்னும் சில மாதங்கள் செல்லுமெனவும், முடிவடைந்ததும் பிரிட்டனிலுள்ள பல பாகங்களிலும் காண்பிக்கப்படு மெனவும் தெரிகிறது. இங்கிலாந்திலாவது இந்தியாவும், பாகிஸ்தானும் ஒற்றுமையாக இருப்பது வரவேற்கத்தக்கவொரு விஷயமாகும்.

## அமெரிக்காவில் ருஷியப் படங்கள்!

அமெரிக்க—ருஷிய கலாச்சார ஒப்பந்தத்தின் கீழ் விரைவில் அமெரிக்காவில் ருஷியப் படங்கள் திரையிடப்படுமாம். இதே போல், ருஷியாவில் அமெரிக்கப் படங்கள் திரையிடுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

## "அப்துல்லா" வில் ஜெமினி கணேசன்


இந்து—முஸ்லிம் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட படம் தான் "அப்துல்லா". இப்படத்தில் ஜெமினி கணேசன் நடிக்கிருர். இவருடன் சாவித்திரி, சந்திரபாபு முதலியோரும் நடிக்கின்றனர். இப்படத்தின் கதையை எழுதியவர் யார் தெரியுமா? சந்திரபாபு! ஏ. பீம்சிங் படத்தை இயக்குகிருர்.

## கட்சிப் பிரசாரமா ?

சினிமாத் தயாரிப்பாளரும், பிரபல வசன கர்த்தாவுமாகிய கண்ணதாசன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசாரப் படம் ஒன்றை வெளியிட உத்தேசித்துள்ளாராம். இப்படம் சினிமா உலகில் ஒரு விவாதத்தைக் கிளப்பி விட்டுள்ளது. கலையில் அரசியல் நுழைவது சரியா, பிழையா என்பதே விவாதத்தின் அடிப்படைக் கேள்வி. சிவாஜி கணேசன் கலையில் அரசியலுக்கு இடமளிப்பதை விரும்பவில்லையாம். ஆனல், எம். ஜி. ராமச்சந்திரன், தங்கவேலு போன்ற வேறு சிலர் இதற்கு எதிரான அபிப்பிராயம் உள்ளவர்களாக இருக்கின்றனராம்.

## திருக்கோணமலையில் சினிமா இரசிகர் சங்கம்

திருக்கோணமலையில் ஒரு சினிமா இரசிகர் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இச் சங்கத்து உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- போஷகர்: திரு. கோணேசபிள்ளை. தலைவர்: திரு. து. சண்முகநாதன். உப தலைவர்: திரு. அ. ஆநந்தராஜா, திரு. இ. பாலேந்திரா பொதுச் செயலாளர்: திரு. த. சமரசிங்கம். உப செயலாளர்: திரு. சி. தம்பிராஜா. பொருளாளர்: திரு. இ. திருச்செல்வம்.



சுவஸ்தி ஸ்ரீ யின் "ராஜ சேவை"யில் என். டி. ராமராவும் சௌகார் ஜானகியும்.


# சென்னையில் பிரபல திருமணம்

இம்மாதம் 7, 8ஆம் திகதிகளில் சென்னை கோடம்பாக்கம் கோலாகலமாக இருந்தது. ஆயிரமாயிரம் கார்கள் போவதும் வருவதுமாயிருந்தன. காரணம், விஜயா—வாஹினி ஸ்டுடியோ அதிபர் திரு. பி. நாகிரெட்டியின் செல்வன் திரு. வேணுகோபாலுக்கும் விஜயா புரொடக்ஷன்ஸ் டைரக்டர்களில் ஒருவரான திரு. பி. ரமணுரெட்டியின் செல்வி பி. பத்மாவதிக்கும் நடைபெற்ற சிறப்பான திருமணம்தான்.

வேற்பில் இவ்வளவு பேர்களும், மாஜி கவர்னர்—ஜெனரல் இராஜாஜி, சென்னை கவர்னர் திரு.விஷ்ணுராம் மேதி, அவரது வாழ்க்கைத்துணைவி மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர்.

முதல் நாளும் இரண்டாவது நாளும் சுமார் 30,000 பேருக்கு விருந்து நடைபெற்றது. இருபது ஏக்கர் கொண்ட "விஜயா பூங்கா," தீபாலங்காரத்தால் தேஜோமயமாக விளங்கிற்று. பற்பல கலைத்திறன் நிரம்பிய கர்த்தா திரு. நாகிரெட்டியை கலியுக 'மயன்' என்றனர் பலர். இதுவரை சென்னையில் இவ்வளவு பெரிய அளவில், குறைவின்றி நடைபெற்ற திருமணம் இதுவே என்றனர் யாவரும்.

மணமக்களுக்கு இலங்கை குணரத்னம் தம்பதிகள், சிலோன் எண்டர்டெயின்ட்மென்ட்ஸ் திரு. ஜெபீர் காதர், ராஜ்ஸ்ரீ கம்பெனி திரு. தாராசந்த், தூரகிழக்கு பிலிம் டிரிஸ்ட்ரிபியூட்டர்ஸைச் சேர்ந்த




புதுமணத் தம்பதிகள் செல்வன் வேணுகோபாலையும், செல்வி பத்மாவதியையும் இராஜாஜி நேரில் வந்து வாழ்த்தினுர்.

7ஆம் தேதி இரவில் திருமணம், 8ஆம் தேதி மாலையில் வரவேற்பு. ஆந்திர முதல் மந்திரி திரு.சஞ்சீவி ரெட்டி, மத்திய மந்திரி திரு. கோபாலரெட்டி, ராஜா சேர் முத்தையா செட்டியார், தமிழரசுக்கழக தலைவர் திரு. மா. பொ. சி. மற்றும் எல்லா சினிமா நட்சத்திரங்களும் டைரக்டர்களும், அந்நிய ஸ்தானிகப் பிரமுகர்களும், தொழிலதிபர்களும் திருமணத்திற்கு வருகைதந்தனர். வரவேவு வாசல்கள், மாபெரும் பந்தல்கள் அவற்றில் காரைக்குடி நிபுணர்களின் வேலைப்பாடுகள், வந்தவர்கள் அனைவரும் தங்க வசதிகள், நடனத்திற்கென்று தனிமேடை நிர்மாணம், யாவரும் நெருக்கமின்றி அமர அருமையான ஏற்பாடுகள், குழந்தைகள் குதூகலமாக விளையாட ஊஞ்சல்கள் முதலியவையெல்லாம் வந்தவர்களைப் பிரமிக்கச்செய்தன. சிருஷ்டி திரு. ஏ. எம். அஹம்மது, மற்றும் சாவித்திரி கணேசன், சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர். கம்பெனி, தேவர் பிலிம்ஸ் தேவர், எம். என். ராஜம், ஹாஸ்யநடிகர் தங்கவேலு, குலதெய்வம் ராஜகோபால், சௌகார் ஜானகி, ராகினி, ஏ. கருணநிதி மற்றும் பல நடிகர் நடிகைகளும் தொழிலதிபர்களும் பல்வேறு பரிசுகள் வழங்கி, மணமக்களை வாழ்த்தினர்.

## திருக்கோணமலை விளையாட்டுச் சங்கம்

திருக்கோணமலை விளையாட்டுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம், செப்டம்பர் மாதம் 13-ம் தேதி நடைபெறும். இப்பொதுக் கூட்டம் ஜனவரி மாதம் நடைபெறவேண்டியிருந்தும் நடைபெருமையைக் குறித்தும் ஐந்து விளையாட்டுச் சங்கங்கள் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துள்ளன.



சாம்ராச்சிய மோட்டரிங் மாநாட்டில் இந்திய சினிமா நடிகை

அண்மையில் லண்டனில் சாம்ராச்சிய நாடுகளின் மோட்டரிங் மாநாட்டிற்கு, இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக வட இந்திய சினிமா நடிகை மொஞ்சு தேய் சென்றிருந்தார். மேலே, அவர் 'ஸ்கூட்டர்' ஒன்றில் இருந்து கொண்டு 'பிரிட்டன் ரேயல் ஓட்டோ மொபைல் கிளப்'பைச் சேர்ந்த ஒரு ஆங்கிலப் பெண்மணியுடன் சம்பாஷிப்பதைக் காணலாம்.

## திருவள்ளுவர் பாடசாலை மாணவர் சங்க விழா

கொழும்பு, மருதானை திருவள்ளுவர் பாடசாலை மாணவர் தேர்ச்சிச் சங்க விழா சென்ற 17-8-59 மாலை பாடசாலை மண்டபத்தில் திரு. பி. எஸ். சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. எஸ். சங்கர் அனைவரையும் வரவேற்ருர். அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கக் கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. க. ந. இராசரத்தினம், திரு. தெ. க. பா. விவேகானந்தா, திரு. எஸ். டி. கே. தென்னரசு ஆகியோர் வள்ளுவர் நெறி பற்றி விரிவுரைகள் ஆற்றினர். மாணவர்களால் "சாக்கிரட்டீஸ்" நாடகம் நடிக்கப் பட்டது.

# எட்டியாந்தோட்டையில்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

த்துத் துப்புரவு செய்ததாயும் சொன்ன நாயர், குறைபாடுகள் ஏதும் இருப்பினும் "நாமெல்லாம் ஒரு குடும்பத்தினரென்ற பெரும் நோக்கில் எங்களை மன்னிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று விநயத்துடன் கூறினதும், அங்கு கண்ட சிற்சில குறைகளையும் உடன் மறந்துவிட்டேன்.

எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா வந்து இம் மாநாட்டில் பேசியது மாநாட்டுக்கே ஒரு மதிப்பளித்தது. அரசாங்கத்தின் வகுப்புவாதப் போக்கை அவர் கண்டித்து, இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை, பிரஜா உரிமை வழங்க வேண்டும் என்றும் அப்போதுதான் நாடு முன்னேற முடியுமென்றும் அவர் கரகோஷங்களுக்கிடையே சொன்னர்.

* * *

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸில் சென்ற மார்ச்சுடன் முடிவான வருடத்திலே மொத்தம் 2 லட்சத்து 38 ஆயிரத்து 174 மெம்பர்கள் இருந்ததாக காரியதரிசியின் அறிக்கை தெரிவித்தது. வதுளையில் 60 ஆயிரம், அப்புத்தளையில் 15 ஆயிரம், ஹட்டனில் 20 ஆயிரம், தலவாக்கொல்லையில் 30 ஆயிரம், எட்டியாந்தோட்டையில் 25,900, பலாங்கொடையில் 9795, கம்பளையில் 4300, இங்கிரியாவில் 5750, காவத்தையில் 5500, மாத்தளையில் 4500, மத்துகமையில் 14 ஆயிரம்; நாவலப்பிட்டியில் 15,100, ரத்திபுரியில் 12,574, வவனியாவில் 500, வத்தகாமாவில் 5500, ராகலையில் 8600, கொழும்பில் 55.

### யாழ்ப்பாணத்துக்கு நன்றி

யாழ்ப்பாணக் கல்லூரிகளிலே தோட்டப் பகுதி மாணவருக்கு இரண்டு உபகாரச்சம்பளங்களைத்தங்கள் யூனியன் சென்ற வருடம் பெற்றுத் தந்ததாயும், இதற்காக அந்தக் கல்லூரிகளுக்கு தங்கள் மனப்பூர்வமான வாழ்த்தையும் நன்றியையும் தெரிவிப்பதாயும் காரியதரிசி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வதுளை, அப்புத்தளை, தலாவாக்கொல்லை, ஹற்றன் இப்பகுதிகளில் ஐ. தொ. காங்கிரஸை, கம்யூனிஸ்ட் யூனியனுக மாற்றி விட சிலர் முயன்றதாயும், அக் காரியாலயங்களை பொலிஸ் உதவி கொண்டு தாங்கள் மீண்டும் கைப்பற்றி விட்டதாயும், இப்படியாக வெளியேறிய சிலரால் இந்தக் காங்கிரஸுக்கு நஷ்டமில்லை என்றும் ஒரு காங்கிரஸ் தலைவர் கூறினர்.

தலைவர் அஸீஸ் தமது பிரசங்கத்தில் தொண்டமான் தலைமையிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் ஐ. தொ. கா. சமரசமடைவதற்கான அறிகுறிகள் அதிகம் காணப்படுவதாகத் தெரிவித்தார். இரு காங்கிரஸுகளுக்கும் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்ற விருப்பமும் ஆவலும் அங்கு பொதுவாகப் பலரிடமும் இருக்கக் கண்டேன். இரு காங்கிரஸ்களும் மீண்டும் ஒன்ருகி, வெற்றிப் பாதையில் செல்லும் நாள் நெருங்கி வருகிறதென்றே நம்புவோம்.

# நேரு - அயூப்கான்

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலிக தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

### உத்தர பிரதேச அரசியல் நெருக்கடி

உத்தர பிரதேச இராச்சியத்தில் மந்திரி சபைக்கு எதிராக எழுந்திருக்கும் நெருக்கடி நிலைமை பரிசீலனைசெய்து அறிக்கை சமர்ப்பிக்கும் வண்ணம் காங்கிரஸின் நிருவாகக்குழுவுக்கு மத்திய காங்கிரஸ்குழு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

### ஆச்சாரிய விநோபா பாவே

காஷ்மீர் இராச்சியத்தில் பாத யாத்திரை செய்துவந்த சர்வோதய இயக்கத்தலைவராகிய ஆச்சாரிய விநோபா பாவே ஜம்மு மாகாணத்தில் பிரவேசித்திருக்கிருர்.

### பூட்டான், சிக்கிம்

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் பூட்டான், சிக்கிம் ஆகிய அயல் நாடுகளின் சுதந்திரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் எந்த வெளிநாடாவது குறுக்கிட்டால் இந்தியா அந்நாடுகளுக்குப்போதிய பாதுகாப்பளிக்க முன்வரும் என்று பிரதமர் நேரு இராஜிய சபையில் சென்ற செவ்வாய்க்கிழமை கூறியிருக்கிருர்.


### வெள்ளப்பெருக்கு

பீஹார் இராச்சியத்தில் கங்கை, சொன் ஆகிய நதிகளில் பெருக்கெடுத்ததினுல் ஒன்றரை லட்சம் ஏக்கர் விளைநிலம் சேதமடைந்ததோடு 3 லட்சம் மக்கள் வசிக்கும் 400 கிராமங்களும் பாதிக்கப் பட்டுள்ளன. வெள்ளம் இப்போது வடியத் தொடங்கியிருக்கிறது.


## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**ராணி சென்றல் ஓடியன் ஜோதி லிபேர்ட்டி**

(யாழ்ப்பாணம்) (மருதானை) (கல்கிசை) (திருக்கோணமலை) (வதுளை)



ராஜசுலோசனு
எம். என். ராஜம்
டி. எஸ். பாலையா
மனேகர்
சி. எஸ். பாண்டியன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
வி. கே. ராமசாமி
இன்னும் பலர் நடிக்கும்

# புதுமைப் பெண்

சிந்தையைக் கிளறும் சிந்து பாடி அனைவரின் அகத்தையும் கொள்ளை கொள்கிறள் **புதுமைப் பெண்.**


# ஜனதிபதி ஐஸன்ஹோவரின் ஐரோப்பிய விஜயம்

## லாவொஸில் நிலைமை மோசமடைகிறது

அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹோவர் அடுத்தமாதம் ருஷிய பிரதமர் குருஷேவைத் தமது நாட்டில் வரவேற்று பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு முன்பு, பிரிட்டன், பிரான்சு, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகள் நிகழ்த்துவதற்கு இவ்வாரத்தில் ஐரோப்பிய விஜயத்தை ஆரம்பிக்கிருர். புதன்கிழமை (26-8-59) மாலை மேற்கு ஜேர்மனியின் தலைநகரான பொன் நகருக்கு வந்து சேர்ந்து வியாழக்கிழமை, பிரதமர் டாக்டர் கொன்ராட் அடினேருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்திவிட்டுவெள்ளிக்கிழமை லண்டன்மாநகருக்குச் செல்கின்ருர். அங்கு ஐந்து நாட்கள் தங்கிவிட்டு, பிரான்சின் தலைநகராகிய பாரிஸ் நகருக்குச் சென்று இரண்டு நாட்களுக்கு ஜனதிபதி டீ கோல், ஏனைய பிரெஞ்சு தலைவர்கள் ஆகியோருடன் ஆலோசனைகள் செய்துவிட்டு வாஷிங்டனுக்குத் திரும்புவார். திரு. ஐஸன்ஹோவரைச் சந்திப்பதற்குமுன் ஜனதிபதி டீ கோல், தமது அல்ஜீரிய சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொள்வார். மேற்கு வல்லரசுகளின் அங்கீகாரத்தைப் பெற்ற கருத்துக்களை சேகரித்து திரு. குருஷேவுக்குத் தெரிவிப்பதே ஐஸன்ஹோவரின் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தின் நோக்கமாகும்.

### குருஷேவின் அமெரிக்க சுற்றுப்பிரயாணம்

ருஷியப் பிரதமர் குருஷேவ் 15-9-59 இல் வாஷிங்டனுக்கு வந்து சேர்வார் என்றும் 27-ந் திகதிவரை சுற்றுப்பிரயாணம் செய்வார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நியூ யோர்க், சான்பிரான்சிஸ்கோ, லொஸ் அன்ஜல்ஸ், பிற்ஸ்பர்க் முதலிய நகரங்களுக்கும் விஜயம் செய்வார் என்றும் 19-9-59 இல் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொது மகாசபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார் என்றும் தெரியவருகிறது. திரும்பும்போது பாரிஸுக்கு விஜயம் செய்து, ஜனதிபதி ஜெனரல் டீ கோலைச் சந்திக்க வேண்டும் என பிரான்சு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிகிறது.

### மலாயாவில் முக்கூட்டுக் கட்சியின் வெற்றி

சென்ற 19-ந் திகதி சுதந்திர மலாயாவில் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் முன்னுள் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானைத் தலைவராகக் கொண்ட முக் கூட்டுக்கட்சிக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. மொத்தம் 104 அங்கத்தவர்களைக் கொண்ட சனப்பிரதிநிதிகள் சபைக்கு நடைபெற்ற தேர்தலில் முக்கூட்டுக் கட்சிக்கு 73 ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. ஒரு தொகுதியில் தேர்தல் பின்போடப் பட்டிருக்கிறது. ஏனைய கட்சிகளுக்குக்

## உலக நிலை

கிடைத்த ஸ்தானங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:- மலாய இஸ்லாமிய கட்சி 13; சோஷலிஸ முன்னணி 8; மக்கள் முற்போக்குக் கட்சி 4; மலாயாக் கட்சி 1; நெகாராக் கட்சி 1; சுயேச்சை அங்கத்தவர்கள் 3.

தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுள் 65 பேர் மலாய்க்காரர்; 30 பேர் சீனர்; இந்தியர் அறுவர்; **இலங்கையர் இருவர்.**

திரு. துங்கு அப்துல் ரஹ்மான் 21-8-59 இல் பிரதம மந்திரியாக மீண்டும் பதவி யேற்றிருக்கிருர்.

மலாயாவின் மன்னரும் பிரதம மந்திரியும் ஒக்டோபர் மாதத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்கள்.

### லாவொஸில் தொடர்ந்துபோர்

லாவொஸில் தொடர்ந்து போர் நடைபெறுகின்றது. பலமாகாணங்களில் புரட்சிக்காரர் புகுந்திருப்பதாகவும், தலைநகராகிய வியன்ரியனுக்கு 50 மைல் தூரத்திலுள்ள இடங்களுக்கு புரட்சிப்படைகள் வந்துவிட்டன என்றும் சில செய்திகள் வெளியாகியிருக்கின்றன. லாவொஸ் நிலைமைக்கு அமெரிக்காவின் குறுக்கீடுதான் காரணம் என்று ருஷியா சுமத்திய குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்து ருஷியாதான் புரட்சிக்காரர்களுக்கு உதவி புரிந்துவருவதாக குற்றஞ்சாட்டியிருக்கிறது.

லாவொஸ் மன்னர் சுகவீனம் காரணமாக இராச்சியத்தின் பொறுப்பை முடிக்குரிய இளவரசரிடம் ஒப்படைத்திருக்கின்ருர். லாவொஸ் அரசாங்கத்தின் விசேஷ தூதர் ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்ட்டுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி லாவொஸ் நெருக்கடியை சமாதான வழியில் தீர்ப்பதற்கு சில முறைகளைக் கையாள உடன்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியிருக்கின்றது. என்ன முறைகள் என்பது இதுவரை வெளியிடப்படவில்லை.

லாவொஸ் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்க அரசாங்கம் சிறு ஆயுதங்களும், பணமும் அனுப்பியுதவத் தீர்மானித்துள்ளது.

### திபேத்

திபேத்தில் புரட்சிக்கார ஜாதியினருக்கு எதிராக சீனப் படைகள் போர் தொடுத்திருப்பதால் இந்திய யாத்திரிகர்களை இவ்வருடத்தில் திபேத்துக்கு வரவேண்டாம் எனச் சீன அரசாங்கம் எச்சரித்திருப்பதாக பிரதமர் நேரு லோக் சபையில் கூறியிருக்கிருர். கிழக்கு திபேத்தில் தொடர்ந்து கலவரம் நடந்துவருவதாகவும், மொத்தம் 80,000 திபேத்தியர்கள் இதுவரை திபேத்தில் கொல்லப் பட்டிருப்பதாகவும், பஞ்சன்லாமா கைதானசெய்தி உண்மையாக இருக்கலாம் என்றும் தலாய் லாமா கூறியிருக்கிருர். திபேத்திலுள்ள இந்திய வியாபாரிகள் மீது வன்மையான கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்படுவதாக கலிம்பொங்கிற்கு செய்தி எட்டியிருக்கிறது.

# இவ்வாரம் எப்படி

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கும்பம்:** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் பாதம்) காத்திராத வகையில் ஏதோ ஓர் இலாபத்தை நீர் அடையக் கூடியதாயிருக்கும். உம்முடைய சிக்கல்களை நீக்குவதில் சிரமம் ஏற்படுமாகையாற் பெரியோரின் ஆலோசனைகளைப் பெறுவீர். பெரியோரின் கண்ணியமும் அதிகரிக்கும்.

**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) இவ் வாரத்தில் பல முக்கிய கருமங்களில் தலையிடுவீர். பெண்களின் சுற்றத்தவர்களால் மன நிம்மதி குறைந்தாலும் மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுக்குக் குறைவிராது.

### அறிவுச்சுடர் விடைகள்

1. பின்லாந்து.
2. நாராயண குரு.
3. மகா பாரதம்.
4. சுல்தாஞ ரஜியா.
5. சீருப் புராணம்.

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) றெக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி) நியூ இம்பீரியல் (மட்டக்களப்பு)

3-ந் திகதி வியாழன் முதல் வின்ஸர் - றீகல் (யாழ்ப்பாணம்)

சென்னையில் மூன்று தியேட்டர்களில் மூன்று மாதங்களாகத் தொடர்ந்து ஓடுகின்றான்!

இப்பொழுது இலங்கைத்தீவிலும் தனது வெற்றிக்கொடியைப் பறக்க விடுகின்றான்!

# வீரபாண்டிய கட்டபொம்மன்

( முழுநீள டெக்னிக்கலர் படம் )

நட்சத்திரங்கள்:

★ சிவாஜி கணேசன் — பத்மினி ★
★ ஜெமினி கணேசன் — ராகினி ★
★ ஜாவர் சீதாராம் — வரலெட்சுமி ★

தயாரிப்பாளர்: **பத்மினி பிக்ஸர்ஸ்**

ஸ்ருடியோ: **பரணி**

டைரக்ஷன்: **பி. ஆர். பந்துலு**

கதை வசனம்: **சக்தி கிருஷ்ணசாமி**

தமிழ்நாட்டுச் சரிதையில் தியாக புருடனை, சுதந்திர வீரனைத் திகழும் கட்டபொம்மனின் வாழ்க்கை வரலாற்றையும், சுதந்திர முழக்கத்தையும் திரையில் கண்டு மகிழுங்கள்!

---

## செப்டம்பர் 4-ந் திகதி வெள்ளிக்கிழமை முதல் குதூகல ஆரம்பம்!


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை)

ஆகிய தியேட்டர்களில்

பாலாஜி, தங்கவேலு, முத்துக்கிருஷ்ணன்,
சேதுபதி, சரோஜாதேவி, காமினி, முத்துலெட்சுமி,
குமுதினி, ராஜகாந்தம்

மற்றும் பலர் நடித்த

# மனமுள்ள மறுதாரம்




திரைக்கதை வசனம்:
**முரசொலி மாறன் M. A.**

★ மங்கையரின் வாழ்வில் நேரும் அதிர்ச்சிகளைச் சித்திரிக்கும் மகத்தான திரை ஓவியம்!

★ பெற்ற மகளைக் காப்பாற்ற தீயைத் துச்சமென மதித்து உயிர்நீத்த உத்தமியின் கதை!!

★ மனைவியை இழந்து மனமுடைந்த கணவன் மறுதாரம் செய்துகொண்டபின் நடந்தவற்றைச் சித்திரிக்கும் சிறந்த திரை விருந்து!!!

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி வெளியிடப்பெற்றது.